# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:16 வள்ளுவர் ஆண்டு 2032 தை 29 ஞாயிற்றுக்கிழமை (11-02-2001) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:76


# புலிகளைத் தடை செய்யாதீர்கள்!

# பத்துத் தமிழ்க் கட்சிகள் வலியுறுத்து

## பிரிட்டிஷ் பிரதமர் பிளேயரை வற்புறுத்திக் கூட்டாகத் தீர்மானம்

கொழும்பு,பெப்ரவரி11

**விடுதலைப் புலிகள் இயக்கத்தை பிரிட்டனில் தடைசெய்ய வேண்டாம் என்று பத்துத் தமிழ்க் கட்சிகள் பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளேயரைக் கூட்டாகக் கோரியுள்ளன.**

தமிழர் விடுதலைக் கூட்டணி, ரெலோ, அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ், ஈ.பி.ஆர்.எல்.எவ். (சுரேஷ் அணி), மலையக மக்கள் முன்னணி, எம்.எஸ்.செல்லச்சாமியின் இலங்கைத் தேசிய தொழிலாளர் காங்கிரஸ், மனோ கணேசனின் ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ், முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணி, அஸீஸ் ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ், தொழிலாளர்களின் தேசிய யூனியன் ஆகிய பத்துத் தமிழ்க் கட்சிகளே நேற்றுக் கொழும்பில் கூடி இது தொடர்பான தீர்மானம் ஒன்றை நிறைவேற்றி, அதனை பிரிட்டிஷ் பிரதமருக்கு அனுப்பி வைப்பது என முடிவு செய்தன.

"எங்களுடைய மக்களின் தேசிய அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யும் ஓர் அரசியல் தீர்வைக் காணும் நோக்

(14ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். அரச அதிகாரிகள் ஜனாதிபதியுடன் பேசுவர்

### செவ்வாயன்று சந்திப்பு

யாழ்ப்பாணம்,பெப்.11

யாழ்.மாவட்ட தற்போதைய நிலைவரம் தொடர்பாக ஜனாதிபதியுடன் யாழ்.மாவட்ட அரச அதிகாரிகள் குழு ஒன்று நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை சந்தித்துக் கலந்துரையாட இருக்கிறது.

மேலதிக அரச அதிபர் து.வைத்திலிங்கம் தலைமையில் செல்லும் இந்தக் குழுவில் சுகாதார சேவைகள் பிரதி மாகாணப்பணிப்பாளர் உமா சிவபாதசுந்தரம் மற்றும் பிரதேச செயலர்கள், செயலக அதிகாரிகள் இடம்பெற்றுள்ளனர்.

குடாநாட்டு மக்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள், அவர்களின் தேவைகள் தொடர்பாக இந்தக் கலந்துரையாடலில் ஆராயப்படும்.

தற்சமயம் கொழும்பில் தங்கியுள்ள யாழ்.அரச அதிபர் க.சண்முகநாதனும் இந்தக் குழுவில் இணைந்து கொள்வார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

(க-3)

### புரிந்துணர்வு உடன்பாட்டின் படி

## பொருளாதாரத் தடைகளை நீக்க ஜனாதிபதி இணக்கம் தெரிவிப்பு?

கொழும்பு,பெப்.11

அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கு அடிப்படையாக நோர்வே அரசால் முன்வைக்கப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையில் கூறப்பட்டிருக்கும் - தமிழ்ப்பகுதிகள் மீது விதிககப்பட்டுள்ள பொருளாதாரத் தடைகளை நீக்குதல் - என்ற ஏற்பாட்டுக்கு இணங்கியுள்ளதாகக் கூறப்படுகின்றது.

'கல்வ் நியூஸ்' என்ற செய்தி ஏஜென்ஸிக்கு ஜனாதிபதியின் நெருங்கிய ஆலோசகர் ஒருவர் வழங்கிய பேட்டியில் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

தமிழ்ப் பகுதிகளுக்கு பொருள்கள் மற்றும் மருந்துகளை எடுத்துச் செலவதற்கு விதிக்கப்பட்டுள்ள தடைகளை நீக்குவதற்கு ஜனாதிபதி இணங்கியுள்ளார்.

ஆனால் தடை நீக்கப்பட்ட பின்னர் எடுத்துச் செல்லப்படும் பொருள்கள் விடுதலைப் புலிகளின் களஞ்சியங்களைச் சென்றடையாமல் பொது மக்களைச் சென்று சேர்வதை உறுதிப்படுத்த வேண்டும்.

அதனைக் கண்காணிப்பதற்கென சர்வதேச கண்காணிப்பாளர் குழு ஒன்று நியமிக்கப்பட வேண்டும். இதனை ஜனாதிபதி நோர்வேப் பிரதிநிதியிடம் தெரிவித்துள்ளார்.

- இவ்வாறு அந்த உதவியாளர் தகவல் வெளியிட்டார்.

இதேவேளை -

1994ஆம் ஆண்டு இடம்பெற்ற சமாதானப் பேச்சுக்களின் போதும் கனடா, நோர்வே நாட்டுப் பிரதிநிதி

(14ஆம் பக்கம் பார்க்க)

## ஊரடங்கு வேளையில் நடமாடிய சமயம்

## படையினரின் சூட்டுக்கு காது கேளாத சிறுவன் பலி!

### புத்தூர் மேற்கில் வெள்ளியிரவு சம்பவம்

யாழ்ப்பாணம்,பெப்.11

புத்தூர் மேற்குப் பகுதியில் ஊரடங்கு வேளையில் படம் பார்த்துவிட்டு வீடு திரும்பிக்கொண்டிருந்த - காது கேளாத சிறுவன் ஒருவன் படையினரின் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானான்.

நேற்று முன்தினம் இரவு 11.30 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் புத்தூர் மேற்கு வளர்மதி வீதியைச் சேர்ந்த மகேந்திரன் சுபாஷ்கரன் (வயது 11) என்ற சிறுவனே உயிரிழந்தான்.

இது தொடர்பாக விசேட ஊடகத் தகவல் நிலையம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

புத்தூர் மேற்கு, பருத்தித்துறை வீதியில் கடமையில் இருந்த படை

(14ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்குப் பல்கலைக்கழகத்தின் மாணவர் குழு மீது விசாரணை

மட்டக்களப்பு,பெப்.11

விடுதலைப்புலிகள் அமைப்பைத் தடை செய்ய வேண்டாம் என பிரிட்டிஷ் அரசாங்கத்தைக் கோரும் வகையில் கையெழுத்து வேட்டையில் ஈடுபட்ட கிழக்குப் பல்கலைக் கழக மாணவர் குழு ஒன்று நேற்று படையினரின் தீவிர விசாரணைக்கு உட்படுத்தப்பட்டது.

வந்தாறுமூலையில் உள்ள கிழக்குப் பல்கலைக்கழக வாசலில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

சம்பந்தப்பட்ட மாணவர் குழுவை விசாரணைக்குட்படுத்திய படையினர் விடுதலைப் புலிகள் பயங்கரவாத அமைப்பு என்றும் -

அந்த அமைப்பைத் தடை செய்ய வேண்டாம் எனக் கோருவது தவறானது என்றும் -

தம்மிடம் கூறியதாக மாணவர்கள் சார்பில் தெரிவிக்கப்பட்டது.

(உ-7)

## களனிப் பல்கலை மாணவர் பொதுஅறை தீயினால் நாசம்

கொழும்பு,பெப்.11

திடீரெனப் பரவிய தீயினால் களனிப் பல்கலைக்கழக மாணவர் பொது அறை முற்றாக எரிந்து சாம்பராகியது.

நேற்று முன்தினம் நள்ளிரவு இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

மேற்படி சம்பவத்தை அடுத்து பல்கலைக்கழகம் காலவரையறையின்றி மூடப்படுவதாகவும் -

மாணவர்கள் எவரும் பல்கலைக்

(14ஆம் பக்கம் பார்க்க)

### பிந்தெனுவெவ படுகொலைகள்:

## கைதான 19 பொலீஸாரில் 4 பேர் வெள்ளியன்று விடுதலை

கொழும்பு,பெப்.11

பிந்தெனுவெவ தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த தமிழ்க் கைதிகள் 29 பேர் படுகொலை செய்யப்பட்டது தொடர்பாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட 19 பொலீஸாரில் நால்வர் நேற்று முன்தினம் பண்டாரவளை நீதிமன்றினால் விடுதலை செய்யப்பட்டனர்.

படுகொலைகளுடன் மேற்படி நான்கு பொலீஸாரையும் சம்பந்தப்படுத்த போதிய ஆதாரங்கள் இல்லையெனத் தெரிவிக்கப்பட்டதை அடுத்து நீதிவான் அவர்களை விடுதலை செய்தார்.

இதேவேளை -

பிந்தெனுவெவ படுகொலைகள் தொடர்பாக பக்கச்சார்பற்ற விசாரணைகள் நடத்துவதற்கு ஆணைக் குழு நியமிக்கப்படும் என்று அரசாங்கம் உறுதியளித்திருந்த போதிலும் இதுவரை அது தொடர்பாக நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## வான் தாக்குதலில் நால்வர் காயம்

வவுனியா,பெப்.11

இராணுவக் கட்டுப்பாடற்ற இரணைமடு, திருமுருகண்டிப் பகுதிகளில் நேற்று முன்தினம் அதிகாலை நடத்தப்பட்ட விமானத் தாக்குதல்களில் 4 பொதுமக்கள் காயமடைந்தனர் என வன்னியில் இருந்து வவுனியாவுக்குக் கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

(உ-7-164)

### வெளிநாட்டிலிருந்து வருவோர்

## வன்னி, யாழ். செல்வதற்கு அனுமதி பெற்றுத் தர உறுதி

### மகேஸ்வரன் எம்.பி. தகவல்

கொழும்பு,பெப்.11

வெளிநாடுகளில் வாழும் - யாழ்ப்பாணம் மற்றும் இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப் பகுதியைச் சேர்ந்தவர்கள் தமது சொந்த இடங்களுக்குச் செல்ல விரும்பின் - பாதுகாப்பு அமைச்சின் அனுமதி பெறுவதில் சிக்கல்களை எதிர்நோக்கினால் - அவர்களைத் தன்னுடன் தொடர்பு கொள்ளுமாறு ஐ.தே.கட்சியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தி.மகேஸ்வரன் அறிவித்துள்ளார்.

பாதுகாப்பு அனுமதி பெறத் தேவையான கடவுச்சீட்டின் பிரதி தற்போதைய முகவரி, சென்று தங்குமிட முகவரி போன்ற விவரங்களை தனது பக்ஸ் இலக்கம் (01-347210) மூலம் அறிவித்தால் அனுமதியைப் பெறுவதற்குரிய ஏற்பாடுகளைத் தான்

(14ஆம் பக்கம் பார்க்க)

## உள்ளூராட்சி மன்றங்களுக்கு நிதி அரைவாசியால் குறைப்பு

### மாகாண சபை திடீர் முடிவு

கொழும்பு,பெப்.11

உள்ளூராட்சி மன்றங்களுக்கு வடக்கு கிழக்கு மாகாண சபையால் வழங்கப்படும் - பிரமாண அடிப்படையிலான - மூலதன நிதி இந்த வருடம் அரைவாசியாகக் குறைக்கப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் இந்தத்திட்டத்தின் கீழ் மாநகர சபைகளுக்கு 20 லட்சம் ரூபாவும் நகர சபைகள் மற்றும் பிரதேச சபைகளுக்கு 10 லட்சம் ரூபாவும் வழங்கப்பட்டு வந்தது.

ஆனால் இந்த வருடம் மாநகர சபைகளுக்கு 10 லட்சம் ரூபாவும்

(14ஆம் பக்கம் பார்க்க)

# சைவக்குருமார் பயிற்சிக் கல்லூரி

அரசடிப்பிள்ளையார் கோயிலடி,
நாயன்மார்கட்டு.

சிவாச்சாரியர்களுக்குரிய
**பயிற்சி வகுப்புக்கள் ஆரம்பம்**
நாளை (12.02.2001) திங்கட்கிழமை
மாலை 3.00 மணி

குறிப்பு:- கல்லூரி வளர்ச்சி தொடர்பாக கலந்துரையாட வேண்டியுள்ளதால் சபையின் அனைத்து உறுப்பினர்களையும் தவறாது சமுகம் அளிக்கும் வண்ணம் கேட்டுக் கொள்கின்றோம்.

*செயலாளர்,*
அகில இலங்கை சைவக்குருமார்
அர்ச்சகர் சபை.

*தலைமைச் செயலகம்,*
*நாயன்மார்கட்டு.*
(84046)

# ஓராண்டு நினைவஞ்சலி



பிறப்பு 1973 - 06 - 08
இறப்பு 2000 - 02 - 11

## சிறில் யோர்னஸ் (பாப்பா)

(பாடுமீன் விளையாட்டு வீரன்)

அன்பின் தெய்வமாய்
ஆசையுடன் எமைக்காத்து
இன்ப வாழ்வு தந்த
அப்பாவே! விண்ணுலகம் சென்றாயோ?
எம் வாழ்வு சிறப்புற இறைவனை வேண்டிடுவாய்!

உங்கள் பிரிவால் வாடும்
மனைவி, பிள்ளைகள்,
உற்றார், உறவினர்கள், நண்பர்கள்.

*18A, பீச் றோட்,*
*யாழ்ப்பாணம்.*
(84036)

# நினைவில் என்றும் நீங்காத முதலாம் ஆண்டு நினைவலைகள்



## அமரர் கந்தையா குணசேகரம்

(குணம்)

மலர்வு 14-07-1953
உதிர்வு 24-01-2000

திதி:11.02.2001

*அன்பான அப்பா!*
*ஆயிரம் ஆண்டுகள் ஆனாலும்*
*அழியா நினைவோடு நித்தம்*
*ஆறுதல் இன்றித் தவிக்கின்றோம் - அப்பா!*
ஆத்மா சாந்தியடைய விநாயகரை வேண்டி நிற்கின்றோம்.

மனைவி, தாய், பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரன் (கிஷாந்).

*163,A.V.றோட்,*
*அரியாலை,*
*யாழ்ப்பாணம்.*
(84016)


# புலமைப் பரிசில் - 2001

26 ஆவது பரீட்சையில்
அதிகூடிய புள்ளி பெற்றோர்

- க.கபீர்த்தனா - 182
  சுன்னாகம் நாகேஸ்வரி வித்.
- உ.நிவேதிகா - 172
- T.S.பகீரதி - 160
  யாழ்ப்பாணக் கல்லூரி.
- கு.லஜீந்தன் - 157
  யா. இ. ஆ. பா.
- பொ.முருகேந்திரா - 156
- யோ.பிரவீனா - 156
  கொக்குவில் இ. ஆ. பா.

அடுத்த பரீட்சை இன்று
நடைபெறும்.

BOND - பார்டினர்
(84041)

# அறிவொளி-NALLUR

ELECTRONICS
திரு.ஸ்பெல்மன்
MON,FRI - 5 p.m.

A/L-01 BIOLOGY Paper Class
திரு.E.சுரேந்திரநாதன் B.Sc.
MON,TUE - 4 p.m.

MICROBIOLOGY
T.ஜெயசீலன் B.Sc.
FRI - 4 p.m.

A/L-01,02,03, இணை. கணிதம்
திரு.B.ரவீந்திரன் B.Sc.
(84038)

# தேவை

அபீஸ் கோப்பி தயாரிப்புக்களை சைக்கிளில் எடுத்துச் சென்று விற்பனை செய்ய விற்பனையாளர்கள் தேவை. யாழ்.மாநகரசபை எல்லைக்குள் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். நேரில் வரவும்.

அபீஸ் கோப்பி சென்ரர்
58A, K.K.S. வீதி,
யாழ்ப்பாணம்.
(84012)

# இடமாற்றம்

DR.சின்னப்பு
ஆனந்தசோதி
வைத்தியசாலை

சர்வாங்கமும்,
குழந்தை வைத்தியமும்
உரும்பிராய்ச்சந்திக்கும்
மருதனார்மடம் சந்திக்கும்
இடையில் (விவசாயக்
கல்லூரிக்கு அருகில்)
இயங்குகின்றன.
(84024)

# லஷ்சுமி இணுவில்

இன்று மட்டும்
விஜயகாந்த்,மீனா நடித்த
வானத்தைப் போல
(ஸ்ரீலங்கா)
காட்சிகள் : 11.00, 2.30(பு.நே.)
12.02.2001 முதல்
பார்த்தேன் ரசித்தேன்
(84044)

# ராஜா

யாழ்ப்பாணம்
விஜயகாந்த், தேவயானி,
ரகுவரன், அம்பிகா
மற்றும் பலர் நடிப்பில்
வல்லரசு
காட்சிகள்: 10.30, 2.30 (பு.நே.)
(C/15058)

# நாகம்ஸ்

சுன்னாகம்
பிரபுதேவா-சரத்குமார்
ஜெயாசீல் நடித்த
பெண்ணின் மனதைத்தொட்டு
(ஸ்ரீலங்கா)
காட்சிகள்:11.00, 2.30 (புதிய நேரம்)
(84043)


# பிரிவு ஆற்றாமை அஞ்சலி

வதிரியைப் பிறப்பிடமாகவும், புத்தூர் மணற்பகுதியை வதிவிடமாகவும், வதிரி பொமேஸ் விளையாட்டுக் கழகம், புத்தூர் வீனஸ் விளையாட்டுக் கழகம் ஆகியவற்றின் முன்னாள் சிறந்த உதைபந்தாட்ட வீரரும் பிரபல கட்டட ஒப்பந்தகாரருமான

## பொன்னையா சிவபாதம்

04-02-2001 அன்று கொழும்பில் காலமானார். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கும், உற்றார், உறவினர்கள், நண்பர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

*"மிதிலா அழகுமாடம்"*
*ஆவரங்கால்.*
சி.யோகராசா குடும்பம்.
(84040)

# 45 ஆம் நாள் நீங்கா நினைவில்



அன்னை மடியில் 30 - 12 - 1970
ஆண்டவன் அடியில் 31 - 12 - 2000

## அமரர் பொன்னையா கமலரூபன்

(விரிவுரையாளர், யாழ்.பல்கலைக்கழக தமிழ்த்துறை)

*அன்பும் பண்பும் அறிவும் கொண்டு இப்புவியில்*
*உதித்த எம் அருமை கமலரூபா*
*சீரும் சிறப்பும் பெற்று சிறப்புற வாழ்வாய் என்றிருந்தோம்*
*பாதியில் அதைமுடித்து பரமனடி புகுந்ததேனோ?*
*ஆறாத் துயர் கொடுத்து மீளாத் துயில் கொண்டவனே*
*ஆயிரமாயிரம் ஆண்டு சென்றாலும் எம் உறவு நிலைத்திட*
*வேண்டுகின்றோம் இறைவனை.*

*கரவெட்டி,*
*நெல்லியடி.*
(84048)
உம் பிரிவால் ஆறாத்துயருறும்
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்கள்

## திருமதி பொன்னுத்துரை திலகவதி

(கந்தசாமி கோயிலடி - வேரற்கேணி, மட்டுவில் தெற்கு)

மட்டுவில் தெற்கு, வேரற்கேணி, கந்தசாமி கோயிலடியைச் சேர்ந்தவரும், வேரற்கேணி கந்தசாமி கோயில் செயலாளர் முத்தையா பொன்னுத்துரையின் (இளைப்பாறிய ஆசிரியர்) அன்பு மனைவியுமாகிய திருமதி பொன்னுத்துரை திலகவதி 09.02.2001 அன்று வவுனியாவில் காலமானார்.

அன்னார் இந்திராதேவி, சிவராமச்சந்திரன்(இ.போ.ச, பருத்தித்துறை), சந்திராதேவி (பிரான்ஸ்), கலாநிதி (ஆசிரியை, வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயம்), அனுசியாதேவி (இந்தியா), தயாநிதி(ஆசிரியை, நொச்சிக்குளம் கனிஷ்ட வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தாயாரும், செல்வந்திராசா (கணக்காய்வாளர்,இ.போ.ச.,வவுனியா), தேவமனோகரி (ஆசிரியை, சாவகச்சேரி மகளிர் கல்லூரி), தேவன் (பிரான்ஸ்), குகநாதன் (வவுனியா), கமலேந்திரன் (வவுனியா எம்பயர் ஹோட்டல் உரிமையாளர்) ஆகியோரின் அன்பு மாமியும், யோகநாதன் (மட்டுவில் தெற்கு), ஆனந்தமலர்(லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் பரராசசிங்கம் (சட்டத்தரணி, லண்டன்), திருமதி விசுவலிங்கம், கணபதிப்பிள்ளை (லண்டன்), காலஞ்சென்ற கமலாம்பிகை ஆகியோரின் அன்பு மைத்துனியும், வவுனியா மத்திய மகாவித்தியாலய மாணவர்களான சுஜித்தா, சிவோதயன், மகிழன், குணாளன், சிவஹரீசன் (யாழ்ப்பாணம்), மஜூதினி, தனுஷன் (பிரான்ஸ்), நிருத்திகன், நிர்த்தனன், நிவேதனன், நிரோஷன், நிரந்தரி (இந்தியா) ஆகியோரின் அன்புப் பாட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 1/1, இராசதுரை வீதி, வைரவப்புளியங்குளம், வவுனியாவில் நடைபெறும். திகதி பின்னர் அறிவிக்கப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*தொலைபேசி: 024-20115* (C/15254)
க.செல்வந்திராசா
(மருமகன்)

## முத்துத்தம்பி இராசநாயகம்

கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட முத்துத்தம்பி இராசநாயகம் நேற்றுமுன்தினம் 09.02.2001 வெள்ளிக் கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் தவமணிதேவியின் அன்புக் கணவரும், ஸ்ரீஸ்கந்தராஜா (ஜேர்மனி), காலஞ்சென்ற ராஜஇராஜன், சுதாகர் ஆகியோரின் அன்புத் தந்தையும், பிரபாநிதி(ஜேர்மனி)யின் அன்பு மாமனாருமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (11.02.2001) ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று கோண்டாவில் இந்து மயானத்தில் தகனக்கிரியை செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*கோண்டாவில் கிழக்கு,*
*கோண்டாவில்.*
(84045)
தவமணிதேவி (மனைவி)
சுதாகர் (மகன்)

# உதயன்

## உரிய திசையில்...

மாதந் தோறும் விவசா . கள் நாள் கொண்டாடுதல் அந்த நாளில் குடாநாட்டு விவசாயிகளின் பிரச்சினைகளை அவர்களிடமே நேரில் கேட்டறிதல். அந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு உழைத்தல். அதன் மூலம் அவர்களுக்கு உதவுவதோடு ஊக்குவிப்பும் வழங்குதல். விவசாயிகளின் அனுபவங்களைப் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் கேட்டறிதல்; விரிவுரையாளர்கள் தமது அனுபவங்களை விவசாயிகளுடன் பகிர்ந்து கொள்ளுதல.

இத்தகைய ஒரு நல்ல திட்டத்தை யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் விவசாய பீடம் நடைமுறைப்படுத்த உள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் தனியனே உயர்கல்விப் பீடமாக மட்டுமன்றி, பட்டதாரிகளை உற்பத்தி செய்து வெளியே தள்ளும் கல்விக்கூடமாக அன்றி, சமூகத்துக்கு நெருக்கமாகவந்து அதன் முன்னேற்றத்துக்கும் மேம்பாட்டுக்கும் உழைப்பது அவசியம்.

குடாநாட்டு மக்களின் சமூக, பொருளாதாரப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகளைக் கண்டறியவல்ல நல்ல வழிகாட்டியாக விளங்கும் பொறுப்பு இந்தப் பலகலைக்கழகத்துக்கு விசேடமாக உண்டு. பல்கலைக் கழகமும் அதன் பயிற்றுவித்தலும், ஆராய்ச்சிகளும் ஒரு பக்கமாக தூரத்தே நின்றால் இப்பிரதேச மக்களுக்கு எவ்வித பயனும் கிடைக்காது.

பல்கலைக்கழகம் தான் சார்ந்த மக்களுக்குப் பயன் தரும், உதவும் உயர்கல்விக் கூடமாக விளங்கும் போது மட்டுமே அதன் சிறப்புத் துலங்கும்.

யாழ்ப்பாணக் குடாநாட்டின் இரு பிரதான தொழில்கள் விவசாயமும் கடற்றொழிலும் ஆகும். அவை சம்பந்தப்பட்ட இக்குள்ள வளங்களை இனங்கண்டு. பொருளாதார மேம்பாட்டுக்கு வழிகாட்ட வேண்டிய தட்டிக்கழிக்க முடியாத பணி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கு உண்டு.

அந்தப் பணியை, விவசாய பீடம் முன்னெடுக்க முடிவெடுத்தமை மிகவும் வரவேற்கத்தக்க ஒன்றாகும். விவசாயம் தொடர்பான தொழில் நுட்பப் பிரச்சினைகள்,பயிரினங்களுக்கு உண்டாகும் நோய்கள், புதிய வகைப்பயிரினங்களின் உற்பத்தி தொடர்பான பிரச்சினைகள் என்பன குறித்து விவசாயிகளிடம் நேரில் கேட்டறிந்து ஆராய்ந்து தீர்வுகளை, ஆலோசனைகளை வழங்குவது இந்தப் பணியின் சிறப்பம்சமாக விளங்க உள்ளது.

அது மட்டுமன்றி, உள்ளீடுகளைப் பெறுவதில் உள்ள கஷ்டங்கள் அல்லது சிரமங்களைக் கேட்டறிவது; விவசாய உற்பத்திகளை சந்தைப்படுத்துவதில் உள்ள தடங்கல்களை விவசாயிகளிடமிருந்து அறிவது; அவற்றுக்கான தீர்வு ஆலோசனைகளை வகுத்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு நிறைவேற்ற உந்துவது என்ற பணியும் சிறந்ததொன்றாகும்.

விவசாய பீடத்தினரின் இந்தத் திட்டம் — பணி — எங்கள் சமூதாயத்துக்கான நீண்ட காலத் தேவையாக இருந்தது. அதனை நிறைவுசெய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பது வாய்ப்பானதாகும்.

யாழ். பல்கலைக்கழகத்தின் ஏனைய துறைகள், பீடங்களும் மக்கள் சம்பந்தப்பட்ட தமது துறைசார் விடயங்களில் அவர்களுக்கு அருகே சென்று பணி செய்ய முன்வரவேண்டும். அப்போது மக்களுக்குப் பயனுள்ள முழுநிறைவான உயர் கல்வி நிறுவனமாக யாழ். பல்கலைக்கழகம் வெற்றிக் கொடி நாட்டும்.

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், பெப். 11

யாழ். வண்ணை ஸ்ரீவிஸ்வலிங்க மகாகணபதி ஆலயத்தின் பாலஸ்தாபன கும்பாபிஷேகம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.45 மணிக்கு நடைபெறுகின்றது.

(க-10)

★ ★ ★

உடுவில் சிவஞானப்பிள்ளையார் ஆலய பாலஸ்தாபன பெருவிழா நாளை திங்கட்கிழமை காலை சூரிய உதயத்தின் போது நடைபெறும்.

பாலஸ்தாபனத்துக்கான கிரியைகள் இன்று ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகும்.

(க-152)

## சர்வோதயம் உதவி

வலிகாமம் மேற்கு, பெப். 11

வலிகாமம் மேற்குப் பிரதேச செயலர் பிரிவில் ஒன்பது குடும்பங்களுக்கு சுயதொழில் முயற்சிக்கடனாக 66 ஆயிரத்து 500 ரூபாவும்போசாக்கு பாடசாலை உபகரணங்கள். ஏனைய செலவுகளுக்கு 45 ஆயிரம் ரூபாவும் சர்வோதய நிறுவனத்தினரால் வழங்கப்படவுள்ளன.

வலிகாமம் மேற்குப் பிரதேச செயலர் பிரிவில் குடும்பத் தலைவர்கள் இன்றி வறுமைக் கோட்டின் கீழ் வாழும் 9 குடும்பங்களுக்கு சுயதொழில் முயற்சிக் கடனாக தலா 7 ஆயிரத்து 500 ரூபாவும் இதே குடும்பங்களுக்கு போசாக்கின்மையை நீக்குவதற்கு தொடர்ந்து ஆறு மாதங்களுக்கு மாதமொன்றுக்கு 500 ரூபாவும் பாடசாலை உபகரணங்களைக் கொள்வனவு செய்ய 500 ரூபாவும் ஏனைய செலவுகளுக்கு மூன்று மாதங்களுக்கு 500 ரூபா வீதமும் நன்கொடையாக சர்வோதயம் வழங்கும்.

(க-175)

## தென்னந்தோட்டம்; சபை பொறுப்பேற்பு

தென்மராட்சி, பெப். 11

எழுதுமட்டுவாழ் கரம்பகத்தில் உள்ள மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்திச் சபையின் தென்னந்தோட்டம் மீண்டும் கடந்த முதலாம் திகதி தொடக்கம் சபையினால் பொறுப்பேற்கப்பட்டுள்ளது.

கடந்த அக்டோபர் மாதம் தொடக்கம் படையினர் இந்த தோட்டங்களில்நிலை கொண்டிருந்ததால்சபை ஊழியர்கள் எவரும் தோட்டங்களுக்குள் செல்ல அனுமதிக்கப்படவில்லை.

கரம்பகம் தோட்டங்கள் பொறுப்பேற்றதை அடுத்து அங்கு காவலர்கள் கடமைக்கு நியமிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(க-117)

## யெகோவா மாநாடு

யாழ்ப்பாணம், பெப். 11

யெகோவாவின் சாட்சிகளுடைய விசேட மாநாடு இன்று ஞாயிறு காலை 9 50 மணிக்கு யாழ். ஆஸ்பத்திரி வீதியில் வர்த்தக வங்கிக் சட்டடத்துக்கு அருகில் உள்ள யாழ்ப்பாணக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

'புரிந்துகொள்ளும் திறமைகளில் முதிர்ச்சி உள்ளவர்கள் ஆகுங்கள்' என்னும் பொருளில் இந்த மாநாடு இடம்பெறும்.

பகிரங்கச் சொற்பொழிவு மற்றும் முழுக்காட்டுதல் என்பனவும் இடம்பெறும்.

(ஐ-7)

**உதயவாக்கு**

சுருங்கச் சொல்வதே பேச்சுத் திறனின் உயிர் நாடி.

### வடக்கு - கிழக்கு மக்களின் முறைப்பாடுகள்;

# படையினரின் துன்புறுத்தல்கள் பற்றி மனித உரிமைக்குழு விசாரணை

கொழும்பு, பெப். 11

வடக்கு. கிழக்குப் பகுதிகளில் காரணம் எதுவுமின்றி படையினராலும் பொலீஸாரினாலும் கைது செய்யப்பட்டு மோசமாகத் துன்புறுத்தப்பட்டது தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்குக் கிடைத்த பெருமளவு முறைப்பாடுகள் தொடர்பாக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக ஆணைக்குழு அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

வடக்கு, கிழக்கிலிருந்து எழுத்து மூலமும் வாய் மூலமும் கிடைத்த இந்த முறைப்பாடுகள் தொடர்பாக மனித உரிமைகள் ஆணையாளர்களான கொட்பிறே குணதிலக மற்றும் மனோரி முத்தெட்டுவேகம ஆகியோர் விசாரணைகளை மேற்கொண்டிருந்தனர்.

தற்போது இது தொடர்பான கள விசாரணைகளை வாஸ்குணவர்தன தலைமையிலான குழுவினர் மேற்கொண்டு வருகின்றனர். இவர்களுக்குப் பிராந்திய இணைப்பாளர் சேனக்க திஸநாயக்க உதவி வருகிறார்,

விடுதலைப் புலிகளுடன் தொடர்பிருப்பதாகத் தேவையற்ற குற்றச்சாட்டைச் சுமத்தி தங்கள் குடும்பத்தவர்கள் அல்லது உறவினர்கள் படையினராலும் பொலீஸாரினாலும் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டு துன்புறுத்தப்படுவது குறித்தும் எதுவித காரணமோ அல்லது சாட்சியமோ இன்றி இவ்வித கொடுமைகளுக்குள்ளாக்கப்படுவது குறித்தும் — மனித உரிமை ஆணைக்குழுவிடம் முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

### தகுந்த பதில் இல்லை

இது தொடர்பாக சம்பந்தப்பட்ட பிரதிப் பொலீஸ்மா அதிபர்கள் மற்றும் பொலீஸ் அத்தியட்சகர்களிடம் மனித உரிமைகள் ஆணைக்குழுவினர் தொடர்பு கொண்ட போதிலும் அவர்களிடமிருந்து தகுந்த பதில்கள் கிடைக்கவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

இதுபற்றி மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவர் பாயிஸ் முஸ்தபா தெரிவிக்கையில், விரைவில் இவை தொடர்பான விசாரணை அறிக்கைகள் ஜனாதிபதியிடம் கையளிக்கப்படும் என்றார்.

இதனிடையில் திருகோணமலை, நிலாவெளிப் பகுதியில் கடந்த வருடப்பிற்பகுதியில் புலிகளுடன் தொடர்பு உடையவர்கள் எனக் கூறி மூன்று இளைஞர்கள் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

இது தொடர்பாக இறந்தவர்களது குடும்பத்தவர்களுக்கு நஷ்டஈடு வழங்குமாறு மனித உரிமைகள் ஆணைக்குழு வடக்கு புனர்வாழ்வு, புனர்நிர்மாண அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு சிபார்சு செய்துள்ளது.

இதேவேளை, இலங்கையில் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக விரிவான அறிக்கையொன்றை இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு அதன் சர்வதேச தலைமையகத்திற்கு அனுப்பி வைத்துள்ளது என்றும் —

இதனை ஐ நா. பாதுகாப்புச்சபையிடம் கையளிப்பதற்காக ஐ. நா. செயலர் கோபி அனானுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்றும் பாயிஸ் முஸ்தபா தெரிவித்தார்.

(க)

## மெய்வன்மைப் போட்டிகள்

யாழ்ப்பாணம், பெப். 11

தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 2 மணிக்கு அதிபர் த. அரியரத்தினம் தலைமையில் பாடசாலை விளையாட்டு மைதானத்தில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வல்வெட்டித்துறை நகரசபைத் தலைவர் எம். கே. சிவாஜிலிங்கமும் சிறப்பு விருந்தினராக புலோலி ப. நோ. கூ. சங்கத் தலைவர் கி. அருமைத்துரையும் கலந்து கொள்வர்.

(க-10)

★ ★ ★

யாழ்ப்பாணம், பெப். 11

பண்டத்தரிப்பு ஜசிந்தா றோமன் கத் தோலிககதமிழ் கலவன் வித்தியாசாலை இல்லமெய்வன்மைப் போட்டி நாளை திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறும்.

வித்தியாசாலை மைதானத்தில், அதிபர் சு.பிலேந்திரராசா தலைமையில் இடம்பெறும் இந்தப் போட்டிக்கு பிரதம விருந்தினாராக சண்டிலிப்பாய்க் கோட்ட தவிக் கல்விப் பணிப்பாளர் க. தனபாலசிங்கம் கலந்து கொள்வார்.

(க—15)

## நாளை

**தை 30**

**திங்கட்கிழமை**

திதி: பஞ்சமி

பின் இரவு 4. 14 வரை.

நட்சத்திரம்: அத்தம்

பிற்பகல் 3. 46 வரை.

ஜபநேரம்: 12 34 — 2. 04

ராகுகாலம்: 8.04—9.34

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

### இந்துசமயத் திணைக்களத்தில்

## சர்வதேச இந்து மதகுருமார் ஒன்றியம் எனப் பெயர்ப் பதிவு

இந்து மதகுருமார் ஒன்றியம் தற்பொழுது சர்வதேச இந்து மதகுருமார் ஒன்றியம் எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டு அப் பெயர் இந்துசமய பண்பாட்டுத் திணைக்களத்தில் தற்போது பதிவு செய்பப்பட்டுள்ளது.

இப்பெயர் மாற்றம் தொடர்பாக ஒன்றியத்தின் செயற்குழுவினர் வடக்கு— கிழக்கு மாகாணப் புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுடன் கலந்துரையாடியதன் பயனாக அமைச்சர் இதற்கான நடவடிக்கையை மேற்கொண்டிருந்தார்.

இந்துசமய, இந்து கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் திருமதி சாந்தி திருநாவுக்கரசு சர்வதேச இந்து மதகுருமார் ஒன்றியம் ஜனவரி முதலாம் திகதியில் இருந்து புதிதாகப் பதிவு செய்யப்பட்டிருப்பதாக ஒன்றியத் தலைவருக்குக் கடிதம் மூலம் அறிவித்துள்ளார்.

(க-152)

## பண்ணிசை

யாழ். சைவ பரிபாலன சபையினர்நடத்தும் பண்ணிசைப் போட்டி இன்று காலை 9 மணிக்கு யாழ். வண்ணை நாவலர் மகா வித்தியாலய மண்டபத்தில் நடைபெறும் எனச் சபையின் செயலாளர் சைவப்புலவர் வ. கந்தசாமி தெரிவித்துள்ளார்.

(ம-7)

## சாவகச்சேரி வர்த்தக நிலைய உரிமையாளர் கவனத்துக்கு!

யாழ்ப்பாணம்,பெப். 11

சாவகச்சேரிப் பகுதியில் உள்ள வர்த்தக நிலையங்களில் கடந்த வருடப் போரினால் உண்டான சேதங்கள், பொருள் இழப்புகள் குறித்த விவரங்களைப் பொலீஸார் திரட்டி உள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சாவகச்சேரி வர்த்தகர்களில் மிகப் பலரும் தமது உடைமைகளுக்கு உண்டான சேதங்கள், பொருள் இழப்புகள் குறித்து கொடிகாமம் பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தனர்.

அவர்களது முறைப்பாடுகள் குறித்துப் பொலீஸார் நேரில் சென்று பார்வையிட்டு விவரங்களைத் திரட்டியுள்ளனர். அவை சம்பந்தமான அறிக்கைகள் தயாரித்து முடிக்கப்பட்டு விட்டதாகப் பொலீஸ் வட்டாரங்கள் நேற்றுத் தெரிவித்தன.

உறுதிப்படுத்தப்பட்ட முறைப்பாடுகளை வர்த்தகர்கள் கொடிகாமம் பொலீஸ் நிலையத்தில் பெற்றுக் கொள்ள முடியும்.

(அ)

## இன்றைய நிகழ்வுகள்

அண்மையில் 'கலாபூஷணம்' விருது பெற்ற சுப்பையா கணபதிப்பிள்ளையைக் கௌரவிக்கும் விழா இன்று காலை 9 மணிக்கு இளைப்பாறிய உப அதிபர் சி. கந்தசாமி தலைமையில் பொன்னாலை கலாசார மண்டபத்தில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் து. வைத்திலிங்கம், வலி. மேற்கு பிரதேச சபைத் தலைவர் ந திரிலோகநாதன், வலி. மேற்கு பிரதேச செயலர் நா. வேதநாயகன் ஆகியோர் கலந்து கொள்வர்.

(க-10-28-175)

★ ★ ★

யாழ்ப்பாணம், பெப். 11

மறுமலர்ச்சி மன்றத்தின் பொதுச்சபைக் கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு மானிப்பாய், லோட்டன் வீதியில் உள்ள மன்றச் செயலகத்தில் க. தர்மராசா தலைமையில் நடைபெறும்.

(க—10)

★ ★ ★

அகதிகளுக்கான ஐ. நா. தூதரகத்தின் நுண் கருத்திட்டத்தின் கீழ் புனரமைப்புச் செய்யப்பட்ட பண்டத்தரிப்பு ப. நோ. கூ. சங்க கட்டடத்திறப்பு விழா இன்று ஞாயிறு முற்பகல் நடைபெறும்.

அகதிளுக்கான ஐ. நா. தூதரக யாழ். வதிவிடப் பிரதிநிதி புதிய கட்டடத்தைத் திறந்து வைப்பார்.

(க—135)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

**27" SONY T.V, G-12** டெக், **YAMAHA MATE 90** மோட்டார் சயிக்கிள், குளிர்சாதனப் பெட்டி, மீன் தொட்டி மற்றும் சகலவித வீட்டுத் தளபாடங்கள் விற்பனைக்குண்டு. தொடர்பு: 131, அரசடி வீதி, கந்தர் மடம் சந்திக்கருகில். (83889)

ஒரு வயது நிரம்பிய அல்சேசன் நாய் (பெண்) விற்பனைக்கு உண்டு. தொடர்பு ச.முகுந்தன், 165, அரசடி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். (83987)

நல்ல நிலையிலுள்ள சிங்கர் **DOUBLE DOOR** குளிர்சாதனப் பெட்டி விற்பனைக்கு உண்டு. மற்றும் சிறந்த முறையில் குளிர் சாதனப் பெட்டிகள் திருத்தி அமைத்து கொடுக்கப்படும். தொடர்பு: ராகவேந்திர ஆலயம், நல்லூர். (83982)

நல்ல நிலையிலுள்ள பஜாஜ் ஸ்கூட்டர் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 864, **K.K.S** வீதி, யாழ்ப்பாணம். (83990)

இறைச்சிக்கோழி **(Broilers)** விறபனைக்கு உண்டு. தினமும் சுத்தம் செய்து வேண்டிய நிறைகளில் பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு: இல.15, 6ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். (83932)

நல்ல நிலையில் கடைப் பாவனைக்குரிய கண்ணாடி சோக்கேசுகள் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: திரு.எஸ்.நடராஜா, **12/25,** கன்னாதிட்டி லேன், யாழ்ப்பாணம். (83972)

புறொயிலர் இறைச்சிக்கோழிகள் விற்பனைக்கு உண்டு. மொத்தமாகவும் சில்லறையாகவும் மலிவு விலையில் பெற்றுக் கொள்ளலாம். அண்ணா, ஸ்ரேஷன் றோட், இணுவில். **(C/15146)**

## தவறிவிட்டது

தச்சன்தோப்பு, கைதடி என்னும் முகவரியைச் சேர்ந்த வேலுப்பிள்ளை இராசமணி என்பவரது தே.அ. அட்டை(293301026V),வி.அ. அட்டை இரண்டும் 06.02.2001 அன்று பண்டத்தரிப்பு சந்தைக்கும் இளவாலைக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து சிவா கொமினிக்கேஷன், பண்டத்தரிப்பு என னும் முகவரியில் ஒப்படைத்துதவவும். சன்மானம் வழங்கப்படும். (83938)

நாவற்குழி தெற்கு, கைதடியைச் சேர்ந்த கதிரன் சிவஞானம் என்பவரின் தே.அ.அட்டை, வி.அ. அட்டை என்பன கடந்த 04.01.2001 அன்று ஆனைக்கோட்டைக்கும் யாழ்.போதனா வைத்தியசாலைக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் **13/3,** ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (84014)

யாழ்.கச்சேரி நல்லூர்வீதி,39/6, மூத்த விநாயகர் ஒழுங்கையைச் சேர்ந்த மு.இராசநாயகம் என்பவரின் தே.அ.அ.(இல.551990915V) மற்றும் கல்விச் சான்றிதழ்கள் நெல்லியடிக்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்படி விலாசத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (83998)

## புறொயிலர் விற்பனைக்கு

இறைச்சிக்கோழி **BROILERS** விற்பனைக்கு உண்டு. தினமும் சுத்தம் செய்து கொடுக்கப்படும். தொடர்பு: 40, கோயில் வீதி, யாழ்ப்பாணம். (83991)

இறைச்சிக்கோழி (புறொயிலர்) விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 139, 141, கோயில் வீதி, யாழ்ப்பாணம். மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். (84004)

புறொயிலர் (விலை 180/-) கல்பேட் (விலை 160/-) மலிவு விலையில் விற்கப்படும். 334, **K.K.S** வீதி, (வீட்டில்) குணம் றொட்டிக் கடைக்கருகில், சிவன் கோயிலடி. (84029)

சுத்தம் செய்யப்பட்ட **BAIRAHA FAIRM** புறொயிலர் இறைச்சிக்கோழி **CHICKEN SAUSAGES, CHICKEN MEAT BALLS** எம்மிடம் பெற்றுக் கொள ளலாம். தொடர்பு: 145, நவீன சந்தை, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். **T.P-2868.** (83976)

## செவ்வாய் மாற்றமும் சனி வக்கிரமும்

எங்கும் விற்பனையாகின்றன. யுத்தச் செவ்வாய் - வக்கிர நீசச்சனியின் கெட்டப் பார்வைப் பிடியகன்றதால் பூமியதிர்ச்சி, சூறாவளி, இயற்கையழிவுகள், உள்நாட்டுப் போர்கள் தணிகின்றன. சத்யா, ஆனைக்கோட்டை. தொலைபேசி 021-2753. (84025)

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

சேவல், கல்பேட், புறொயிலர் என்பன தினமும் சுத்தம் செய்து (பாதிக்கோழி உட்பட) பெற்றுக் கொள் ளலாம் 19முருகேசர் ஒழுங்கை, முத்திரைச்சந்தி, நல்லூர். (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) (84022)

புறொயிலர், சேவல் மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்கு உண்டு. சுத்தம் செய்தல் இலவசம். மற்றும் லவ்பேட்ஸ் விற்பனைக்கு உண்டு. 31,மான்ஸ் பாடசாலை வீதி, உடுவில், சுன்னாகம் (கண்ணா வீடியோ சென்ரர் வளவு). (83638)

## தொலைபேசி தேவை

ரெலிகொம் தொலைபேசி இணைப்பு வைத்திருப்போர் உரிமை மாற்றம் செய்து விற்க விரும்பின் உடன் தொடர்பு கொள்க. விள.இல.1208 மே/பா. உதயன். (83988)

## திருமண சேவை

சைவ கௌரவ சுயதொழில் செய்யும் 1970இல் பிறந்த மணமகனுக்கு பொருத்தமான மணமகளை எதிர்பார்க்கின்றனர். மற்றும் சகல இன மத ஆண், பெண், இருபாலாருக்கும் ஜாதகங்கள் உள்ளன. தொடர்பு: ராகவேந்திர ஆலயம், நல்லூர். (83981)

## மணமக்கள் தேவை

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 40 வயதுடைய சைவபோசன ஆசிரியருக்கும், 35 வயதுடைய டாகடருக்கும் கிரகபாவம் குறைந்த அழகிய மணப்பெண்களும், 33 வயதுடைய பட்டதாரி மணப்பெண்களுக்கு **Sponser** இல் வெளிநாடு அழைத்துச் செல்லக் கூடிய மணமகன்களும் தேவை. ஜாதகம் மற்றும் விவரங்களுடன் தரகரின்றி தொடர்பு கொள்ளவும். விள.இல.1207மே/பா. உதயன். (83963)

## COMPUTER FOR SALE

கொழும்பிலிருந்து தருவிக்கப்பட்ட புதிய **PENTIUM III 450 M.MX, COMPUTER WITH PRINTER AND UPS** விற்பனைக்குண்டு. தொடர்பு: ச.பிரசாத், 194, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். **T.P. 2530.** (84018)

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த தனியார் துறையில் வேலை செய்யும் மணமகனுக்கு 22-28 வயதுக்கிடையில் படித்த சைவ போஜன, கிரகபாவம் குறைந்த, 4இல் செவ்வாய் உள்ள மணமகள் விரும்பத்தக்கது. ஜாதகத்துடன் தொடர்பு கொள்ளவும். விள.இல.1201 மே/பா. உதயன். (83803)

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த டாக்டர் **(M.B.B.S),** வயது 30, 5'8" உயரம், செவ்வாய்க் குற்றமுள்ள மணமகனுக்குத் தகுந்த மணமகளைப் பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். ஜாதகக் குறிப்புடன் தொடர்பு கொள்க. விளம்பர இல.1202 மே/பா. உதயன். (83832)

## சேவை

உங்கள் சர்வதேச தொலை தொடர்புகளை **(IDD)** எங்கள் ஊடாக மிக மிகக் குறைந்த கட்டணத்துடன் அழைக்கலாம். தொடர்பு கொள்க. 01-552238. **(C/15233)**

## மணிமண்டபம்

உரும்பிராய் கருணாகரப் பிள்ளையார் கோயில் இராஜகோபுர முன்றலில் மணிமண்டபம் அமைய இருக்கிறது.

மணிமண்டபத்துக்கான அத்திவாரக்கல் நடும் வைபவம் கடந்த புதன் இடம்பெற்றது.

ஆகம கிரியாமணி சிவஸ்ரீ க.மு.ஜெகநாதக்குருக்கள் பூர்வாங்கக் கிரியைகளை நடத்தி வைத்தார். (க)

## பங்குத் தந்தையின் அறையில் படையினர்!

குருநகர்,பெப்.11

பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயப் பங்குத் தந்தையின் அறை படையினரால் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இதனால் பங்குத் தந்தை வேறு இடத்தில் தங்கியுள்ளார்.

இந்த அறை அமைந்துள்ள பாஷையூர் அந்தோனியார் வீதியூடாகக் கடற்கரைக்குச் செல்வது தடை செய்யப்பட்டுள்ளது. (க-51)

# அறிவித்தல்

**இ.சதானந்தன்**
**சட்டத்தரணி பிரசித்த நொத்தாரிஸ்**
**உபயகதிர்காமம்,**
**புலோலி தெற்கு, புலோலி,**
**ஸ்ரீலங்கா.**

**நான் சிகிச்சைக்காக கொழும்பு போவதால் என்னிடம் உங்கள் உறுதிகள், வழக்குக் கொப்பிகள் இருப்பின் 11.03.2001 ஆம் திகதிக்கு முன் பெற்றுக் கொள்ளவும்.**

**இ.சதானந்தன்**

(84019)

# YOGI HOME SCIENCE ACADEMY

**குறுகிய கால புதிய வகுப்புக்கள் 19.02.2001 முதல் ஆரம்பமாக உள்ளன.**

1. முக ஒப்பனை, நவீன தலை அலங்காரங்கள், மணமகள் அலங்காரங்கள்.
2. இந்தியன், கண்டியன், குஜராட்டி, மடிசார் போன்ற வித்தியாசமாக சாறி அணியும் முறைகள்.
3. பூக்கள் தயாரித்தல், அலங்கரித்தல், செண்டுகள் செய்தல்.
4. துணியில் வர்ண அலங்கரிப்பு. **(Fabric Painting and Saree Painting)**

ஏனைய மனையியல் வகுப்புக்களும் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

**சேர விரும்பும் மாணவிகள் உடன் தொடர்பு கொள்ளவும்.**

மேலும் சகல ஒப்பனைப் பொருள்களும் கிறீம் வகைகளும் எம்மிடம் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 75, அம்மன் றோட், நல்லூர், யாழ்ப்பாணம்.

(84023) *(வீரமாகாளி அம்மன் கோயில் முன்பாக)*

# வாழ்த்துகிறோம்

அன்னை பராசக்தியின் திருமுன் இலண்டன் மாநகரில் மாங்கலமாம் மனைவாழ்வை இன்று ஏற்கும் செல்வங்கள்

**கலாவண்ணன் (கலா)** **கோகிலா (அகிலா)**

இருவரையும் மணமொழிகளால் வாழ்த்தி இறும்பூதெய்துகிறோம்.

வாழ்க பல்லாண்டு வளமுடன்.

திரு.திருமதி ஜெகதீஸ்வரன்
அன்னை இல்லம்
*உரும்பிராய் கிழக்கு, யாழ்ப்பாணம்.*
*இலங்கை.*

(C/15226)

# JAFFNA SCIENCE ASSOCIATION

**Developemental Challenges of the 21st Century in**

## MANAGEMENT AND MARKETING

**A Two Day Workshop on "Marketing and Management" on 24th and 25th February, 2001 (Saturday & Sunday) At the Management Hall II, University of Jaffna.**

| | |
|---|---|
| **Objectives:** | **At the end of the workshop the Participants.** **Build & Maintain an ability to manage their enterprises / organizations.** **Develop their knowledge towards success.** **Achieve the feeling of Professionalism** |
| **Target Groups:** | **Those who are involved in management & Marketing from the Government & Private sectors.** |
| **Medium:** | **Bilingual (Tamil & English)** |
| **Course fee:** | **Rs.1,000/- Per Participant (includes lunch, tea and course material)** |

**Closing date for applications: 19th February, 2001.**

**Forward applications & course fee.**

**Dean's Office,**
**Faculty of Management Studies & Commerce,**
**University of Jaffna.**

(C/15251)

# மரண அறிவித்தல்கள்

## இளையப்பு கந்தையா

விளையாட்டு அரங்க வீதி, கல்வியங்காட்டைப் பிறப்பிடமாகவும், கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட இளையப்பு கந்தையா 08.02.2001 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மனோன்மணியின் அன்புக் கணவரும், கனகலிங்கம் (கே.கே), பரமலிங்கம் (ஊழியர், அரச முதியோர் இல்லம், கைதடி), மகாலிங்கம் ஆகியோரின் அன்புத் தந்தையும், செங்கமலம், பராசக்தி, ஜெயராணி ஆகியோரின் அன்பு மாமனாரும், அமிர்தா, கவிதா, அஜந்தன், நிஷாந்தன், அரவிந், அகிலன், அஜித்தா, ஜெலானி, ஜெசிந்தா, ஜெயகாந், ரஜீவ்காந் ஆகியோரது அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் பொறளை ஜெயரட்ண மலர்ச்சாலையில் வைக்கப்பட்டு, (11.02.2001) இன்று பொறளை கனத்தை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*விளையாட்டரங்க வீதி,*
*கல்வியங்காடு.*
(84035)

தகவல்
க.பரமலிங்கம்
(மகன்)

## பெருமாள்பிள்ளை சிறிகிருஸ்ணர்

ஊரெழுவைப் பிறப்பிடமாகவும், கோண்டாவில் மேற்கை வசிப்பிடமாகவும் தற்பொழுது கனடாவில் வசித்தவருமாகிய பெருமாள்பிள்ளை சிறிகிருஸ்ணர் 09.02.2001 வெள்ளிக்கிழமை கனடாவில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற பெருமாள்பிள்ளை- சிவபாக்கியம் அவர்களின் புத்திரனும், காலஞ்சென்ற முன்னாள் மனைவி புவனேஸ்வரி மற்றும் தற்போதைய மனைவியான ஈஸ்வரியின் அன்புக் கணவரும் இராசசுந்தரம், காலஞ்சென்ற நல்லம்மா அவர்களின் மருமகனும் மற்றும் செல்வி இலக்சுமவாணி (கனடா), செல்வன் அகில்கர் (கனடா) ஆகியோரின் தகப்பனாரும், சிறிகாந்தன் (கனடா), காலஞ்சென்ற கருணாநிதி (ஜேர்மனி), கிரிதரன் (கனடா), பாலகுமார் (கனடா), சிவனுமச் செல்வி, சிவகாமி (கொழும்பு) ஆகியோரின் சகோதரரும், சிவபாதம் (பிராந்திய முகாமையாளர் - மக்கள் வங்கி, யாழ்ப்பாணம்) அவர்களின் மைததுனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 13.02.2001 செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று ஒன்றாரியோ(கனடா)வில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**22 BANNER HILL AVENUE**
**MISSISSAUGA ONTARIO**
**LUX IVI CANADA**
**T.P -N-9052829332**
(84031)

தகவல்
செ.இராசசுந்தரம்(மாமனார்)
"புகையிரத நிலைய வீதி,"
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.

# ஜெயலலிதாவுடன் டாக்டர் ராமதாஸ் கூட்டு! திரிசங்கு நிலையில் தவிக்கும் காங்கிரஸ்!!

தமிழகத்தில் எதிர்பார்க்கப்பட்ட ஒன்று கடைசியில் நடந்துவிட்டது. ஆம் இந்தியாவின் ஆளும் தேசிய ஜனநாயகக் கூட்டணியில் இருந்து டாக்டர் ராமதாஸின் பாட்டாளி மக்கள் கட்சி வெளியேறிவிட்டது.

அத்துடன் ராமதாஸ் ஜெயலலிதா சந்திப்பு நிகழ்ந்து அ.தி.மு.க. கூட்டணியில் பா.ம.க. இணைந்தும் விட்டது.

சமீப காலமாகவே இது எதிர்பார்க்கப்பட்டு வந்த ஒன்று என்பதால் தமிழக மக்களிடம் இது பரபரப்பை அதிகம் ஏற்படுத்தவில்லை.

டாக்டர் ராமதாஸின் யதார்த்த அரசியலை மக்கள் தெரிந்து வைத்திருந்ததும் பரபரப்பு ஏற்படாததற்கு மற்றொரு காரணம்.

ஆனால் மக்களுக்குப் பதிலாக மற்றைய கட்சிகளிடம் பரபரப்பை ஏற்படுத்திவிட்டார் ராமதாஸ்.

இதில் சங்கடத்தின் உச்சியில் இருப்பது சோனியாவின் காங்கிரஸ் கட்சி.

மத்திய அரசில் அங்கம் வகித்த பா.ம.கவின் இரு இணையமைச்சர்கள் விலகியதும், தேசிய ஜனநாயகக் கூட்டணியில் இருந்து பா.ம.க. விலகி எதிர்க்கட்சியான அ.தி.மு.க. - காங்கிரஸ் கூட்டணியில் சேர்ந்ததும் மத்திய அரசுக்கு ஆபத்து எதனையும் ஏற்படுத்திவிடப் போவதில்லை. பா.ம.கவின் ஆதரவு கிடைக்காது விட்டால் கூட பாரதீய ஜனதாக் கூட்டணி அதிக நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவு இருப்பதால் ஆட்சியைத் தக்க வைத்துக்கொள்ளும்.

ஆனால் தனது நடவடிக்கை மூலம் தமிழக அரசியலை ஒரு புரட்டுப் புரட்டிவிட்டார் டாக்டர் ராமதாஸ். அதுவும் தமிழகச் சட்டப் பேரவைத் தேர்தலுக்கு சில மாதங்களே இருக்கும் நிலையில் தேர்தல் பரபரப்புக்கு அவர் பிள்ளையார் சுழி போட்டுள்ளார்.

தமிழகத்தின் பல மாவட்டங்களில் கணிசமாக - அத் தொகுதிகளில் தேர்தல் வெற்றிகளைத் தீர்மானிக்கும் அளவில் வாழ்பவர்கள் வன்னியர் என்ற சாதியினர்.

டாக்கடர் ராமதாஸ் இந்தச் சாதியைச்

**ராஜரிஷி**

சேர்ந்தவர். எழுபதுகளில் வன்னிய மக்களை முன்னேற்றுவதற்காகச் செயற்பட்டு வந்த அமைப்புத்தான் வன்னியர் சங்கம். வன்னிய அடிகளார் என்பவர் அதன் தலைவராக இருந்தார். அப்போது திண்டிவனத்தில் மருத்துவராக இருந்த ராமதாஸ் வன்னிய சங்கத்தில் மூத்த தலைவர்களில் ஒருவர்.

பின்னர் வன்னி அடிகளாருடன் ராமதாஸுக்கு ஏற்பட்ட கருத்து வேறுபாட்டையடுத்து வன்னிய சங்கம் பிளவுபட்டது.

பெரும்பான்மையானவர்கள் ராமதாஸுக்கு ஆதரவளித்தனர். தனது இதனைத் தொடர்ந்து குறிப்பிட்ட சாதி ஒன்றுக்கான சங்கம் என்பதனை மாற்றி பாட்டாளி மக்கள் கட்சியாக அதனை உருவாக்கினார் ராமதாஸ்.

தனது புதிய கட்சி ஒடுக்கப்பட்ட மக்களுக்காக குரல் கொடுக்கும் என்று அறிவித்த டாக்டர் ராமதாஸ் பா.ம.கவில் தாழ்த்தப்பட்ட மக்களைச் சேர்க்க முயற்சிகளை மேற்கொண்டார்.

தமிழகத்தில் காலம் காலமாக வன்னியர்களுக்கும் தாழ்த்தப்பட்ட 'தலித்' மக்களுக்கும் இடையே கீரியும் பாம்பும் போன்ற உறவே இருந்து வந்ததால் - வருவதால் ராமதாஸின் முயற்சி குறிப்பிடத் தகுந்த வெற்றியை அளிக்கவில்லை.

(ஆனாலும் பா.ம.கவைச் சேர்ந்த தாழ்த்தப்பட்டவரான தலித் எழில்மலையை மத்திய அரசில் அங்கம் வகித்தபோது அமைச்சராக்கியது வேறு விடயம்.)

வன்னியர்கள் இயல்பாகவே சற்றுத் தீவிரமானவர்கள். ஆகையால் பா.ம.க. ஆரம்பித்த காலகட்டத்தில் அழைப்பு விடுத்த போராட்டங்கள் தமிழகத்தை ஸ்தம்பிக்க வைத்தன. (இன்னும் விவரமாகச் சொல்வதானால் சந்தன மரக் கடத்தல்காரன் வீரப்பனும் வன்னியரே)

தெருவோர மரங்களை இரவோடு இரவாக வெட்டி வீதிகளுக்குக் குறுக்கே போட்டு பா.ம.க. நடத்திய போராட்டங்கள் அக் கட்சியை 'பிரபலம்' அடையவைத்தன. மரம் வெட்டிக் கட்சியென்று பா.ம.கவை பத்திரிகைகள் கிண்டலடித்தபோதும் டாக்டர் ராமதாஸ் தமிழக அரசியலில் தவிர்க்க முடியாத சக்தியாக வளர்வதை அவறறால் தடுக்க முடியவில்லை.

இந்த நிலையில் 1983 இல் ஈழத் தமிழர் பிரச்சினை தமிழகத்தின் கவனத்தை ஈர்த்தது. அப்போது தமிழீழ விடுதலைப் புலிகளில் குறிப்பாக வேலுப்பிள்ளை பிரபாகரனின் - அதி தீவிர ஆதரவாளரானார் டாக்டர் ராமதாஸ்.

ராஜீவ் காந்தி கொலைக்குப் பின்னர் விடுதலைப் புலிகள் மீது தமிழகத்தில் கசப்புணர்வு வளர்ந்தபோதும் தனது விடுதலைப் புலிகள் ஆதரவு நிலைப்பாட்டில் இருந்து ராமதாஸ் விலகவில்லை.

92 ஆம் ஆண்டு ஜெயலலிதா புலிகளைக் கடுமையாகச் சாடியிருந்தபோதும் அ.தி.மு.கவுடன் கூட்டணி அமைத்திருந்த பா.ம.கவின் மூன்றுநாள் மாநாட்டில் பிரபாகரனின் படங்கள் ஊர்வலத்தில் எடுத்துச் செல்லப்பட்டன. மாநாட்டிலும் புலிகளுக்கு ஆதரவு தெரிவிக்கும் உரைகள் நிகழ்த்தப்பட்டன.

94 செப்ரெம்பர் 24 இல் அப்போதைய பிரதமர் நரசிம்மராவிடம் அ.தி.மு.க. கூட்டணியில் இருந்து பா.ம.க. வெளியேறிய நிலையில் - பா.ம.கவை தடைசெய்யும்படி ஜெயலலிதா கோரியிருந்தார். அக் கடிதத்தில் தடைசெய்யப்பட்ட விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு ராமதாஸ் ஆதரவு தெரிவிப்பதையே தடைக்கான காரணமாகவும் ஜெயலலிதா குறிப்பிட்டிருந்தார்.

1996 நவம்பரில் பா.ம.க. நடத்திய ஈழத் தமிழர் பாதுகாப்பு மாநாடு தமிழகத்தில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது. புலிகளுக்கு ஆதரவு அளிப்பதற்காக எத்தனை ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்தாலும் அதனை ஏற்கத் தயாரென ராமதாஸ் கூறினார். ஆனாலும் பா.ம.கவினரின் 'மரம் வெட்டி புகழ்' ராமதாஸுக்குப் பாதுகாப்பு அளித்தது.

1998 இல் மீண்டும் அ.தி.மு.கவுடன் பா.ம.க. கூட்டணி வைத்தது. அப்போது



விடுதலைப் புலிகளை ஜெயலலிதா சாடி வந்தார். அதேசமயம், பா.ம.க. தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில தமிழீழப் போராட்டத்தை இந்திய அரசு அங்கீகரிக்க வேண்டும் என்று கோரியிருந்தது.

பாரதீய ஜனதா தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணியில் அங்கம் வகித்த கடந்த ஆண்டிலும் ராமதாஸ், தமிழீழத்தை அங்கீகரிக்குமாறு மத்திய அரசைப் பல முறை கோரிவந்தார்.

விடுதலைப் புலிகளின் ஆதரவாளரான வை.கோபால்சாமி கூட சில சமயங்களில் தனது ஈழ ஆதரவுக் குரலின் கருதியைக் குறைத்திருக்கிறார்.

தமிழினத் தலைவராக தி.மு.கவினரால் புகழப்படும் முதல்வர் கருணாநிதி பற்றிச் சொல்லவே வேண்டாம்.

தி.மு.க. எதிர்க் கட்சியா இருக்கும் போது, கருணாநிதிக்கு ஈழ ஆதரவு பொங்கிப் பிரவகிப்பதும் அதுவே ஆளும் கட்சியானதும் 'புலிகளுக்கு ஆதரவு இல்லை ஆனால், ஈழத்தமிழர் பிரச்சினை தீர்ந்தால் மகிழ்வேன்' என்று அவர் சமாளிப்பது வழக்கம்.

இவர்களிடையே அன்று முதல் இன்று வரை விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக உரக்கக் குரல் கொடுத்து வருபவர் டாக்டர் ராமதாஸ்.

அவர் இன்று அ.தி.மு.கவுடன் கூட்டணி வைத்துவிட்டார்.

இதனால் ஏற்கனவே அ.தி.மு.கவுடன் கூட்டணி வைத்துள்ள சோனியா தலைமையிலான காங்கிரஸுக்கும் மூப்பனார் தலைமையிலான தமிழ் மாநில காங்கிரஸுக்கும் தர்மசங்கடமான நிலை தோன்றியுள்ளது.

1997 ஆம் ஆண்டு குஜ்ராலின் ஐக்கிய முன்னணி அரசில் அங்கம் வகித்த தி.மு.கவுக்கு விடுதலைப் புலிகளுடன் தொடர்பிருப்பதாகக் கூறி, அந்த ஆட்சி கவிழ்வதற்கு காங்கிரஸ் ஆதரவு அளித்தது.

தவிர ராஜீவ் கொலையை அடுத்து, காங்கிரஸ் விடுதலைப் புலிகளைக் கடுமையாக எதிர்த்து வருகிறது. முன்னாள் காங்கிரஸ்காரர்களான மூப்பனார் தலைமையிலான தமிழ் மாநில காங்கிரஸாருக்கு சோனியாவைத் திருப்திப்படுத்துவதற்காக வேனும் பா.ம.கவை எதிர்க்க வேண்டியுள்ளது.

ஆகையால் பா.ம.க. அங்கம் வகிக்கும் அ.தி.மு.க. கூட்டணியில் தொடர்ந்து இருப்பது அந்த இரு கட்சிகளுக்கும் தன்மானப் பிரச்சினையாகும்.

சில ஊழல் குற்றச்சாட்டுக்களில் தண்டனை பெற்று, மேலும் சில வழக்குகளை எதிர்கொண்டுள்ள ஜெயலலிதா எதைத் தின்றால் பித்தம் தெளியும்? என்ற நிலையில் இருக்கிறார். ஆகையால் தி.மு.கவை குற்றஞ்சாட்டுவதற்கு வசதியாகவே புலி எதிர்ப்புக் கொள்கையை அவர் கடைப் பிடித்துவருகிறார். விடுதலைப் புலிகளை ஆதரித்தால் தன் மீதான வழக்குகள் அகலும் என்ற நிலைவந்தால் அப்போது புலிகளை வாழ்த்தவும் ஜெயலலிதா தயங்க மாட்டார் என்பது ஊரறிந்த ரகசியம்.

பா.ம.க. தற்போதைக்கு தமிழ்நாட்டில் தனியாக ஆட்சி அமைப்பது நடக்க முடியாத காரியம். இதனை நன்குணர்ந்தவர் டாக்டர் ராமதாஸ். இதனால் வந்தவரை லாபம் என்று கருதும் அவர், பா.ம.கவுக்கு தேர்தல்களில் எந்தக் கூட்டணி அதிக தொகுதிகளை ஒதுக்குகிறதோ அந்தக் கூட்டணியில் பா.ம.க. சேரும் என்று பகிரங்கமாக அறிவித்து, அதனை நடைமுறையில் பின்பற்றியும் வருகிறார்.

தி.மு.க. உட்பட எந்தப் பிரதான கட்சியும் கொள்கைகளைக் காற்றில் பறக்கவிட்டு கூட்டணிகளை மாற்றிவருவதால், ராமதாஸை இந்த விடயத்தில் அந்தக் கட்சிகளால் குற்றஞ்சாட்ட முடிவதில்லை.

இதனைச் சாதகமாகப் பயன்படுத்தி வரும் ராமதாஸ், தி.மு.க., அ.தி.மு.க. என்று தேர்தலுக்கு தேர்தல் கூட்டணிகளை மாற்றிவருகிறார். இத்தகைய நிலையில் அ.தி.மு.க., பா.ம.க. கூட்டணி அமைத்ததில் ஆச்சரியமேதுமில்லை.

தவிர, அ.தி.மு.க. கூட்டணி தமிழகத்தில் ஆட்சியமைத்தால் தமக்கும் அரசியல் பங்கு வேண்டும் என்று த.மா.கவும், காங்கிரஸும் வலியுறுத்திவந்தன.

ஆகையால் இந்த இரு கட்சிகளையும் கூட்டணியில் இருந்து கழற்றிவிட்டு, தி.மு.க. கூட்டணியில் இருந்து பா.ம.கவை பிரித்து அதனுடன் கூட்டணி அமைத்துத் தேர்தலை எதிர்கொள்ள ஜெயலலிதா திட்ட



மிட்டிருப்பதாக முன்னரேயே செய்திகள் கசிந்தன.

தற்போது அவற்றில் ஒரு பகுதி உண்மையாகிவிட்டது.

தமிழ்நாட்டில் தனி அணி ஒன்றை அமைத்து தேர்தலை எதிர்கொள்ள முடியும் என்று த.மா.க. - காங்கிரஸ் தலைவர்கள் சமீபகாலமாகவே கூறிவருகின்றனர். ஆனால் அதில் அவர்களுக்கே நம்பிக்கையில்லாத தன்மையே நிலவுகிறது.

மூன்றாவது அணி அமைத்து போட்டியிட முடியும். ஆனால் ஒரு தொகுதியிலாவது, அந்த அணியால் கட்டுப் பணத்தைக் காப்பாற்றிக்கொள்ள முடியுமா? என்பது விடை தெரிந்த கேள்வியாகும்.

ஆகவே, ராஜீவ் கொலையோடு சம்பந்தம் உள்ளதாகக் கூறப்படும் விடுதலைப் புலிகளுக்கு தீவிரமாக ஆதரவளித்துவரும் பா.ம.க. இடம்பெறும் கூட்டணியில் தொடர்ந்து இருந்து ஒரு சில சட்டசபைத் தொகுதிகளிலாவது வெற்றி பெறுவதா?

அல்லது

அ.தி.மு.க. கூட்டணியில் இருந்து வெளியேறி மூன்றாவது அணி அமைத்துப் போட்டியிட்டு 'உள்ளதும் போச்சு' என்று புலம்புவதா?

மூப்பனாரையும் சோனியாவையும் தூக்கமின்றி துவளவைக்கும் இந்த இரு கேள்விகளுக்கும் உடனடியாகப் பதில் தேடும் இக்கட்டில் அவர்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

ஆக மொத்தத்தில் தமிழகச் சட்டப் பேரவைத் தேர்தலில் மீண்டும் ஒருமுறை ஈழத்தமிழர் மற்றும் விடுதலைப் புலிகள் குறித்த விடயங்கள் புயலைக் கிளப்பப் போவது நிச்சயம்.

## டாக்டர் ராமதாஸின் சபதம்

*கடந்த வருடம், இட ஒதுக்கீடு குறித்து விவாதிப்பதற்காக டாக்டர் ராமதாஸை நாடாளுமன்றக் கட்டடத்தில் உள்ள தனது அலுவலகத்தில் வந்து சந்திக்கும்படி பிரதமர் வாஜ்பாய் அழைப்பு விடுத்திருந்தார்.*

*தேர்தல்களில் போட்டியிடுவதில்லை, நாடாளுமன்றம், சட்டசபை ஆகியவற்றில் கால் பதிப்பதில்லை என்ற தனது சபதத்தைக் கூறி நாடாளுமன்றத்தில் பிரதமரைச் சந்திக்க டாக்டர் ராமதாஸ் மறுத்திருந்தார்.*

*இந்தச் சம்பவத்தையடுத்து டாக்டர் ராமதாஸ் மீது வைத்திருந்த மதிப்பு மேலும் அதிகரித்துள்ளதாக பிரதமர் வாஜ்பாய் தெரிவித்திருந்தார்.*

*தேசிய ஜனநாயகக் கூட்டணியில் இருந்து பா.ம.க. விலகிய பின்னரும் வாஜ்பாயை மாமனிதர் என்று டாக்டர் ராமதாஸ் பாராட்டியிருந்தது குறிப்பிடத்தக்கது.*

# ஐ.தே.கட்சியின் பாதயாத்திரைக்கு மக்களிடமிருந்து பெரும் ஆதரவு

## எனினும் அதனால் அரசியல் நிலை மாறாதே!

**கொழும்பு மடல்**

புலிகள் ஒரு தலைப்பட்சமாக அறிவித்த யுத்த நிறுத்த காலம் நிறைவுபெற இன்னும் இரு வார காலம் மீதமிருக்கிறது. இவ்வேளையில் நாட்டின் சமாதான முன்னெடுப்புகள் ஒரு முக்கிய இலக்கை நோக்கிப் போய்க் கொண்டிருப்பதைக் காணமுடிகிறது. யுத்த முனையில் மோதிக் கொண்டிருக்கும் நிலையில் இருக்கும் இலங்கை அரசுக்கும் புலிகளுக்குமிடையில் பேச்சுவார்த்தைகள் நடைபெறலாம் என்ற எதிர்பார்ப்பு மக்கள் மத்தியில் பரவலாக எழுந்துள்ளதைக் காணமுடிகிறது.

இதற்கான பெரும் முயற்சியில் ஈடுபட்டிருக்கும் நோர்வே விசேட பிரதிநிதி எரிக்சொல்ஹேய்ம் இறுதியாக இலங்கைக்கு மேற்கொண்ட விஜயத்தின் போது குறிப்பிடத்தக்களவு வெற்றி கண்டிருந்தார் என்றே சொல்லப்பட்டது. அதன் எதிரொலியாகவே 53ஆவது சுதந்திர தின விழாவின்போது ஜனாதிபதி ஆற்றிய உரையின் நம்பிக்கை தரும் பகுதி உள்ளடக்கப்பட்டதாக நோக்குநர்கள் சுட்டிக் காட்டுகின்றனர். அதையடுத்தே அரசுக்கும் புலிகளுக்குமிடையே முதற்கட்டப் பேச்சுவார்த்தை நோர்வே தலைநகர் ஒஸ்லோவில் நடைபெற ஏற்பாடாகியுள்ளதாக கொழும்புப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டிருந்தன. இப்பேச்சுவார்த்தைக்கு இலங்கை அரசின் தரப்பில் அரசியலமைப்புத்துறை அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் மற்றும் நெதர்லாந்துக்கான இலங்கைத் தூதுவர் லயனல் பெர்னாண்டோ ஆகியோர் கலந்து கொள்வதுடன் புலிகளின் சார்பில் அன்ரன் பாலசிங்கத்துடன் வி.உருத்திரகுமாரும் கலந்து கொள்வார் என்று பத்திரிகைகள் செய்தி வெளியிட்டன.

எவ்வாறாயினும் இத்தகவல்கள் வெறும் ஊகங்களாகவே தொடர்ந்தும் இருந்து வருவதை அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது. அரச தரப்போ புலிகளோ அல்லது நோர்வே பிரதிநிதியோ இவ்விடயம் தொடர்பாக எந்தவிதமான கருத்தையும் வெளியிடாமல் இருப்பதால், இச் சமாதான முன்னெடுப்புகள் இன்னும் கனியும் நிலைக்கு வரவில்லை என்றே சொல்லத் தோன்றுகிறது. எனினும் இப்பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படுவதற்கும் எதிர்வரும் 18ஆம் திகதி பிரிட்டன் அரசு அறிவிக்கவுள்ள பயங்கரவாத பட்டியலுக்கும் நிறையவே தொடர்பு உள்ளதை அவதானிக்க முடிகிறது.

இப்பட்டியலுக்குள் புலிகளின் பெயரை உள்ளடக்க பிரிட்டன் அரசு நடவடிக்கை எடுக்குமானால் சமாதானப் பேச்சுவார்த்தைக்கு பெரும் குந்தகமாக அமைந்துவிடும் என்பதை வெளிநாட்டு சமூகங்கள் உணர்ந்திருப்பதைக் காணமுடிகிறது. அத்துடன தம்மை பயங்கரவாதிகள் என பிரிட்டன் அரசு முத்திரை குத்துமானால் பாரதூரமான விளைவுகளைச் சந்திக்க நேரிடும் என அவ்வியக்க அரசியல்

**ராகவன்**

ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் ஏற்கனவே எச்சரிக்கை விடுத்துள்ளதையும் இங்கு கவனத்தில் கொள்ளவேண்டி உள்ளது. எவ்வாறாயினும் எதிர்வரும் 24ஆம் திகதிக்குள் இரு தரப்பு பேச்சுவார்த்தைக்கான அடித்தளம் அமைக்கப்படல் வேண்டும் என்பதே சமாதான விரும்பிகளின் எதிர்பார்ப்பாக உள்ளது.

### வரவு செலவுத் திட்டம்

இதற்கிடையில் நடப்பு ஆண்டுக்கான வரவு செலவுத்திட்ட ஒதுக்கீடு சட்டமூலம் கடந்த வியாழனன்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. எதிர்வரும் மார்ச் மாதம் தாக்கல் செய்யப்படவுள்ள வரவு செலவுத்திட்ட அறிக்கைக்கான முன்னோடியாகவே மேற்படி ஒதுக்கீட்டுச் சட்டமூலம் சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது. இதன்படி நடப்பு ஆண்டுக்கான அரசின் கருமங்களுக்கான செலவாக 36,497

(9ஆம் பக்கம் பார்க்க)

# திருமண வாழ்த்து

இன்று (11-02-2001) ஞாயிற்றுக்கிழமை லண்டனில்
திருமணம் செய்து கொள்ளும்

குருமன் கார்டின்ஸ், வவுனியா
**திரு.திருமதி கனகசிங்கம்**
தம்பதியினரின்
சிரேஷ்ட புதல்வன் திருநிறை செல்வன்
**இராஜசீலன்**

தாமோதரம்பிள்ளை வீதி, சாவகச்சேரி
**திரு.திருமதி செல்வராஜா**
தம்பதியினரின்
சிரேஷ்ட புதல்வி திருநிறை செல்வி
**தேவகி**

தம்பதிகளை
"அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கைப்
பண்பும் பயனும் அது" என்ற வள்ளுவன் வழிநின்று
மங்கலமான மனைமாட்சியின் நன்கலமான
நன்மக்கட் பேறோடு பதினாறும் பெற்றுப்
பல்லாண்டுகள் வையத்துள் வாழ்வாங்கு வாழ்கவென
*வாழ்த்துகின்றோம்!*

திரு.திருமதி ச.மயில்வாகனம்
குடும்பமும் உறவினர்களும்,
மீசாலை வடக்கு,
மீசாலை.

தற்காலிக முகவரி:
*சாமியன் அரசடி,*
*கரவெட்டி.*

(83849)


சாவகச்சேரி 'வித்தகம்'

# சிறுவர் இல்லப் பிள்ளைகள் வன்னியிலிருந்து வந்தனர்

வடமராட்சி,பெப்.11

சாவகச்சேரி வித்தகம் சிறுவர் ஆதரவு இல்லத்தைச் சேர்ந்த 14 சிறுவர்கள் செஞ்சிலுவைச்சங்க சர்வதேசக் குழுவினால் கடந்த வியாழன் கப்பல் மூலம் பருத்தித்துறைக்கு அழைத்து வரப்பட்டு 'வித்தகம்' பரமசாமி சுவாமிகளிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

கடந்த ஜூன் மாதம் தென்மராட்சியில் இடம்பெயர்வு நடைபெற்றுக் கொணடிருந்த வேளையில், வித்தகம் சிறுவர் ஆதரவு இல்லத்திலிருந்த 23 சிறுவர்களில் 6 பேர் பெற்றோர், உறவினர்களால் அழைத்துச் செல்லப்பட்டிருந்தனர். ஏனைய பதினைந்துபேரும அந்தப் பகுதியில் சிக்குண்டதால் வன்னிக்கு அழைத்துச்செல்லப்பட்டிருந்தனர்.

இச்சிறார்களை இங்கு வரவழைப்பதற்கு வித்தகம் பரமசாமி சுவாமிகள செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவுடன் தொடர்பு கொண்டு எடுத்த நடவடிக்கையின் பயனாக சுமார் எட்டு மாத கால இடைவெளியின் பின்னர் 15 சிறார்களும் அழைத்து வரப்பட்டனர்.

பருத்தித்துறையில் வைத்துச் சிறார்களைப் பொறுப்பேற்ற சுவாமிகள அவர்களைத் தம்பசிட்டியில் உள்ள தமது இல்லத்திற்குக் கூட்டி வந்தார். பின்னர் அவர்களைப் பெற்றோர்கள், உறவினர்களிடம் ஒப்படைத்தார்.

பெற்றோர், உறவினர்களை எட்டு மாத காலமாகக் காணாது வதங்கிய சிறார்களின் ஏக்கத்தைத் தணிக்கும் முகமாக அவர்களை ஒப்படைத்துள்ளேன். ஒரு சில மாதங்களில் வடமராட்சியில் பொருத்தமான இடம் ஒன்றைத் தெரிவு செய்து மீண்டும் சிறுவர் ஆதரவு இல்லத்தை ஆரம்பிக்கும் வேளையில் இச்சிறார்களையும் சேர்த்துக் கொள்வோம் -என்று வித்தகம் சுவாமிகள் தெரிவித்தார். (அ-173-117)


# 45ஆம் நாள் நினைவஞ்சலி



## அமரர் பொன்னையா கமலரூபன்

(விரிவுரையாளர், தமிழ்த்துறை, யாழ்.பல்கலைக்கழகம்)

பூவுலகில் 30-12-1970

விண்ணுலகில் 31-12-2000

இனிக்க இனிக்கத் தமிழை எமக்களித்தவரே!
இனித் தமிழை எமக்கென்று யார் அளிப்பார் உம்மைப்போல்
கன்னித் தமிழை நாங்கள் காதலிக்க வைத்தவரே கமலரூபா!
காணாமல் எம் கண்ணில் மறைந்து காததூரம் போனதெங்கு?

**"நீண்ட நாள்கள் நல்லவர்கள் வாழ்வதில்லை**
**மாண்டவர்கள் சில பேரை மறப்பதற்கு முடிவதில்லை"**

எமது ஆசானின் ஞாபகார்த்த நூல் வெளியீட்டு நிகழ்வுகள் இன்று காலை 9.00 மணிக்கு **MATHS CENTRE** இல் நடைபெறும்.

மொடேன் கொமோர்ஸ்,
*சிவன் வீதி,*
*தும்பளை, பருத்தித்துறை.*

(83929)

**- நிர்வாகி,**
ஆசிரியர்கள், மாணவர்கள்.



# அந்தியேட்டி, சபிண்டிகரண அழைப்பு



செல்வன்
## சிவபாலசிங்கம் வேலவமூர்த்தி

01-11-2000 அன்று அமரத்துவமடைந்த எமது அன்புக் குமாரன் செல்வன் சிவபாலசிங்கம் வேலவமூர்த்தி அவர்களின் ஆத்ம சாந்திக் கிரியைகள் 13-02-2001 செவ்வாய்க்கிழமை பொலிகண்டியிலுள்ள எமது இல்லத்தில் நடைபெறவுள்ளது.

காலை 6 மணிக்கு அந்தியேட்டிக் கிரியைகள் நடைபெற்று அஸ்தி கந்தவன சமுத்திரத்தில் சேர்க்கப்படும். பகல் 11 மணிக்கு சபிண்டிகரண கிரியைகள் நடைபெற்று 12.30 மணியளவில் மதியபோசனம் நடைபெறும். இக்கிரியைகளிலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கிறேன்.

சி.சிவபாலசிங்கம்
*(கிராமஅலுவலர், பொலிகண்டி)*
குடும்பத்தினர்.

*ஆலடி,*
*பொலிகண்டி.*

(83979)



# 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
02 - 08 - 1932



உதிர்வு
05 - 02 - 1999

## திருமதி அன்னம்மா தனேஸ்வரன்

(கோண்டாவில் இந்து மகாவித்தியாலய இளைப்பாறிய ஆசிரியை)

**திதி: 12 - 02 - 2001**

எமது வாழ்வுக்கும் வளத்துக்கும் அனைத்துமாகி
உயிரினில் உறைந்துவிட்ட தங்களை
நமது இதயத்தின் ஒவ்வொருதுடிப்பிலும் உணர்கிறோம்!
பரசுகம் சுவைக்கும் தங்களது பாத மலர்களுக்கு

இதய அஞ்சலி செலுத்தும்

தகவல்:-
க.வை.த.நக்கீரன்
(இளையமகன்)
கோண்டாவில்.

அன்பு மக்கள்,
மருமக்கள்
பேரமக்கள்.,
சகோதரர்,கணவர்.

(83962)

# புதிய நாணய மாற்றுக் கொள்கையால்

**கடந்த ஜனவரி 30ஆம் திகதி யாழ்.பல்கலைக்கழக இளம் பொருளியலாளர் மன்றம் "இலங்கையின் நாணயமாற்று விகிதமும், அண்மைக்கால நெருக்கடியும்" என்ற தலைப்பில் கருத்தரங்கு ஒன்றை ஒழுங்கு செய்திருந்தது.**

**கைலாசபதி கலைஅரங்கில் இடம்பெற்ற அந்தக் கருத்தரங்கில் பொருளியல்துறைத் தலைவர் வி.பி.சிவநாதன் கூறிய கருத்துக்களின் தொகுப்பு இங்கே பிரசுரமாகிறது.**

வணிகவியல் துறைக்குள் முடங்கிக் கிடந்த நாணய மாற்று விகிதம் இன்று எல்லோராலும் பேசப்படும் ஒரு விடயமாகி விட்டது.

அமெரிக்க டொலருக்கு எதிரான இலங்கை ரூபாவின் மதிப்பு வீழ்ச்சியடைந்ததே இதற்குக் காரணம்.

நாடு 48ஆம் ஆண்டு சுதந்திரமடைந்ததில் இருந்து 77ஆம் ஆண்டு வரை பிரிட்டிஷ் நாணயமான ஸ்டேர்லிங் பவுண்ட்ஸில் வெளிநாட்டு வர்த்தகம் இடம்பெற்று வந்தது.

டொலரைப் போலவே பவுண்ட்ஸும் பொருளாதார வல்லமை பெற்ற 'வன்நாணயமாக' இருந்ததால் இது சாத்தியமானது. அப்போது இலங்கை ரூபாவை பவுண்ட்ஸுக்கு மாற்றி, அதனை வெளிநாடுகளுக்குக் கொடுத்து இறக்குமதி மேற்கொள்ளப்பட்டது.

## பாமரன்

1977ஆம் ஆண்டு திறந்த பொருளாதாரக் கொள்கை அறிவிக்கப்பட்டது. அத்துடன் இலங்கை பிரிட்டிஷ் நாணயக்குடும்பத்தில் இருந்து மாறியது.

நிலையான நாணய மாற்றுக் கொள்கையை இலங்கை கடைப்பிடித்தபோது ஒரு பவுண்ஸ் 15 ரூபாவுக்குச் சமமாகப் பெறுமதி கொண்டிருந்தது.

இலங்கை நாணயத்தின் பெறுமதியை பகிரங்க அறிவிப்பின் மூலம் மத்திய வங்கி அதிகரித்து அல்லது குறைத்து நாணய மாற்று விகிதத்தைத் தீர்மானித்து வந்தது.

77ஆம் ஆண்டின் பின்னர் டொலரில் வெளிநாட்டு வர்த்தகம் மேற்கொள்ளப்பட்டது. அப்போதும் டொலருக்கு எதிராக ரூபாவின் மதிப்பு மத்திய வங்கியால் கட்டுப்படுத்தப்பட்டது. இது முகாமைத்துவ நாணயமாற்று விகிதம் எனப்படும்.

அரசியல், பொருளாதார நெருக்கடிகளை வெளிக்காட்டாமல் மறைக்க முகாமைத்துவம் செய்யப்பட்ட நாணயமாற்றுவிகிதம் உதவியது.

சிங்கப்பூர் வர்த்தக சந்தையில் டொலருக்கு எதிராக ரூபாவின் மதிப்பு வீழ்ச்சியடைந்தபோதெல்லாம், மத்திய வங்கி, சொத்து அடமானம் அல்லது பரிமாறல் மூலம் ரூபாவின் மதிப்பு வீழ்ச்சியடையாமல் தடுத்து வந்தது.

இது உண்மையை மறைத்து ரூபாவின் மதிப்பு குறையாத மாயத்

வெளிநாட்டுப் பொருள்களை இறக்குமதி செய்வதால் உள்நாட்டு உற்பத்திகளை - விவசாய உற்பத்திகளை கூட - கவனத்தில் கொள்ளவில்லை. அரிசி, உருளைக் கிழங்கு போன்றவை கூட இறக்குமதியாயின.

பெருந்தோட்டப் பயிர்ச் செய்கையில் கிடைக்கும் தேறிய வருமானமே குறிப்பிடத்தகுந்ததாக உள்ளது.

ஆனாலும் பெருநதோட்ட பயிர்ச செய்கையில் அபிவிருத்தி ஏற்படவில்லை அல்லது கவனம் எடுக்கப்படவில்லை.

இந்நிலையில் நாணயமாற்று

காரணமாக இருக்கலாம்.

நாணயமாற்று விகிதத்தை மிதக்கவிட்டால்தான் உதவி கிடைக்கும் என்ற சூழ்நிலையிலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டதாகக் கருதப்படுகிறது.

இந்த முடிவால் 'லீவர் பிரதர்ஸ்', 'சொனி', 'பெப்சி' போன்ற பல்தேசிய நிறுவனங்களின் கையில் நாடு கொடுக்கப்பட்டுவிட்டது.

தவிர, அதிகமானவற்றை இந்தியாவிலிருந்து நாம் இறக்குமதி செய்வதால், இலங்கையின் ரூபா மதிப்பை இந்தியா தீர்மானிக்கப் போகின்றது.

நாணயச் சந்தையில் இந்தியா கூடிய செல்வாக்கைப் பெறும். மொதத்தத்தில் அமெரிக்கா, ஐரோப்பா, இந்தியா ஆகியவையே பலனடையப்போகின்றன.

## பல்தேசிய நிறுவனங்களிடம் நாடு அடிமைப்படுமாம்

தோற்றம ஒன்றை ஏற்படுத்தி வந்தது. நாட்டில் பணவீக்கம் இல்லை எனக் காட்டி வெளிநாட்டு நிதி உதவிகளைப் பெற இது உதவியது.

ஆனாலும் சில மாதங்களுக்கு முன்னர் ரூபாயின் பெறுமதி 6 சதவீத்தால் இறக்கப்பட்டது.

வெளிவிடப்படாத, பகிரங்கப்படுத்தப்படாத போர்ச் செலவே இதற்குக்

விகிதம் மிதக்கவிடப்படுவது தவிர்க்க முடியாத ஒன்று.

உலகமயமாக்கலின் விளைவு இது.

மிதக்க விடப்பட்ட நாணய மாற்று விகிதத்தால் உற்பத்தியாளர்கள் சிக்கல்களை எதிர்நோக்குவார்கள்.

ஓர் இயந்திரத்தை வாங்குவ

நாணயமாற்று விகிதத்தை மிதக்கவிட்டதால் வெளிநாட்டு முதலீடுகள் அதிகரிக்கும் என்று கூறப்படுகிறது.

வெளிநாட்டு முதலீடுகளால் தொடங்கப்படும் நிறுவனங்களின் செயற்பாடுகளில் அரசு தலையிட முடியாது. ஆகையால் அவற்றின் நடவடிக்கைகளில் குறைபாடுகள் தென்பட்டாலும் அரசு எதுவும்



வெளிநாட்டு உல்லாசப் பயணிகளின் வருகை அதிகரிக்கும் என்று ஒரு கருத்து நிலவுகிறது.

உல்லாசப் பயணிகளின் வருகை அதிகரிக்கும் என்பதனை ஒப்புக் கொண்டாலும், அவர்களுக்குத் தேவையான வசதிகள் முதல் உணவு வகைகள் வரை அனைத்துமே இறக்குமதி செய்யும் நிலையில் இருப்பதால் இறக்குமதிச் செலவு அதிகரிக்கும் வாய்ப்புகளே தென்படுகின்றன.

ரூபாயின் பெறுமதி குறைவதன் எதிரொலியாக தென்னிலங்கையில் வறுமை நிலையில் இருப்போரின் எண்ணிக்கை அதிகரிக்கும். வருமான ஏற்றத்தாழ்வுகளால் களவு, கொள்ளை போன்ற சட்டவிரோதச் செயற்பாடுகள் அதிகரிக்கும். தென்னிலங்கை கிராமவாசிகள் வீதிகளில் பிச்சை எடுக்கும் நிலைக்கு தள்ளப்படக்கூடும்.

வடக்கு-கிழக்கு மாவட்டங்களில் வாழும் மூன்றில் ஒரு குடும்பங்களைச சேர்ந்த உறுப்பினர்கள் வெளிநாடுகளில் உள்ளனர். இதனால் அந்தக் குடும்பங்களுக்கு வெளிநாடுகளில் இருந்து கிடைக்கும் பணவரத்து அதிகரிக்கும்.

## தென்னிலங்கையில் வாழும் மக்கள்

காரணம்.

இந்த நிலையில் 23.01.2001 முதல் நாணய மாற்று விகிதத்தை தீர்மானிப்பதில் இருந்து மத்திய வங்கி விலகிக்கொண்டது. அன்று முதல் நாணய மாற்று விகிதம் மிதக்க விடப்பட்டது.

இந்த முடிவுக்கு முக்கிய காரணம் ஏற்றுமதிக்கு இயல்பில்லாத இறக்குமதி அதிகரிப்பே.

67ஆம் ஆண்டில் ஏற்றுமதியை அதிகரிக்க மேற்கொள்ளப்பட்ட பல திட்டங்கள் தோல்வியில் முடிவுற்றன. 60களில் இறக்குமதிக் கட்டுப்பாடு உட்பட பல திட்டங்கள் பலனற்றுப் போயின.

நாட்டை சிங்கப்பூர் போல ஆக்கப்போவதாக கூறினார்கள். ஆனால் இறக்குமதிப் பொருள்களை சிங்கப்பூர் வாசிகள் போல நுகரப் பழகியதைத் தவிர சிங்கப்பூர் போல ஏற்றுமதி அதிகரிக்கவில்லை.

ஆயுதங்கள் உட்பட இறக்குமதியாகும் பொருள்கள் அதிகரித்தன. அத்துடன் வர்த்தகர்களின் தந்திரத்தால் - தொலைக்காட்சி விளம்பரங்கள் போன்றவற்றால் நாம் நுகர்வு மயமாக்கப்பட்டோம்.

தற்கு ஒப்பந்தம் செய்யும் போது உள்ள விலையும், சுமார் 3 மாதங்கள் கழித்து அது வந்து சேரும் போது டொலரின் பெறுமதி மாற்றத்தால் ஏற்படும் விலை அதிகரிப்பும் இந்தச் சிக்கலுக்கு மூல காரணமாகும்.

போர் மேலும் தொடர்ந்தால் நாட்டின் பொருளாதாரம் அதலபாதாளத்துக்குச் செல்லும். நாணய மாற்று விகிதம் மிதக்க விடப்பட்டதுக்கு பரிஸில் நடந்த உதவி

செய்யமுடியாது. தவிர அந்த நிறுவனங்கள் எப்போது வேண்டுமானாலும் இலங்கையை விட்டு வெளியேறலாம். அப்போது அங்கு வேலை பார்த்தவர்கள் வேலையிழப்பார்கள்.

உள்ளூர் உறபத்தி அதிகரிக்கும் எனக் கூறப்படுகிறது. ஆனால் வாழ்க்கைச் செலவு அதிகரிப்பதால் உள்ளூர் உற்பத்திகளில் ஈடுபடும் தொழிலாளர்களின் ஊதியம் அதிகரிக்கும். இதனால் உற்பத்

## பிச்சை எடுக்கும் நிலை வரலாம்

வழங்கும் நாடுகளின் கூட்டம் ஒரு காரணமாக இருக்கலாம். எதிர்பார்த்த உதவி கிடைக்காததால் அல்லது நிபந்தனைகள் விதிக்கப்பட்டதால் இந்த முடிவு எடுக்கப்பட்டிருக்கலாம்.

பொருளாதார ஸ்திரத்தன்மையைப் பேணும் உலகவங்கி, நாணயங்களின் பெறுமதியைப் பாதுகாக்கும் சர்வதேச நாணய நிதியம் ஆகியவற்றின் அழுத்தங்கள்

திச் செலவு அதிகரித்து, அதன் மூலம் பொருள்களின் விலைகூடும். விலை கூடிய பொருளகளை வெளிநாடுகள் வாங்கப்போவதில்லை. இதனால் ஏற்றுமதி அதிகரிக்கப்போவதில்லை.

வெளிநாட்டு நாணய மதிப்பு அதிகரித்திருப்பதால், குறைந்தளவு டொலருக்கு அதிக இலங்கை ரூபாயை மாற்றிக்கொள்ள முடியும். இதனைச் சாதகமாகக் கொண்டு

இதேவேளை மற்றைய குடும்பங்கள் வறுமைக்கோட்டுக்குக் கீழ் வாடநேரிடும்.

இதனால் சமுதாயத்தில் மிகப் பாரிய தர இடைவெளி தோன்றும்.

கடந்த பல வருடங்களாக ஏற்றுமதியை அதிகரிக்க எடுக்கப்பட்ட முயற்சிகள் தோல்வியடைந்ததும், தொடரும் யுத்தமும், இன்றைய நெருக்கடியின் மூல காரணங்கள் ஆகும். ✪

---

# கோமாதா எங்கள் குலமாதா! பசுக் கொலை பாதகச் செயல்!!

**தெய்வீகப் பசுக்களைப் பாதுகாத்தல் தொடர்பான கலந்துரையாடல் இன்று பிற்பகல் கந்தர்மடம் குமாரசாமி வீதியிலுள்ள சிவகுருநாதபீடம் வேதாந்த மடத்தில் நடைபெறுகிறது.**

**இதனையொட்டி கோமாதாவைச் சிறப்பிக்கும் இக்கட்டுரை பிரசுரமாகிறது.**

*"வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்"* - சம்பந்தர்

*"வரப்புயர நீருயரும்*
*நீருயர நெல்லுயரும்*
*நெல்லுயரக் குடியுயரும்*
*குடியுயரக் கோனுயர்வான்"*

என்பது ஆன்றோர் திருவாக்கு.

பூமியில் பிறந்தவுடன் அம்மா என்று அழகிய தமிழில் உரைப்பவள் கோமாதா - அரசனுக்கு வரையாது செல்வத்தைத் தருபவள் கோமாதா. அவள் குடிகளின் உயிரை ஊட்டம் தந்து வாழ வைப்பவள்.

உயிருக்கும் உடலுக்கும் உறுபிணி தீர்த்து ஊட்டம் நல்கும் பாலைத் தருபவள் கோமாதா. ஆவின் ஐந்து அம்சங்கள் அரன் உவந்து ஏற்பன -

சைவ நன் மக்களது திருநெற்றியை அலங்கரிப்பது ஆவின் சாணம நல்கிய திருநீறு. இதையே

*காண இனியது நீறு*
*கவினைத் தருவது நீறு*
*பேணி அணிபவர்க்கெல்லாம்*
*பெருமை தருவது நீறு*
*மாணந்தகைவது மதியைத்*
*தருவது திருநீறு -*

என்பர் சம்பந்தர்.

*ஆவினுக்கு அருங்கலம் அரன் அஞ்சாடுதல்* - என்பர் அப்பர்.

பசு உலக உயிர்க்கெலாம் மாதா போன்றது. மனித வர்க்கத்துக்கு உயிரூட்டம், உடலூட்டம் இரண்டையும் தருபவள் கோமாதா.

**கோமாதாவைக் கொல்ல எத்தனித்தவர்கள் தமது தாயைக்கொன்ற பாவத்தைத் தாமாகத் தேடிக்கொள்கின்றார்கள்** என்பதைத் தர்ம சாஸ்திரங்கள் விரிவாகச் செப்புகின்றன. பசுவைப் போற்றும் உயர் பண்பு உலகை வாழவைத்த பண்பாக இந்து தர்மத்தைக் கடைப்பிடிப்பவர்க்கு இன்றியமையாததும் ஆகின்றது.

**நா.வி.மு.நவரத்தினம்**
**தலைவர்,**
**திருநெறிய தமிழிசைச் சங்கம்**
**யாழ்ப்பாணம்**

ஓர் உண்மைச்சம்பவம்:-

ஸ்ரீகாஞ்சி காமகோடி பீட ஜகத்குரு - ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகள் ஒருமுறை சிதம்பரம் செட்டியார் சத்திரத்துக்கு வருகை தந்து பக்த கோடிகளுக்கு கிருபா நோக்கம் செய்திருந்தார்கள் (1977 ஆம் ஆண்டு). அவர்கள் வழமையாகக் கோ-பூசை செய்த பின்னர்தான் கஜ-பூசை செய்வது வழக்கம்.

சிதம்பரம் பெரிய கோயில் பட்டத்துயானையும் அங்கு வந்து சுவாமிகளது பூசையை ஏற்கத் தயாராக இருந்தது. காலை 7.30 மணியிருக்கும். சுவாமிகள் கோபூசை முடித்து கஜபூசையை முடித்து கோவின் திருவாயில் பழம் வழங்கினார்கள். இதையடுத்து பக்கத்தில் நின்ற ஒரு பிரபல சட்டத்தரணியிடம் பழத்தைக் கொடுத்து யானைக்கு உண்ணக் கொடுத்தார்கள்.

இந்நிகழ்ச்சியைக் கூர்மையாகக் கவனித்த யானை கோபா வேசத்தால் அதாவது தனக்கு முதலில் பழம் தரவில்லை என எண்ணி - சட்டத்தரணியைத் துதிக்கையால் அலாக்காகப் பழத்துடன் தூக்கி நிலத்தில் ஓங்கி அறையப் புகுந்தது. இதைக் கண்ட சுவாமிகள் கமண்டலத்து நீரை எடுத்து யானை மீது மந்திர யோகத்தால் வீசினார்கள்.

என்னே அதிசயம்!

ஆயிரம் பேரால் கட்டி இழுக்க முடியாத அந்தப் பெரிய யானை துதிக்கையை மண்டியிட்டு நிலத்தில் மல்லாந்து வீழ்ந்தது!!

இந்த அதிசயிப்பு நிகழ்வைப் பார்த்த பல்லாயிரம் மக்களது கண்களில் ஆனந்த நீர் வெள்ளமாகப் பாய்ந்தது.

உண்மையாக நடந்த நிகழ்வை தரிசித்தவர்களின் அலைவெள்ளத்தில் அடியனும் ஒருவன்.

ஸ்ரீகாஞ்சி சுவாமிகளுக்கு இவ்வாறான பேராற்றலை வழங்கியவள் யார்? கோமாதாவேயாம். கோமாதாவின் தெய்வீக ஆற்றலுக்கு இந்தச் சம்பவம் சிற்றுரைகல்.

முப்பத்து முக்கோடி தேவ அதிபதிகளும் எண்ணாயிரம் கோடி தேவர்களும் கங்கை, யமுனா, கோதாவரி முதலிய தீர்த்தங்களும் கணபதி, குகன், சிவன், பிரம்மா, விஷ்ணு, பார்வதி, சரஸ்வதி, மகாலஷ்மி முதலான தெய்வங்களும் அண்ட சராசரங்களும் கோமாதாவில் அடக்கம்.

பூவுலகில் வாழும் மனிதர்களுக்கு சர்வதேவ தரிசனத்தையும், சர்வ தீர்த்த பலனையும் நீண்ட ஆயுளையும் செல்வ சௌபாக்கியத்தையும் வரையாது வழங்கும் அற்புதத் தெய்வம் பசு.

மண்ணில் வாழும் அருமை மனிதர்களே! பசுவுக்கு வாழ்வு தாருங்கள்! உங்கள் வாழ்வு வளமாய் ஓங்கும்!

*"கோமாதா எங்கள் குல மாதா"*
*"தாய் தன் பிள்ளைகளுக்கு மாத்திரம் பால் தருவாள் -*

கோமாதா ஊரில் எல்லோருக்கும் பால் தருவாள். ✪

# இல்லறத்தில் இனிதே இணைந்த இருபத்தைந்து ஆண்டுகள் வெள்ளி விழா

1976-02-11 2001-02-11

கனடாவில் வசிக்கும்

**தவராஜா-சந்திரா தம்பதியினர்**

இல்லறத்தில் இணைந்த 25 ஆவது ஆண்டு நிறைவையொட்டி 14.02.2001 புதன்கிழமை மாலை 5.00 மணிக்கு (புதிய நேரம்) ஊர்காவற்றுறை புனித சூசையப்பர் ஆலயத்தில் நன்றித் திருப்பலி நடைபெறவுள்ளது. தம்பதியினருக்கு இறைவனின் நல்லாசிகள் கிடைக்கும் வண்ணம் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் இத்திருப்பலியில் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நன்றி

2360, APT # 211,
BIRCHMOUNT ROAD,
SCHARBOROUGH- ONT
M1.T2.M4..
CANADA. (83999)

'லக்கி ஸ்ரோஸ்'
சுருவில் வீதி,
ஊர்காவற்றுறை.

- ஆலயப் பங்கு மக்கள்

# கண்ணீர் அஞ்சலி

We Serve

கோப்பாய் லயன்ஸ் கழக உறுப்பினரும்
முன்னாள் தலைவருமான
**லயன் F.A. சில்வஸ்டர்**
*அவர்களின் அன்புச் சகோதரி*
**செல்வி பெனிக்னா றஜனி பிரான்சிஸ்பிள்ளை**

அவர்கள் இறைவன் அடி எய்தியதை இட்டு எமது கோப்பாய் லயன்ஸ் கழக அங்கத்தவர்கள் அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டி நிற்கின்றார்கள்.

லயன் ஜீ.ரி.ஞானசேகரவேல்
செயலாளர்
*கோப்பாய் லயன்ஸ் கழகம்.*

(84010)

# 31 ஆம் நாள் நினைவலையும், அந்தியேட்டி அழைப்பும், நன்றி நவில்தலும்!

தோற்றம்
1922
-
09
-
26



மறைவு
2001
-
01
-
11

## அமரர் வல்லிபுரம் சின்னத்துரை

கண்ணின் மணியாய் எமையாக்கி
இமையாக நீயிருந்தீர்.
கண்ணீர் மழையாய் சொரிகின்றோம்
கனிவான உங்கள் முகமெங்கே?
எண்ணில் அன்றில் வாழ்வைப் போல்
எண்ண முடியுமா இனிமேலும் -- சுடு
மண்ணில் மண்புழுவை ஒத்திங்கே
தவிக்கின்றோம் பார் ஐயா! உன்
கண்ணெனக் காத்த பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகளைக் காண
மீண்டும் ஒரு பிறப்பு எடுத்திடு ஐயா!
சாந்தி! சாந்தி! சாந்தி!

அன்னாரது அந்தியேட்டிக்கிரியைகளும், அதனைத் தொடர்ந்து மதிய போசன வைபவமும் இன்று (11-02-2001)ஞாயிற்றுக் கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெற இருப்பதனால் அனைவரையும் இந்நிகழ்வுகளில் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைப்பதுடன், இவரது இறுதிக்கிரியைகள் வரை அனைத்து உதவிகளும் நல்கி, எம் துன்பத்திலும் பங்கு கொண்ட அனைத்து அன்புள்ளங்களுக்கும் எம் நன்றிதனை நவில்கின்றோம்.

| மக்கள் | மருமக்கள் |
|---|---|
| திரு.சற்குணலிங்கம் | - திருமதி சுசீலாதேவி |
| திரு.அமிர்தலிங்கம் | - திருமதி பத்மலீலா. |
| திரு.மகாதேவன் | - திருமதி விஜயலட்சுமி. |
| பேரப்பிள்ளைகள் | |

*கந்தையா உபாத்தியாயர் வீதி,*
*கந்தரோடை,*
*சுன்னாகம்.* (83966)

# நயினையில் கண்காட்சி

வேலணை பெப்.11

வடக்கு-கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் அனுசரணையுடன் தீவுப்பகுதி தெற்கு பிரதேச செயலகத்தினால் நடத்தப்படும் மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் தையல், மனையியல், கைப்பணிக் கண்காட்சி நயினாதீவு மகா வித்தியாலயத்தில் நாளையும் நாளை மறுதினமும் இரு தினங்கள் காலை 10 மணியிலிருந்து மாலை 5 மணிவரை நடைபெற ஏற்பாடாகி உள்ளது.

தீவுப்பகுதி தெற்கு பிரதேச செயலர் இ.இரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் ஜே.எக்ஸ்.செல்வநாயகமும், கௌரவ விருந்தினர்களாக வேலணை பிரதேச சபைத் தலைவர் ந.கருணாகரகுருமூர்த்தி மற்றும் ஓய்வு பெற்ற முன்னாள் வேலணை உதவி அரசாங்க அதிபர் ஆ.தியாகராசா ஆகியோர் கலந்து கொள்ள உள்ளனர்.

(ஐ-167)

# விற்பனையாகின்றது

ரமணிச்சந்திரனின்
உயிராய்
இருக்க வருவாயா?
(Dec. - 2000)
மற்றும் அனைத்து வகை
நாவல்களும்
**மண்டேலா**
**புத்தக நிலையம்**
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
(83997)

# BIO TEC

பரமேஸ்வராச் சந்தி,
திருநெல்வேலி.

சிறந்த காஸ்
ஊட்டிய
அமெரிக்க
எஸ்சென்சுடன்
தயாரித்த

**ORANGE** - ஒறேஞ்
**NECTA** - நெக்ரா
**GINGER BEER** - இஞ்சிசோடா
**CHAMP COLA** - சம்ப் கோலா
**SODA** - உப்புச்சோடா

**2D COLA - 2D கோலா**
மெலிவதற்கு
**DIET, DIABETIC**
சர்க்கரை வியாதிக்கும்
கொலெஸ்றோல்
குறைவதற்கும்

**இரத்தம் சிறுநீர்**
**பரிசோதனைகள்**
**காலை 9 - 12**
(83927)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



**திரு. செல்லத்துரை பரமசிவம்பிள்ளை** (D.A.M.)
(வைத்தியப் பொறுப்பதிகாரி இலவச சித்த ஆயுள்வேத வைத்தியசாலை, வலி.மேற்குப் பிரதேச சபை - சுழிபுரம்.)

அவர்கள் 04-01-2001 ஆம் திகதி வியாழக்கிழமை யாழ். மாவட்ட நீதிபதி **திரு.இ.த.விக்னராஜா** முன்னிலையில் சமாதான நீதிவானாகப் பதவியேற்று சத்தியப்பிரமாணம் செய்து கொண்டமையையிட்டு எமது இதயபூர்வமான நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதோடு,

அவரது பணி மேன்மேலும் சிறப்புறப்
பாராட்டி வாழ்த்துகின்றோம்.

**அராலி வடக்கு**
**சனசமூக நிலையத்தினர்.**

(C/15253)

# சமஸ்கிருத வகுப்புகள்

## தர்மசாஸ்தா குருகுலம்

**12-02-2001 திங்கள் முதல் புதிய வகுப்புக்கள்**

*காலை 6.30 மணி* - வைதீக கிரியைகள்
*காலை 8 மணி* - நாகர இலக்கண இலக்கிய பாடங்கள்
*பகல் 1 மணி* - மண்டபப் பூஜைகள்
*பகல் 2 மணி* - புதிய, கணபாடங்கள்
*பகல் 3 மணி* - பாடசாலை மாணவர்க்கு இலகு பாடங்கள்

**அனைத்து வகுப்புகளும் இலவசம்**

(83975) சிவஸ்ரீ தா. மகாதேவக்குருக்கள்

# பாலஸ்தாபனம்

வட்டு மேற்கு, உலக்கைபளச்சி பத்திரகாளி அம்பாள் சமேத வீரபத்திர சுவாமிக்கு நாளை (12. 02. 2001) திங்கட்கிழமை காலை 7 மணி தொடக்கம் 8 மணி வரையிலான சுபமுகூர்த்தத்தில் பாலஸ்தாபனம் நடைபெறும்.

**ஆலயப் பிரதமகுரு:**
சோ.லக்ஷ்மி நாராயணசர்மா
*சித்தன்கேணி.*

பிரதம குரு:
தாணு. வாசுதேவக்குருக்கள்
சங்கீதசாகரன்
சிவன் கோயில் பிரதமகுரு
*இணுவில்.*

ஆலய பரிபாலனசபை

(83944)

உ

# பூப்புனித நீராட்டு விழா அழைப்பு

அன்புடையீர்,

நிகழும் மங்களகரமான விக்கிரம வருடம் தை மாதம் 30 ஆம் நாள் நாளை (12.02.2001) திங்கட்கிழமை முற்பகல் 11.54 மணிமுதல் 1.49 மணி வரை உள்ள ரிஷபலக்கின சுபமுகூர்த்த வேளையில்,

எமது புத்திரி

## செல்வி கஸ்தூரி அவர்களுக்கு

எமது இல்லத்தில் மங்கள நீராட்டு விழா நடத்துவதற்கு திருவருள் துணைகொண்டு பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால், அத்தருணம் தாங்களும் குடும்ப சமேதரராக வருகை தந்து செல்வியை ஆசீர்வதித்து விழாவைச் சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை நாடும்:
கு.இராமகிருஸ்ண சர்மா - கலாநிதி
தம்பதிகள்.

*இல.23, உடுவில் வீதி,*
*மானிப்பாய்.* (83919)

# இறைவனுக்கும் கடும் கோபம் வரும்; சந்தர்ப்பங்களைத் தவறவிட்டால்!

ஒருவர் தனது இரக்கத்தினால் எமக்கு ஒரு சந்தர்ப்பத்தைத் தந்து, அதை நாம் சரியாகப் பயன்படுத்தாமல் போகும்போது, அவரது இரக்கம் கோபமாக மாறுகிறது. அதில் எந்தவிதமான தவறும் இல்லை. எனவே இறைவனும் நாம் தவறு விடுகிறபோது தொடர்ந்து பொறுமையின் இறைவனாக இருந்து எமக்கு அதிலிருந்து திருந்தி நல்வாழ்வு வாழ சந்தர்ப்பங்களைத் தந்து கொண்டே இருக்கிறார்.

வாய்ப்புகளை நாம் பயன்படுத்திக்கொள்ளத் தவறுகிறபோது இறைவன் எமக்குத் தண்டனை தரவும் ஆயத்தமாக இருக்கிறார் என்பது நாம் புரிந்து கொள்ளவேண்டிய கசப்பான உண்மையாகும்.

இறைவன் அன்புள்ளவர், இரக்கமுள்ளவர் என்கிற மகிழ்ச்சிகரமான விடயத்துடன் அவர் கோபமுள்ள, தண்டனை வழங்குகிற கடவுள் என்பதும் தெரிந்து கொள்ளப்பட வேண்டிய விடயமாகின்றது. ஒரு நாணயத்துக்கு எவ்வாறு இரண்டு பக்கங்கள் உள்ளன்வோ, அவ்வாறு இறைவனுக்கும் இரண்டு பக்கங்கள் உண்டு.

## ஞாயிறு நற்பிரசாதம்

ஆனால் மனிதர்களுக்கு ஏற்படுகின்ற கோபம், அவர்கள் வழங்குகின்ற தண்டனை சுயநலம் கொண்டதாக இருப்பது போல் இறைவனது கோபம், அவர் வழங்கும் தண்டனை இருப்பதில்லை. மாறாக அவர் மனுக்குலம் மீது கொண்டுள்ள அன்பின் வெளிப்பாடாகவே அவை அமைகின்றன.

ஒரு மரம் எவ்வாறு தனக்குத் தரப்படுகின்ற பசளைகளை எல்லாம் உள்வாங்கிக் கொண்டு, அதை மகிழ்ச்சியுடன் சுவைத்துக் கொண்டு, மற்றவர்களுக்குப் பிரயோசனமான கனிகளை வெளித் தள்ளுகின்றதோ அவ்வாறே மனிதனும் இறைவனால் தனக்குக் கிடைக்கின்ற அன்பு, கிருபை, இரக்கம், மன்னிப்பு போன்ற இயல்புகளைப் பெற்றுக்கொண்டு அவற்றினை மற்றவர்கள் மத்தியில் கனிகளாக வெளித்தள்ள அழைக்கப்படுகின்றான். இதன்படி எம்மை உய்த்துணர்ந்து பார்த்து, நாம் காய்க்கிற மரமா, காய்க்காத மரமா என்னும் வினாவுக்குரிய விடையை நாமே கண்டு கொள்ள முயல வேண்டும்.

இறைவன் நீடிய பொறுமையுள்ளவராக உள்ளார். அவர் நாம் நமது பாவத்திலிருந்து விடுபட, அவரிடமிருந்து நாம் பெற்றுக் கொண்டவற்றை மற்றவர்களுக்குக காட்ட நாம் தவறும் போதெல்லாம், இன்னும் இன்னும் சந்தர்ப்பங்களைத தந்து கொண்டே இருக்கிறார். எப்போதும் அவரது பொறுமையை நாம் உதாசீனம் செய்வோமானால், அவர் கோபத்தின் இறைவனாகவும் மாறுகிறார் என்பதாகும். திருமுழுக்குநர்யோவான் இதையே தனது போதனையில் "கோடரிகள் மரங்களினருகே வைக்கப்பட்டுள்ளன. காய்க்காத, பயன்தர முடியாத மரமெல்லாம் வெட்டித்தள்ளப்படும் என்றார்.

நாம் பல்வேறு வேளைகளில் விடுகிற தவறு என்னவெனில் நாம் மற்றவர்களுக்கு இறைவனைக் காட்ட முனையும்போது பல வேளைகளிலும் அவரது அன்பையும், இரக்கத்தையும், கிருபையையுமே காட்ட முயல்கிறோம். அவரது கோபத்தினை, தண்டனை வழங்கும் தன்மையினைப்பற்றிய கசப்பான உண்மையினைக் காட்டத் தவறிப் போகிறோம். அப்படிக் காட்டப்போனால் எமது நல்ல பிள்ளைப்பெயர் கெட்டுவிடுமோ, அல்லது போதிக்கும் என்னை மக்கள் தகாதவனைப் பார்ப்பது போல் பார்ப்பார்களோ என்றெல்லாம் வீணான ஐயங்கொண்டு தவறிழைக்கிறோம்.

**அருள்திரு. பி.தேவதாஸ்**

ஆனால் அவரது பொறுமை, அன்புடன் அவரது கோபத்தையும் சரிசமமாகக் காட்டி, மனுக்குலம் திருந்தி வாழ சந்தர்ப்பம் தருவோமாக! பசளைகளைப் பெற்றுக் கொண்டு கனிகளை வெளித்தள்ளாத நன்றி கெட்ட மரம் போல வாழாமல், பசளைகளைப் பெற்றுக்கொண்டு கனிகளை வெளித்தள்ளும் மரம் போல, இறை இயல்புகளைப் பெற்றுக் கொண்டு அவற்றை ஏனையோர் மத்தியில் காட்டி சாட்சி வாழ்வு வாழ்வோமாக!

நாமும் வாழ்ந்து ஏனையோரையும் வாழ வைப்போம்!

சிந்திப்போம்!செயற்படுவோம்!!

# ஜி.எஸ்.ரியை நீக்குமாறு அரசதரப்பில் வற்புறுத்தல்

பொருள்கள் சேவைகள் வரியை (ஜி.எஸ்.ரி) நீக்கும்படி அமைச்சர்கள் சிலர் அடங்கிய ஆளுங்கட்சியின் ஒரு பிரிவினர் நிதி அமைச்சு அதிகாரிகளிடம் தொடர்ந்தும் வற்புறுத்தி வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

கடந்த புதன்கிழமை நிதி அமைச்சு அதிகாரியைச் சந்தித்து உரையாடிய இக்குழுவினர் பட்ஜட் மூலம் பொது மக்களுக்கு அதிக சலுகைகளை வழங்கவேண்டும் என்றும் வலியுறுத்தினர் என்று தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் வெளிநாட்டு நாணய மாற்று பெறுமதிகளைச் சுதந்திரமாக மிதக்கவிடப்பட்டமை தொடர்பாகவும் அவர்கள் கேள்வி எழுப்பினர் என்றும் கூறப்படுகிறது. (க-20)

# அரசாங்கத்திற்கு இ.தொ.கா. வேலைநிறுத்த மிரட்டல்

கொழும்பு,பெப்.11

தோட்டத்தொழிலாளருக்கு வழங்கப்படும் என உறுதி கூறப்பட்ட 400 ரூபா அலவன்ஸ் ஒரு வாரத்திற்குள் வழங்குவதற்கு ஏற்பாடு செய்யாவிட்டால் வேலைநிறுத்தப் போராட்டத்தில் குதிக்கப்போவதாக இ.தொ.கா. தலைவரும் அமைச்சருமான ஆறுமுகம் தொண்டமான் எச்சரித்துள்ளார்.

அரசாங்கத்திடம் இருந்து உரிய அறிவிப்பு கிடைக்காதபட்சத்தில் பெப்ரவரி 19ம் திகதி வேலை நிறுத்தம் ஆரம்பமாகும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

2000 ஆம் ஆண்டு செப்ரெம்பரில் இருந்து 400 ரூபா விசேட அலவன்ஸ் வழங்கப்படும் என்று அரச தரப்பில் உறுதியளிக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

## திறப்பு விழா

யாழ்ப்பாணம்,பெப்.11

காரைநகர் வடமேற்கு கிராம அலுவலர் பிரிவின் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் அலுவலகத் திறப்பு விழா நாளை திங்கட்கிழமை காலை 10 மணிக்கு காரைநகர் வடமேற்கு சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் ஜே.எக்ஸ். செல்வநாயகம் மற்றும் அதிகாரிகளும் கலந்துகொள்வர். (க-10)

# வெளிமாவட்டங்களுக்குச் செல்ல பயண அனுமதி பெற்றோர் விவரம்

இம்மாதம் 10ஆம் திகதி வரையும வெளியிடங்களுக்குப் பயணம்செய்ய அனுமதி வழங்கப்பட்டோரின் இலக்கங்கள் பிரதேச செயலர் ரீதியாக வருமாறு:-

**சங்கானை**

(175069ஏ), (175069பி), (176882ஏ), (176882பி), (177895ஏ), (178754ஏ), (178755ஏ), (178859ஏ), (178859பி), (178859சி), (178859டி), (178862ஏ), (178862பி), (178890ஏ), (178896ஏ), (179069ஏ), (179102ஏ), (179184ஏ), (179205ஏ), (179205பி), (179346ஏ), (179346பி), (179346சி), (179384ஏ), (179394ஏ), (179394பி), (179505ஏ), (181508ஏ), (181625ஏ), (181625பி), (182585ஏ), (182585பி).

**சாவகச்சேரி**

(177707ஏ)

**நெடுந்தீவு**

(13721ஏ), (13721பி), (14029ஏ), (14029பி), (14558ஏ), (14563ஏ), (14563பி), (14563சி), (14563டி), (14563ஈ), (14569ஏ), (14569பி), (14569சி), (14593ஏ), (14598பி), (14598சி), (14598டி), (14598ஈ), (14615ஏ), (14615பி), (14622ஏ), (14622பி), (14623ஏ).

**கரவெட்டி**

(151122ஏ), (151122பி), (180453ஏ), (182514ஏ), (182514பி), (182514சி), (182516ஏ), (182516பி), (182516சி), (14551பி), (14639ஏ).

**ஊர்காவற்றுறை**

(14079ஏ), (14079பி), (14135ஏ), (14135பி), (14176ஏ), (14207ஏ), (14207பி), (14376ஏ), (14393ஏ), (14393பி), (14393சி), (14417ஏ), (14421ஏ), (14480ஏ), (14480பி), (14481ஏ), (14481பி), (14481சி), (14494ஏ), (14513ஏ), (14513பி), (14513சி), (14518ஏ), (14525ஏ), (14525பி), (14527ஏ), (14527பி), (14528ஏ), (14539ஏ), (14539பி), (14549ஏ), (14549பி), (14550ஏ), (14551ஏ), (14553ஏ), (14553பி), (14553சி), (14556ஏ), (14557ஏ), (14557பி), (14557சி), (14578ஏ), (14578பி), (14578சி), (14578டி), (14580ஏ), (14582ஏ), (14582பி), (14582சி), (14582டி), (14582ஈ), (14582எவ்), (14589ஏ), (14590ஏ) (14594ஏ), (14600ஏ), (14600பி), (14600சி) (14600டி), (14627ஏ), (14627பி), (14627சி), (14628ஏ), (14628பி), (14637ஏ), (14637பி), (14638ஏ), (14638பி), (14638சி), (14638டி), (15450பி).

**நல்லூர்**

(176637ஏ), (176637பி), (179105ஏ), (179105பி), (179321ஏ), (179381ஏ), (179381பி), (179381சி), (179461ஏ), (179461பி), (181415ஏ), (181415பி), (181430ஏ), (181430பி), (181499ஏ), (181499பி), (181519ஏ), (181611ஏ).

**சண்டிலிப்பாய்**

(178803ஏ), (178803பி), (179210ஏ), (179290ஏ), (179345ஏ), (179352ஏ), (179409ஏ), (179410ஏ), (179420ஏ), (179498ஏ), (181536ஏ), (181544ஏ), (181613ஏ), (181613பி), (181672ஏ), (181672பி), (182654ஏ).

**தெல்லிப்பழை**

(178980ஏ), (179391ஏ), (179391பி), (181467ஏ), (181644ஏ), (182597ஏ), (182597பி), (176756ஏ), (176756பி), (178840ஏ), (178840பி) (178840சி), (179174ஏ), (179375ஏ), (179375பி), (179390ஏ), (179390பி), (179392ஏ), (181516ஏ), (181516பி), (181522ஏ), (181522பி), (181609ஏ), (182854ஏ).

**வேலணை**

(14058ஏ), (14058பி), (14126ஏ), (14345ஏ), (14345பி), (14403ஏ), (14403பி), (14471ஏ), (14491ஏ), (14499ஏ), (14499பி), (14500ஏ), (14501ஏ), (14503ஏ), (14516ஏ), (14532ஏ), (14537ஏ), (14537பி), (14540ஏ), (14541ஏ), (14541பி), (14542ஏ), (14543ஏ), (14544ஏ), (14544பி), (14545ஏ), (14545பி), (14546ஏ), (14546பி), (14546சி), (14546டி), (14546ஈ), (14546எவ்), (14558பி), (14558சி), (14558டி), (14560ஏ), (14561ஏ), (14562ஏ), (14564ஏ), (14564பி), (14564சி), (14564டி), (14564ஈ), (14565ஏ), (14565பி), (14567ஏ), (14567பி), (14570ஏ), (14572ஏ), (14573ஏ), (14581ஏ), (14581பி), (14581சி), (14601ஏ), (14612ஏ), (14613ஏ), (14613பி).

**சாவகச்சேரி**

(155872ஏ), (155872பி), (155872சி), (155872டி), (176106ஏ), (176106பி), (176106சி), (176106டி), (176106ஈ), (180499ஏ), (180499பி),

**யாழ்ப்பாணம்**

(163055ஏ), (163069ஏ), (172099ஏ), (172133ஏ), (173360ஏ), (173360பி), (173702ஏ), (173702பி), (173702சி), (173702டி), (175572ஏ), (175572பி), (175572சி), (178093ஏ), (178415ஏ), (179829ஏ), (179829பி), (179829சி), (179893ஏ), (179893பி), (179893சி), (179994ஏ), (179994பி), (179994சி), (179994டி), (179994ஈ), (179994எவ்), (180085ஏ), (180085பி), (180085சி), (180085டி), (18008ஈ), (180127ஏ), (180127பி), (180179ஏ), (180202ஏ), (180224ஏ), (180224பி), (180233ஏ), (180233பி), (180233சி), (180233டி), (180282ஏ), (180298ஏ), (180298பி), (180298சி), (180307ஏ), (180307பி), (180937ஏ), (181930ஏ), (181960ஏ), (181970ஏ), (181983ஏ), (182036ஏ), (182042ஏ), (182061ஏ), (182074ஏ), (182096ஏ), (182118ஏ), (182163ஏ), (182173ஏ), (182174ஏ)

**கரவெட்டி**

(146189ஏ), (146189பி), (146189சி), (146189டி), (146189ஈ), (149320ஏ), (149320பி), (151215ஏ), (154907ஏ), (154907பி), (155692ஏ), (155913ஏ), (155913பி), (155913சி), (155913டி), (155913ஈ), (158227ஏ), (158424ஏ), (158424பி), (158424சி), (160378ஏ), (160378பி), (162036ஏ), (162036பி), (162083ஏ), (162083பி), (162083சி), (162203ஏ), (164664ஏ), (164664பி), (164680ஏ), (164680பி), (164708ஏ), (164708பி), (164708சி), (164829ஏ), (164829பி), (164829சி), (164943ஏ), (164957ஏ), (165023ஏ), (165049ஏ), (165049பி), (167154ஏ), (167273ஏ), (167386ஏ), (167386பி), (167386சி), (167474ஏ), (167474பி), (167825ஏ), (167865ஏ), (168123ஏ), (169665ஏ), (169665பி), (169807ஏ), (169807பி), (169807சி), (169921ஏ), (169935ஏ), (172177ஏ), (172222ஏ), (172222பி), (172222சி), (172453ஏ), (172453பி), (172564ஏ), (172564பி), (172564சி), (172564டி), (172564ஈ), (174435ஏ), (174509ஏ), (174509பி), (174523ஏ), (174523பி), (174523சி), (174536ஏ), (174536பி), (174536சி), (174536டி), (174606ஏ), (174618ஏ), (174618பி), (174618சி), (174618டி), (174618ஈ), (174631ஏ), (174622ஏ), (174622பி), (174700ஏ), (174700பி), (174700சி), (174700டி), (174705ஏ), (174705பி), (176056ஏ), (176056பி), (176068ஏ), (176068பி), (176068சி), (176068டி), (176068ஈ), (176085ஏ), (176086ஏ), (176093ஏ), (176105ஏ), (176105பி), (176127ஏ), (176127பி), (176224ஏ), (176224பி), (176224சி), (176224டி), (176256ஏ), (176256பி), (176270ஏ), (176270பி), (176270சி), (176285ஏ), (176287ஏ), (176287பி), (176296ஏ), (176319ஏ), (176340ஏ), (176340பி), (176340சி), (176364ஏ), (176387ஏ), (176388ஏ), (176389ஏ), (176410ஏ), (176418ஏ), (176418பி). (176428ஏ), (176428பி), (176428சி), (176428டி), (176428ஈ), (176428எவ்), (176431ஏ), (176431பி), (176431சி), (176432ஏ), (176434ஏ), (176434பி), (176470ஏ), (176470பி), (176481ஏ), (176481பி), (176481சி), (176482ஏ), (177522ஏ), (177523ஏ), (177525ஏ), (177525பி), (177525சி), (177525டி), (177539ஏ), (177539பி), (177539சி), (177539டி), (177551ஏ). (177551பி). (177583ஏ), (177585ஏ), (177585பி), (177684ஏ), (177685ஏ), (177685பி), (177685சி), (177918ஏ), (177918பி), (177918சி), (177918டி), (177985ஏ), (180397ஏ), (180427ஏ), (180427பி), (180570ஏ), (180570பி), (180595ஏ), (180595பி), (181067ஏ), (181067பி), (181279ஏ),

**கோப்பாய்**

(175610ஏ), (179995ஏ), (180251ஏ),

**மருதங்கேணி**

(174692ஏ), (174692பி),

**நல்லூர்**

(175346ஏ), (175347ஏ), (175347பி), (178139ஏ), (178139பி), (178247ஏ), (178247பி), (178272ஏ), (178272பி), (180053ஏ), (180053பி), (180053சி), (180053டி), (180053ஈ), (180053எவ்), (180053ஜி), (180099ஏ), (180099பி), (180198ஏ), (180217ஏ), (180275ஏ), (180286ஏ), (180286பி), (180914ஏ), (181934ஏ), (181935ஏ), (182032ஏ), (182047ஏ), (182073ஏ), (182081ஏ), (182081பி), (182164ஏ), (182169ஏ);

**பலாலி**

(172369ஏ)

**பருத்தித்துறை**

(151647ஏ), (151647பி), (151647சி), (154771ஏ), (154811ஏ), (154811பி), (154893ஏ), (154893பி), (155979ஏ), (158026ஏ), (158026பி), (158026சி), (158477ஏ), (160247ஏ), (160268ஏ), (160268பி), (160268சி), (160268டி), (160272ஏ), (160272பி), (160272சி), (160272டி), (160272ஈ), (160272எவ்), (160286ஏ), (160286பி), (160286சி), (160373ஏ), (162303ஏ), (162303பி), (162303சி), (162303டி), (162303ஈ), (165081ஏ), (165081பி), (165081சி),

(13ஆம் பக்கம் பார்க்க)

# ஐ.தே.கட்சியின்.....

(5ஆம் பக்கத் தொடர்ச்சி)

கோடியே, பத்து லட்சத்து 80ஆயிரம் ரூபா பிரேரிக்கப்பட்டிருக்கிறது. அத்தோடு மொத்தம் 24,739 கோடி ரூபாவை நடப்பு ஆண்டில் வெளிநாடுகளிலிருந்தோ உள்நாட்டில் இருந்தோ திரட்ட வேண்டியுள்ளதாகவும் அதில் சுட்டிக்காட்டப்படுகிறது.

அதேவேளை நடப்பு ஆண்டுக்கான பாதுகாப்புச் செலவுக்கு மொத்தம் 6,339 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதுடன் கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது 1096 கோடி ரூபாவால் அதிகரிக்கப்பட்டிருப்பதைக் காணலாம். இதர துறைகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ள நிதிகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது மேற்படி பாதுகாப்புக்கான ஒதுக்கீடு மொத்தச் செலவில் 16 சதவீதம் என்று சுட்டிக்காட்டப்படுகிறது. அத்துடன் நாட்டின் முக்கிய தேவையான கல்விக்காக 1500 கோடி ரூபா மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. இத்தரவுகளை நோக்கும் போது அரசு பேச்சு வார்த்தையை விட யுத்தம் மீதே அதிக அக்கறை கொண்டிருப்பதைக் காணமுடிகிறது.

**ஐ.தே.கட்சியின் பாதயாத்திரை**

இது அவ்வாறிருக்க ஆளும் பொதுமக்கள் முன்னணியை எப்படியாவது கவிழ்த்துவிட வேண்டும் என்ற நோக்கில் ஐக்கிய தேசியக் கட்சி தனது ஒருவாரகால பாதயாத்திரைய நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை கொழும்பில் நிறைவு செய்திருக்கிறது. நாட்டு மக்களைப் பெரிதும் வாட்டும் வகையில் அரசு பொருளாதாரச் சுமையை மக்கள் மீது சுமத்தி செயற்படுவதாக பாதயாத்திரையின் போது ஐ.தே.கட்சி ஆதரவாளர்களால் கோஷங்கள் எழுப்பப்பட்டன.

நாட்டின் 53 ஆவது சுதந்திர தினத்தை நினைவு கூரும் வகையில் ஆரம்பிக்கப்பட்ட இப்பாதயாத்திரை கடந்த 4ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கண்டி தலதா மாளிகைக்கு அருகில் ஆரம்பிக்கப்பட்டது. இவர்களுடைய பாதயாத்திரை தொடர்ந்து 6 நாள்களாக நடைபெற்றது. கண்டிக்கும் கொழும்புக்குமிடையில் அமைந்துள்ள முக்கிய நகரங்கள் அனைத்தின் மத்தியிலும் கட்சியின் தலைவர்களால் விசேட உரைகள் நிகழ்த்தப்பட்டன. குறிப்பாக கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, பிரதித் தலைவர்களான கருஜயசூரிய, காமினிஅத்துகோரள ஆகியோர் மேற்படி பாதயாத்திரையின் "கதாநாயகர்களாக" வலம் வந்தார்கள்.

**அரசின் சுவரொட்டி இயக்கம்**

பாதயாத்திரையை எப்படியாவது தடுத்து விடவேண்டும் என்று ஆரம்பம் முதலே பல்வேறு நடவடிக்கைகளில் அரசு தரப்பு ஈடுபட்டிருந்ததைக் காணமுடிந்தது. குறிப்பாக ஐ.தே.கட்சியினர் இந்த யாத்திரையை ஈழத்துக்கான யாத்திரையாகவும் புலிகளின் தூண்டுதலின் பேரில் ஐ.தே.க. இதனை ஒழுங்கு செய்ததாகவும் நாடளாவிய ரீதியில் சுவரொட்டிகளை ஒட்டி மக்களின் கவனத்தைத் திசைதிருப்ப அரசு முயற்சி செய்தது. ரணில் விக்கிரமசிங்கவை 'மிஸ்டர் பீன்' என்ற ஆங்கில பாத்திரத்துக்கு உருவகித்து மாபெரும் சுவரொட்டி இயக்கமொன்றை அரசு நாடு முழுவதிலும் நடத்தி இருந்தது. அது மட்டுமன்றி பாத யாத்திரையைக் குழப்பும் வகையில் சில இடங்களில் அசம்பாவிதங்களும் நடைபெற்றன. எவ்வாறாயினும் ஐ.தே.கட்சியின் மேற்படி பாதயாத்திரைக்கு மக்களின் பங்களிப்பு நாளுக்கு நாள் அதிகரித்து வந்துள்ளமையும் இங்கு சுட்டிக்காட்டப்பட வேண்டும். சிங்கள, ஆங்கிலப் பத்திரிகைகளும் மேற்படி பாதயாத்திரைக்கு பெரும் முக்கியத்துவத்தை வழங்கி இருந்தன. பாதயாத்திரையின் நிறைவு நிகழ்ச்சியாக மாபெரும் மக்கள் கூட்டமொன்று கடந்த வெள்ளியன்று மாலை கொழும்பு நகரசபைத் திடலில் நடைபெற்றது.

எதிர்க்கட்சியின் பாதயாத்திரைக்கு- அரசு எதிர்ப்பு இயக்கத்துக்கு தென்னிலங்கை மக்களிடமிருந்து பெரும் ஆதரவு கிடைத்தது. அது வெற்றி பெற்றிருந்த போதிலும், அதனை அடிப்படையாக வைத்து நாட்டின் இன்றைய அரசியல் நிலைமையை மாற்ற முடியாது என்பதே நோக்கர்களின் கருத்தாக இருக்கிறது. வேறு நாடுகளில் இவ்வாறான மக்கள் சக்தியால் நாட்டின் அரசியல் நிலைமை மாற்றப்பட்டிருந்தது. ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் அரசமைப்பு இருக்கும் வரையில் இந்நாட்டில் இவ்வாறான ஒரு நிலையை தோற்றுவிக்க முடியாது என்றுதான் சொல்ல வேண்டும்.☆

# குஜராத்தில் 8 மணி நேரம் தொடர்ந்த நில நடுக்கம்!

புஜ், பெப். 11

குஜராத்தின் கஜ்பகுதியில் 8 மணித்தியாலங்களுக்கும் அதிகமாக தொடர்ந்து நிலம் இலேசாக நடுங்கிக் கொண்டிருந்தது. இடையிடையே சிறிய பூமியதிர்ச்சிகளும் ஏற்பட்டன.

நேற்று முன்தினம் இரவு 8.58 மணிமுதல் நேற்று அதிகாலை 5.11 மணிவரை கஜ்-மாவட்டத்தில் நிலம் லேசாக நடுங்கிக்கொண்டிருந்தது.

அதேசமயம் 8 சிறிய பூமியதிர்ச்சிகளும் ஏற்பட்டன. அவை 3 முதல் 3.8 ரிச்டேர் அளவுகளைக் கொண்டிருந்ததாக புவியியல் ஆய்வு மையத்தினர் தெரிவித்துள்ளனர்.

முன்னதாகக் கடந்த வியாழக்கிழமை அகமதாபாத்திலும் சுற்றியுள்ள பிரதேசங்களிலும் 5.3 ரிச்டேர் அளவுள்ள பூமியதிர்ச்சி ஏற்பட்டது.

## அலகாபாத்திலும் பூகம்பம்!!

அப்போது அடுக்கு மாடி வீடுகளில் இருந்தவர்கள் பயத்தின் காரணமாக ஜன்னல்கள் வழியே வெளியே குதித்ததாகவும்—

இப்படிக் குதித்தவர்களில் சுமார் 40 பேர் படுகாயம் அடைந்ததாகவும் —

கூறப்படுகிறது.

இதற்கிடையில் இருவாரங்களுக்கு முன்னர் தாக்கிய பூகம்பத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரண உதவிகள் வழங்கப்படுவதில் பற்றாக்குறையும், குளறுபடிகளும் நிலவுவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

கஜ் மாவட்டத்தில் வீடிழந்தவர்களுக்கு வழங்க 60 ஆயிரம் கூடாரங்கள் தேவைப்படுவதாகவும்,—

ஆனால் 3 ஆயிரத்து 500 கூடாரங்கள் மட்டுமே மாவட்டத்துக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் நிவாரணப் பணிகளை மேற்பார்வை செய்து வரும் அதிகாரிகள் முறையிட்டுள்ளனர். (ஒ-7)

## இந்தோனேசிய அதிகாரிகள் மீது ஊழல் குற்றச்சாட்டு வழக்கு

### விரைவில் கைதாவார்களாம்

ஜகார்த்தா, பெப். 11

இந்தோனேசியாவின் முன்னாள் அதிபர் சுகர்டோவின் ஆட்சியில் பணியாற்றிய 10 அதிகாரிகள் லஞ்ச ஊழல் குற்றச்சாட்டுகளுக்காக கைது செய்யப்பட உள்ளதாக அதிபர் அப்துர் ரஹ்மான் வாஹிட் கூறியுள்ளார்.

லஞ்சக் குற்றத்தில் தான் ஈடுபட்டதாக இந்தோனேசிய நாடாளுமன்றக்குழு கண்டனம் செய்ததையும்—

பதவியிலிருந்து தம்மை நீக்க தீர்மானம் கொண்டு வரப்பட்டதையும்—

வாஹிட் அப்போது குறை கூறினார்.

தான் எந்தத் தவறும் செய்யவில்லை என்று தெரிவித்த வாஹிட் கடந்த ஒரு வார காலமாக, தனது ஆதரவாளர்கள் நடத்தும் ஆர்ப்பாட்டங்கள் நாடாளுமன்றக் குழுவுக்கு விடுக்கப்படும் கண்டனங்கள் என்றும் குறிப்பிட்டார்.

இதேசமயம், வாஹிட்டை அதிபர் பதவியில் இருந்து அகற்றினால் நாட்டில் ரத்தக் களரி ஏற்படும் என்று அவரது ஆதரவாளர்கள் எச்சரித்துள்ளனர். (ஒ-7)

## சீனா - திபெத் இடையே ரயில் பாதை

பெய்ஜிங், பெப். 11

திபெத்திய சுய நிர்வாகப் பகுதியையும் சீனாவையும் இணைக்கும் முதலாவது ரயில் பாதையை அமைக்க சீன அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

உதய அரங்கில்

திபெத்துடனான பொருளாதார கலாசாரப் பரிமாற்றங்கள் அதிகரிக்க அமைக்கப்படவுள்ள ரயில், பாதை உதவும் என்று சீனப் பிரதமர் தெரிவித்துள்ளார்.

திபெத்தின் லாசா நகரையும் வடமேற்கு சீனாவின் சிங்ஹாய் மாகாணத்தில் உள்ள கோர்மி நகரையும் 118 கிலோ மீற்றர்கள் நீளமான ரயில்பாதை இணைக்கவுள்ளது.

## சனத்தொகைக் கணக்கெடுப்பு இந்தியாவில் தொடங்கியது

உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாடான இந்தியாவில் சனத்தொகைக் கணக்கெடுப்புப் பணிகள் நேற்று முன்தினம் முதல் நடைபெறுகிறது.

சுமார் 5 ஆயிரம் நகரங்கள் மற்றும் 6 இலட்சம் கிராமங்கள் உட்பட நாடு முழுவதிலும் சனத்தொகைக் கணக்கெடுப்புப் பணிகள் தீவிரமாக நடந்து வருகின்றன.

இந்தியாவில் 10 வருடங்களுக்கு ஒரு முறை இடம்பெறும் சனத்தொகைக் கணிப்பில் தற்சமயம் 20 இலட்சத்துக்கும் அதிகமான பணியாளர்கள் ஈடுபட்டுள்ளனர்.

காஷ்மீர் மாநிலத்தில் முன்னதாகவே கணக்கெடுப்பு முடிவடைந்து விட்டது.

பூமியதிர்ச்சியால் பாதிக்கப்பட்டுள்ள குஜராத்தில் கணக்கெடுப்பு பிற்போடப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டிலேயே இந்தியாவின் சனத்தொகை 100 கோடியைத் தாண்டி விட்டதாகவும்—

விரைவில் சீனாவை விட மக்கள் தொகை அதிகரித்து இந்தியா உலகில் சனத்தொகை கூடிய நாடாகிவிடும் என்றும் கூறப்படுவது குறிப்பிடத்தக்கது.

## முஸ்லிம் நீதிபதிகள் முன்பாக பின்லேடனை நிறுத்தத் தயார்!

### ஆப்கான் தலிபான்கள் அறிவிப்பு

இஸ்லாமாபாத், பெப் 11

ஆப்கானிஸ்தானில் தங்கியுள்ள இஸ்லாமியத் தீவிரவாதத் தலைவர் ஒசாமா பின்லேடனை, முஸ்லிம் நீதிபதிகள் முன் நிறுத்தத் தயாராக இருப்பதாக ஆளும் தலிபான்கள் தெரிவித்துள்ளனர்.

பாகிஸ்தானின் இராணுவ ஆட்சியாளர் பர்வேஷ் முஷாரப் தலிபான்களின் இந்த முடிவை உறுதிப்படுத்தியுள்ளார்.

தன்சானியா மற்றும் கென்யா ஆகிய நாடுகளில் உள்ள அமெரிக்கத் தூதரகங்கள் மீது 1998 ஆம் ஆண்டு தாக்குதல்கள் நடத்தப்பட்டதற்கு ஒசாமா பின்லேடனே காரணம் என்று அமெரிக்கா குற்றஞ்சாட்டியுள்ளது.

இது தொடர்பான விசாரணைக்காக பின்லேடனை தங்களிடம் ஒப்படைக்குமாறு தலிபான்களை அமெரிக்கா கோரி வருகிறது

ஆனால் இந்தக் கோரிக்கைக்கு இணங்க தலிபான்கள் தொடர்ந்து மறுத்து வந்தனர்.

பின்லேடனை ஒப்படைக்க வைப்பதற்கு நெருக்குதலைத் தருவதற்காக ஆப்கானிஸ்தானின் மீது ஐ. நா. பொருளாதாரத் தடைகளை விதித்தது.

இதனையடுத்தே பின்லேடன் மீதான விசாரணைகளை இஸ்லாமிய நீதிபதிகள் நடத்துவதாக இருந்தால் அவர்கள் முன் பின்லேடனை நிறுத்தத் தயாராக இருப்பதாக தலிபான்கள் கூறியுள்ளனர். (ஒ—7)

# தற்கொலைப்படைத் தாக்குதலில் 8 காஷ்மீர் பொலீஸார் மரணம்!

## 2 தீவிரவாதிகளும் சுட்டுக்கொலை!

ஸ்ரீநகர், பெப். 11

காஷ்மீரில் தீவிரவாதிகளின் தற்கொலைப் படைத் தாக்குதலில் 8 பொலீஸார் உயிரிழந்தனர். அப்போது இடம்பெற்ற மோதலில் 2 தீவிரவாதிகள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

ஸ்ரீநகரில் பாதுகாப்பு நிறைந்த பொலீஸ் ஒருங்கிணைப்புத் தலைமையகத்தில் நேற்று முன்தினம் மாலை இத் தாக்குதல் நடத்தப்பட்டது.

தலைமையகக்கட்டடத்தின் பிரதான வாயிலை நோக்கிக் காரில் வந்த தற்கொலைப் படையைச் சேர்ந்த 4 பேர் கிரனைட்டுகளை வீசியபடியே உள்ளே நுழைந்து சரமாரியாகச் சுட்டனர். பொலீஸாரும் பதில் தாக்குதல் நடத்தினர்.

இந்த மோதலில் 8 பொலீஸாரும், 2 தீவிரவாதிகளும் உயிரிழந்தனர். மற்ற இரு தீவிரவாதிகளின் கதி குறித்து தகவல் எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

பரபரப்பை ஏற்படுத்தியுள்ள இந்தத் தாக்குதலுக்கு, பாகிஸ்தானில் இருந்து செயற்படும் லஸ்கர்-இ. தொய்பா, அல் உமர் முஜாஹிதீன் ஆகிய தீவிரவாத அமைப்புகள் உரிமை கோரியுள்ளன.

இந்தச் சம்பவம் இடம்பெற்ற சில மணித்தியாலங்கள் கழித்து, ஸ்ரீநகர் அருகே உள்ள தரம்நகரில் காவலரண் ஒன்றின் மீது இரு கைக்குண்டுகள் வீசப்பட்டதாகக் கூறப்படுகிறது.

கடந்த மாதம் 25 ஆம் திகதி, மத்திய அரசு காஷ்மீரில் இரண்டாவது தடவையாக யுத்த நிறுத்தத்தை நீடித்த பின்னர் இடம்பெற்ற முதலாவது பெரிய தாக்குதல் இதுவாகும்.

கடந்த மாதம் 16 ஆம் திகதி பாதுகாப்பு நிறைந்த ஸ்ரீநகர் விமான நிலையத்துக்குள் நுழைந்த தற்கொலைப் படையின் 6 உறுப்பினர்களை இராணுவம் சுட்டுக் கொன்றது நினைவிருக்கலாம். [ஒ-7]

## பூகம்பத்தால் பாதிக்கப்பட்ட குஜராத்தில் தற்கொலைகள் கணிசமாக அதிகரிப்பு

புதுடில்லி, பெப். 11

பூகம்பத்தினால் பாதிக்கப்பட்ட குஜராத்தில் தற்கொலை செய்து கொள்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாகக் கூறப்படுகிறது.

உறவினர்களையும், உடைமைகளையும் இழந்தவர்களே வாழ்வு குறித்த அச்சத்தினால் தற்கொலையை நாடுகிறார்கள்.

குடும்பத்தில் அனைவரையும் இழந்து தனிமைப்பட்டவர்களும்—

தொழில் நிலையங்களை இழந்தவர்களும்—

தற்கொலை செய்பவர்களில் கணிசமான அளவில் உள்ளதாகக் கூறப்படுகிறது.

தற்கொலை செய்பவர்களைத் தடுக்கும் முகமாகத் தொண்டு அமைப்புகள் கஜ் மாவட்டத்திலும் அலஹாபாத்திலும், மனநல சேவை நிலையங்களை நடத்தத் தொடங்கியுள்ளன. (அ)

## 500 பொலீஸார் பணயமாம்

ஸ்ரீநகர், பெப். 11

காஷ்மீரில் ஸ்ரீநகர் பொலீஸ் தலைமையகத்தைத் தாக்கிய தீவிரவாதிகள், தலைமையகக் கட்டடத்தைத் தமது கட்டுப்பாட்டில் கொண்டு வந்து அங்கிருந்த 500 பொலீஸ்காரர்களை பணயக் கைதிகளாக்கியதாக ஏஜென்சிச் செய்திகள் தெரிவித்தன.

பின்னர் இராணுவத்தினர் தீவிரவாதிகள் மீது நடத்திய தாக்குதலில் தீவிரவாதிகள் இருவர் கொல்லப்பட்டதுடன் பொலீஸாரும் மீட்கப்பட்டதாகவும் அந்தச் செய்திகள் தெரிவித்தன.

## யசீர் அரபாத்துடன் ஷெரோன் தொலைபேசி மூலம் உரையாடல்

டெல்அவிவ், பெப். 11

இஸ்ரேலின் புதிய பிரதமர் ஏரியல் ஷெரோன் பலஸ்தீனத் தலைவர் யசீர் அரபாத்துடன் தொலைபேசி மூலம் உரையாடினார்.

மேற்காசியப் பிரச்சினை தொடர்பான அமைதி உடன்பாட்டை ஏற்படுத்த லாபகரமான மாற்றுத் திட்டங்களை வெளியிடப்போவதாகவும் —

மேற்குக் கரை மற்றும் காஸாவில் கடந்த 4 மாத காலமாக இடம்பெற்றுவரும் வன்செயல்களை முடிவுக்குக் கொண்டுவர இஸ்ரேலுடன் பலஸ்தீன நிர்வாகம் தாக்குதல் விலக்கு ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும் என்றும் —

ஷெரோன் அப்போது அரபாத்திடம் தெரிவித்ததாக பிரதமர் அலுவலக அதிகாரி ஒருவர் கூறினார்.

முன்னதாக ஜெருசலேம் சென்றிருந்த பிரதமர் ஷெரோன் அமெரிக்காவின் சிறப்புத்தூதரை அங்கு சந்தித்து ஆலோசனை நடத்தியிருந்தார்.

வலது சாரிப்போக்குடையவராக இருந்த ஷெரோன் பிரதமர் பதவி ஏற்ற பின்பு தனது கடும் போக்கைமாற்றி வருவதாக அவதானிகள் கருதுகின்றனர். (ஒ-7)

## 17 கோடி ரூபா 'ஹெரோயின்' கைப்பற்றப்பட்டது

புதுடில்லி, பெப். 11

பாகிஸ்தானிலிருந்து கடத்தி வரப்பட்ட 17 கிலோகிராம் 'ஹெரோயின்' போதைப் பொருளைக் காஷ்மீர் எல்லையில் இந்திய அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர்.

சிறிய பொட்டலங்களாகக் கட்டப்பட்டிருந்த 'ஹெரோயின்' டிரக் ஒன்றின் சக்கர டயருக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்தது.

17 கோடி ரூபா பெறுமதியான இந்தப் போதைப் பொருளைக் கடத்தியது தொடர்பாக ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின்
ஓய்வுபெற்ற பிரதி அதிபர்
திருமிகு க. சிவராமலிங்கம் B. A.
அவர்களின்
பவள விழா

மேற்படி பவள விழா நிகழ்வு 4 - 03 - 2001 ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது. இந் நிகழ்வினை பவளவிழா நிகழ்வுச் சபையினர் ஒழுங்கு செய்து வருகின்றனர். இந் நிகழ்வில் பேராசானைக் கௌரவித்தல், பொற்கிழி வழங்கல், பவள விழா மலர் வெளியீடு ஆகியன நிகழவுள்ளன. பேராசானது மாணவர்கள், அன்பர்கள் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

521/9, பருத்தித்துறை வீதி, நல்லூர்.
(84050)

கி. கிருபானந்தா
செயலாளர்

| | | | |
|---|---|---|---|
| வெ | சனி | வி | ரா |
| குரு▲ புத | இராசிச் சக்கரம் | | |
| கே | செ | | சந் |

*மாற்றம்:*

*11 - 02 - 2001 இல் உத்தரம் கன்னி இராசியில் சந்திரன் நிற்கும்.*

# இந்த வார இராசி பலன்

## 11-02-2001 - 17-02-2001

அரசியல் சமாதானப் பேச்சு இறுக்க நிலை அடையும், உலக அழுத்த உந்தல் அரசியல் வாதிகளை அதிகம் யோசிக்கச் செய்யும். போர்ச் சூழ்நிலை, குடியேற்றங்கள், புதிய திட்டங்கள் என்பன உருவாகும். இந்தியாவில் இயற்கை, செயற்கை அழிவுகள் சில பகுதிகளில் ஏற்படலாம். வடக்கில் திடீர் முறுகல் நிலை வர இடமுண்டு. தெற்கில் புதிய அரசியல் மாற்றம், அரசியல் வாதிகளிடையே மாற்றம், சேதுதிட்ட சிந்தனை என்பன உருவாக இடம் உண்டு. மேற்கு உலகப் பொருளாதார அழுத்தங்கள் கிழக்கு — மத்திய நாடுகளில் தொடர்ந்தபடி இருக்கும். இயற்கையின் மாற்றம் இறைவனின் தீர்ப்பாகும் எனக் கிரக நிலைகள் காட்டுகின்றன.

### மேடம்

அன்புக்கு எல்லையில்லை. ஈசன் அருள் கடல் போன்றது. அதில் சுவைத்தவர்களுக்குத்தான் புரியும் அதன் அருமை. ஆயினும் இவ்வுலகில் உழைப்பின் பெருமையில் நாம் மயங்கி இருக்கும் நிலையையும் புறக்கணிக்க முடியாமல் உள்ளது அல்லவா? எனவே புதிய திட்டங்கள் போட்டு இலாபம் அடைய முயல்வீர்கள். புதிய உடுப்பு அல்லது நகைக்காகப் பொருள் செலவு ஏற்படலாம். எதிர்ப்பாலாரின் ஆதரவு இருக்கும். காணி பூமி சம்பந்தமான யோசனைகள் ஏற்படலாம். எவர் பேசினாலும் காரியத்தில் சிந்தனையுடன் செயற்படுவீர்கள். தாய் வழியினர், சகோதர உறவினருடன் வாக்குவாதப்பட இடமுண்டு. களைப்பு, உஷ்ண பீடைகள், கால்முட்டுக்களில் வலி, வயிற்றுநோ என்பன ஏற்படலாம். பாதுகாப்புத் துறையினர், அலங்காரப் பொருள்விற்பனை, மருந்துத் துறை, விவசாயத்துறை போன்ற துறையினர்களுக்கு இலாபங்கள் அதிகரிக்கும்.

★ அதிர்ஷ்ட நாட்கள்:- திங்கள், புதன், சனி.

### இடபம்

சில தரகர்கள், சில சோதிடர்களை தமது சொற்படி திசை திருப்பி வைத்துள்ளார்கள். அதனால் உண்மைப்படி பொருத்தம் பார்க்கும் சோதிடர்களுக்குச் சோதனைகள் வருகின்றன. மக்களுக்கு நன்மைகள் நடக்க சோதிடர்கள் உண்மைப்படி கடமையைச் செயற்படுத்த வேண்டும். நீங்கள் உங்கள் தொழில் ஸ்தானத்தில் உண்மை பேசி நன்மைகளை மற்றவர்களுக்குச் செய்தபடி இருப்பீர்கள். அரச உதவிகள் கிடைக்கும் அறிவு, அடக்கம் கொண்டு அளவறிந்து செயற்பட்டபடி இருப்பீர்கள். தாய்வழியினருடன் மனக்கசப்பு, எதிரிகளுடன் போராடுதல். காணி பூமி சம்பந்தமான இலாபம் அதிகரித்தல், குடும்பத்தினரின் வைத்தியச் செலவுகள் அதிகரிக்கும் சிரசு வருத்தம், நெஞ்சுநோ, சலவருத்தம் என்பன வரலாம். சட்டத்துறை, ஆசிரியத் துறை, மருந்து, இரும்புத் துறை போன்றவர்களுக்கு அதிகமாற்றங்களும் நன்மைகளும் அதிகரித்தபடி இருக்கும்.

★ அதிர்ஷ்ட நாட்கள்:- புதன், சனி.

### மிதுனம்

செவ்வாய் தோஷம் — திருமணப்பொருத்தத்தில்மிக அவதானமாக்கப்பார்க்கப்படல் வேண்டும். அல்லது மணமக்களுக்குபலபாதிப்புக்கள்ஏற்பட இடமுண்டு. எவருக்கு என்ன பாதிப்புக்கள் வந்தால் எனக்கென்ன என யோசிக்காதீர்கள்? மற்றவர்களைப் பாதிக்காமல், பாதிப்பு வர விடாமல் நீங்கள் தொழில் ஸ்தானத்தில் செயற்பட்டபடி இருக்க முயலுங்கள்.. அதனால் மற்றவர்களின் அன்பு உங்களுக்கு நிச்சயம் வரும். சகோதரர்கள், நண்பர்களுடன் விட்டுக் கொடுத்து நடவுங்கள். வீடு, வாகனம் சம்பந்தமான பிரச்சினைகள் வர இடமுண்டு. பெரியவர்களின் அபிமானமும் — உதவிகளும் கிடைக்கும். ஆனால் சிலரின் எதிர்ப்புக்களும் உங்களைப் பயப்படச் செய்யும் நாரி விறைப்பு, களைப்பு, சளித் தொல்லை, காயம் என்பன வர இடமுண்டு. செய்தித் துறை, கோயில்துறை, சட்டத்துறை, விவசாயத்துறை போன்ற துறையினர்களுக்கு அதிக நன்மைகள் கிடைக்கும்.

★ அதிர்ஷ்ட நாட்கள்:- புதன், சனி.

### கடகம்

அரசியலை அள்ளிவீசி — காரியங்களை முடிக்க முனைவீர்கள். பாடுபடுபவர்கள் நிச்சயம் நற்பலன்கள் அடைவார்கள். ஊருக்கு நல்லதைச் செய்தாலும் — வீட்டிலே ஏச்சும் பேச்சும் குறை குற்றமும், கவலையும் தான். அதற்காக தொழில் பீடங்களில் இருந்து கவலைப்படாதீர்கள். அடிக்கடி உணர்ச்சிவசப்பட்டு சினந்து கொண்டிருப்பீர்கள். தூரதேசத்திலிருந்து செய்தி வரலாம். பெரியவர்கள், தெய்வபக்தி கொண்டவர்களின் உதவிகள் கிடைத்தபடி இருக்கும். சகோதரங்களிடம் இருந்தும் நண்பர்களிடம் இருந்தும் ஆதரவு பெறுவீர்கள். இடமாற்றங்களைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். உணர்ச்சிவசப்படுதல், கைகால்நோ, சலவருத்தம், நெஞ்சுப்புகைச்சல் என்பன ஏற்படும். கோயில்வேலைகள், பாதுகாப்புத்துறை, ஆசிரியத் துறை போன்ற துறையினர்கள் இலாபங்கள் அடைவார்கள்.

★ அதிர்ஷ்டநாட்கள்:- புதன், சனி.

### சிங்கம்

உண்மைப்படி நடப்பவர்கள் உலகத்தைதப்பற்றி அதிகம் சிந்திப்பதில் பலனில்லை ஏனெனில் சுயநலசிந்தை பெற்ற பலரால் உண்மைகள் பலசந்தர்ப்பங்களில் மறைக்கப்பட்டபடி இருக்கின்றன. இதை அறிந்த சிலரும் ஏன் இந்த வம்பு என எண்ணி நின்று விடுவதனால் தீயசக்திகள் தலைதூக்கி ஆடுகின்றன என நீங்கள் எண்ணுவதில் தப்பில்லை. தூரதேசச் செய்திகள் வர இடமுண்டு. நாரிநோ, உடல்பலவீனம், சளி, கண்கலக்கம் என்பன வரலாம். எதிர்ப்பாலார்கள் உதவிகள் செய்வர்கள். நண்பர்கள் உதவிகள் செய்வார்கள். மருந்துத்துறை, வியாபாரத்துறை, குருத்துறை, விவசாயத்துறை போன்ற துறையினர்களுக்கு நன்மைகளும் மாற்றங்களும் அதிகரிக்கும். மாற்றமொன்று உச்ச நிலை அடையும். பொறுமையாக இருந்து செயற்படவும்.

★ அதிர்ஷ்ட நாட்கள்:- புதன், சனி.

### கன்னி

படிப்படியாக ஏறிவருபவர்கள் நிதானமாக இருப்பார்கள். ஆனால்! சடுபுடு என மேல்வந்தவர்கள் தொப்பென கீழே விழுவார்கள். எனவே தொழில் ஸ்தானத்தில் கவனமாக இருந்து மற்றவர்களின் அன்பைப் பெற முயலுங்கள். அடிக்கடி கண்ணாடிக்கு முன்பாக நின்று அலங்கரித்தபடி இருப்பீர்கள். காசில்லாமல் சிரித்துச் சிரித்துப் பேசி காரியம் மாற்றுவீர்கள். நண்பர்கள் உதவிகள் செய்வார்கள். பிறருக்கு ஆலோசனைகளை அடிக்கடிகூறுவீர்கள். ஆனால் நீங்கள் அதன்படி நடக்கமாட்டீர்கள். கலகம் பிறந்து நியாயம் பிறக்கச் செய்யும் நிலைப்பாடு உங்களுக்குவரும். வாகன யோகம் வரலாம். மருந்து, இரும்பு, பாதுகாப்பு, தோட்டம், பத்திரிகைக்குழு போன்ற துறையினர்களுக்கு மாற்றங்களும் இலாபங்களும் அதிகரித்தபடி இருக்கும். நாரிநோ, கிருமித்தாக்கம், மூலவருத்தங்கள் என்பன வர இடம் உண்டு.

★ அதிர்ஷ்ட நாட்கள்:- திங்கள், புதன், சனி

### துலாம்

சமநீதி கொண்டவர்களுக்கு — உண்மைப்படி நடவாதவர்களைப் பிடிக்காது அவர்களை எப்பொழுதும் நம்பமுடியாது. உண்மை தான். தொழில் ஸ்தானத்தில் உங்களைச் சிலர் திசைதிருப்பி நல்லவர்களைத் தண்டிக்கச் சிந்திக்கிறார்கள். நிதானமாக இருந்து நல்லவர்கள் பாதிக்கப்படாமல் பார்த்துக் கொள்ளுவீர்கள். மாற்றங்கள் [illegible] அடிக்கடி பதற்றப் படுவீர்கள். புதிய பொறுப்புக்கள் வரும். நண்பர்கள் உதவிகள் செய்வார்கள், இடுப்பு நோ, வயிற்றில் வருத்தம், குடல் வருத்தம், நரம்புச் சோர்வு, சலவருத்தம் என்பன வர இடமுண்டு செய்தித் துறை, கணனித்துறை, சங்கீதத்துறை, குருத்துறை போன்ற துறையினர்களுக்கு மாற்றங்களும், இலாபங்களும் அதிகரிக்கும்.

★ அதிர்ஷ்ட நாட்கள்:- திங்கள், புதன், சனி.

### விருச்சிகம்

சித்தர்கள், உலகத்தவர்களுக்குப் பலவித அற்புதங்களைச் செய்து சவருவார்கள். ஆனால் யோகர்கள், உலகத்தவர்கள் தமக்குத் துன்பங்கள் தருவதாக விலகி நடக்க முற்படுவார்கள். சம்சார வாழ்வு கடமை என்கிறது. நீங்களும் தொழில் ஸ்தானத்தில் சுழன்ற வாழ்வை அனுபவித்தபடி வாழ்வீர்கள். அயலவர்களால் பல பிரச்சினைகள் உருவாகும். எதிர்ப்பாலார்கள் உதவி செய்வார்கள். சிரசு வருத்தங்கள், நரம்பு வருத்தங்கள், நெஞ்சு வருத்தங்கள் என்பன கொடுக்கும். நண்பர்களை நம்பாதீர்கள். புதிய பொறுப்புகள் வரலாம். காணி பூமி விஷயமாகவும் பொருள் சம்பந்தமாகவும் யோசனைகள் ஏற்பட்டபடி இருக்கும் மருந்துத்துறை, பாதுகாப்புத்துறை, கோயில் துறை போன்ற துறையினர்கள் நன்மை அடைவார்கள்.

★ அதிர்ஷ்ட நாட்கள்:- திங்கள், புதன்.

### தனுசு

திரும்பத் திரும்ப பழைய பெருமைகளைப் பேசிப்பேசிக் காலத்தைக் கழித்தபடி இருப்பவர்கள் பலர். இவர்களால் எதைச் சாதிக்க முடியும்? புதிய கருத்து, புதிய ஆக்கங்களால் தான் இளைய — துடிப்பான சந்ததியினருக்கு அளப்பரிய சேவைகளை ஒரு சிலர் செய்து வருவதில் தான் பல நன்மைகள் நடக்கின்றன. தொழில் ஸ்தானத்தில் பல மாற்றங்கள் நடக்கும் எதிர்ப்பாலார்களால் மறைமுகத் தாக்கங்கள் ஏற்படும். குடும்பத்தில் வாக்குக்கலகம் ஏற்படும். இடுப்புவலி, வயிற்றுநோ, குடல்வருத்தங்கள் என்பன நடக்கும். பிரயாணங்களைத் தவிர்க்கவும். செய்தித்தொடர்பு, கொம்பியூட்டர்துறை, சாய்ப்புச்சாமான்கள் விற்பனை, வியாபாரத் துறை போன்ற துறையினர்கள் நற்பலன் அடைவார்கள்.

★ அதிர்ஷ்ட நாட்கள்:- ஞாயிறு, திங்கள், புதன்.

### மகரம்

உறங்காத உள்ளங்களுக்கு என்றும்ஓய்விருக்காது ஆனால் உங்களுக்கு யோசனைகளால் உறக்கமே இருக்காமல் இருக்கும் போலிருக்கின்றது. அமைதியற்ற சூழல், பாசத்தால் பல பிரச்சினைகள் கிளைவிட்டுப் பரந்தபடி இருக்கும். தொழில்ஸ்தானத்தில் படபடப்பாக இருப்பீர்கள். மாற்றங்கள் சகஜம். உண்மை பேசுகின்றீர்கள். என்ன பயம்? துணிந்து செயற்படுங்கள். சிலருக்குப் பிரயாணங்கள் ஏற்படும். துன்பச் சுமையால் ஆலய வாசல் வரை சென்று வருவீர்கள், கை கால் பிடிப்பு, மனக்குழப்பம், மூட்டுவலி, தலைவலி, வாத உழைவு என்பன வரும். எண்ணெய்த் துறை, சந்தை வியாபாரம், குருத்துறை, பாதுகாப்புத் துறை போன்ற துறையினர்களுக்கு நற்பலன்கள், அதிகரிக்கும்.

★ அதிர்ஷ்ட நாட்கள்:- ஞாயிறு, திங்கள், சனி.

### கும்பம்

என்ன யோசனை? கைகால் பிடிப்பு, வேதனை எப்படி என நாலுபேர் உங்களை விசாரித்தால் ஆறுதல்தான். அதற்காகத் தொழிலை விட்டுவிட முடியுமா? அல்லது கண்டபடி லீவுகள்தான் போட முடியுமா? ஊக்கமது கைவிட வேண்டாம். பொதுத் தொண்டு புகழ் தரும் ஆனால் பணம் வருமா? வீட்டில் பிரச்சினை, எதிர்ப்பாலாரின் உதவிகளால் நன்மைகள் ஏற்படல், மாமன் வழியினர் குறை கூறுவர். இடமாற்றங்களைச் செய்வதனால் சில இழப்புக்களைச் சந்திப்பீர்கள். முழங்கால் நோ, [illegible], கால்வீக்கம், மறதியால் இழப்பு, களைப்பு என்பன வர இடம் உண்டு. மருந்துத்துறை, சினிமாத்துறை, நகைத்துறை, பத்திரிகைத்துறை, கணனித்துறை, குருத்துறை போன்ற துறையினர்கள் நன்மைகள் அடைவார்கள்.

★ அதிர்ஷ்ட நாட்கள்:- ஞாயிறு, திங்கள், சனி.

### மீனம்

என்னையா?! ஓர் ஒப்பந்தம் வரும் போலிருக்கிறது. இது நடக்குமா? என ஓர் அங்கலாய்ப்பு உண்மைதான், பதினைந்து றவுண்ட் ஓட வேண்டி இருக்கிறது. இப்பொழுது நோர்வேத் தூதர் முதலாவது றவுண்டுக்குள் தான் நிற்கிறார். என்றாலும் முயற்சி வெற்றி அளிக்கும் என உங்களுக்கு ஒரு நம்பிக்கை. விதி வழியே செல்லும் நெடுந்தூரப் பயணம் உடனே முடியாத நிலை போன்று உங்கள் தொழில் ஸ்தானத்தில் ஒரு நிலை. பண வரவு உண்டு அடிக்கடி கோபம் வரும் வருவாய் குறையும். குடும்பத்தில் செலவு அதிகரிக்கும். வீண் பிரச்சினைகள் வரும். சளிபிடிக்கும். காய்ச்சல் வரும். இடுப்பு வலிவரும். நீதித்துறை, வியாபாரத்துறை, ஹோட்டல் துறை, பிரயாணத்துறை போன்ற துறையினர்களுக்கு இலாபங்கள் அதிகரிக்கும்.

★ அதிர்ஷ்ட நாட்கள்:- ஞாயிறு, திங்கள், சனி.

**மகாதேவா ஜோதிடம்**


**சித்தமருத்துவ மாணவர் ஒன்றியம்**

யாழ். பல்கலைக்கழகம்

**அவசர பொதுக்கூட்டம்**

காலம்: 12-02-2001 திங்கட்கிழமை காலை 10.00 மணி

இடம்: மாணவர் பொது அறை

சகல மாணவர்களையும் தவறாது சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(84017) — செயலாளர்.

இதோ!

**கொழுப்பு நீக்கிய பால் (SKIMED MILK)**

**விற்பனைக்கு**

எமது சங்கத்தில் சுத்தமான பசுப்பாலில் இருந்து உற்பத்தி செய்யப்பட்ட கொழுப்பு நீக்கிய பால் விற்பனை செய்யப்படுகிறது. யாழ் நகரிலும் சூழவுள்ள கிராமங்களிலும் நேரடி விநியோகம் செய்கிறோம். தேவையானவர்கள் முற்கூட்டியே பதிவு செய்து பாலை உங்கள் வீட்டு வாசலில் பெற்றுக்கொள்வதற்கு ஏற்பாடு செய்கிறோம்.

ஒரு லீற்றர் பாலின் விலை ரூபா 14/- மட்டுமே.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

பொது முகாமையாளர்
யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்கம்,
திருநெல்வேலி கிழக்கு,
கோப்பாய். (சி/15218)

# கண்ணீர் அஞ்சலி

எமது பழைய மாணவர் சங்க நிர்வாக சபை உறுப்பினர்

F. A. சில்வஸ்டர்

அவர்களின் அருமைச் சகோதரி

## செல்வி பெனிக்னா றஜனி பிரான்சிஸ்பிள்ளை

அவர்கள் காலமானதையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவர்களின் பிரிவினால் துயறுரும் குடும்பத்தாரின் துயரில் நாமும் பங்கேற்கின்றோம்.

ஜி. ரி. ஞானசேகரவேல்
செயலாளர்
பழைய மாணவர் சங்கம்
யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி

(84009)



# கண்ணீர் அஞ்சலி



## திருமதி விசாலாட்சி இராமலிங்கம்

யாழ்.வேலணை சேர் வை. து. ம. ம. வித்தியாலயம் (வேலணை மத்திய கல்லூரி) பழைய மாணவர் சங்க கொழும்புக் கிளையின் தலைவரும், இளைப்பாறிய சங்கத் திணைக்களப் பணிப்பாளரும், முன்னாள் அதிபர் அமரர் தம்பு ஞாபகார்த்த புலமைப்பரிசில் நம்பிக்கை நிதிய ஸ்தாபகருமாகிய

திரு. இ. சுந்தரமூர்த்தி

அவர்களின் அன்புத் தாயார்

திருமதி விசாலாட்சி இராமலிங்கம்

அவர்கள் 06 - 02 - 2001 இல் நல்லூரில் காலமான செய்திகேட்டு துயரம் அடைந்தோம்.

அன்னாரின் மறைவையிட்டு கல்லூரி பழைய மாணவர் சங்க கொழும்புக் கிளையினர் தமது கண்ணீர் அஞ்சலியைத் தெரிவித்துக்கொள்கின்றனர்.

அன்னாரின் குடும்பத்தவர்க்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அமரரின் ஆத்மா சாந்தியடைய சிவகாமி அம்பாள் சமேத நடராசப் பெருமானைத் தொழுது நிற்போம்.

பழைய மாணவர் சங்கம்,
கொழும்புக் கிளை
யா/சேர். வை. து. ம ம. வித்தியாலயம்,
வேலணை.

(84015)



# ஈராண்டு நினைவஞ்சலி



| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 1954 | 1999 |
| — | — |
| 03 | 02 |
| — | — |
| 24 | 11 |

திருமதி

## மரியா கேமின் சுலோசனா யோசவ்

உம்மை எமக்கு ஈந்தளித்த இறைவன்
தம்முடன் என்றும் வாழ வைக்க
அழைத்துக் கொண்ட ஈராண்டில்
ஆண்டவருடைய இரக்கத்தில்
உம் ஆன்மா சாந்தியடைய இகமதில் பிரார்த்திக்கும்

கணவன், பிள்ளைகள்,
பெற்றோர், சகோதரர்கள்,
உற்றார், உறவினர்.

ஆ. அல்போன்சஸ்
பொந்தி ஒழுங்கை,
பண்டத்தரிப்பு.

(83678)


## பாராட்டுவிழா

யாழ்ப்பாணம், பெப். 11

கவிஞர் இ. முருகையனுக்கு நீர்வேலிச் சமூகம் நயப்புடன் எடுக்கும் பாராட்டுப் பெருவிழா இன்றுஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு அத்தியார் இந்துக்கல்லூரியில் நடைபெறும். (க-10)

## பாலர் பாடசாலை வெள்ளிவிழா

யாழ்ப்பாணம், பெப் 11

பருத்தித்துறை, வியாபாரி மூலை கணபதி பாலர் பாடசாலையின் 25 ஆவது ஆண்டு வெள்ளிவிழா நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு மேலைப் புலோலி சைவப்பிரகாச வித்தியாலய அரங்கில் நடைபெறும். (க-10)

## இன்று 'மந்தான்' வீடியோப் படம்

யாழ். பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகும் திரைப்பட வட்டமும் இணைந்து வழங்கிவரும் திரைப்படத்தொடரில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு சியாம் பெனகலின் 'மந்தான்' எனும் ஹிந்தித் திரைப்படம் புவியியற்றுறை மண்டபத்தில் காண்பிக்கப் படவுள்ளது.

ஆர்வலர்கள் எவரும் கண்டு களிக்கலாம் என புறநிலைப் படிப்புகள் அலகின் இணைப்பாளர் தெரிவித்துள்ளார். (க-10)

## இளைஞன் விடுதலை

யாழ்ப்பாணம், பெப். 11

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்த புத்தூர் இளைஞர் ஒருவர் கடந்த வியாழன் யாழ். நீதிமன்றத்தினால் விடுவிக்கப்பட்டார்.

புத்தூர் மேற்கைச் சேர்ந்த குணரட்னம் குணசீலன் (வயது 22) என்பவரே விடுவிக்கப்பட்டார்.

சட்டமா அதிபரின் உத்தரவுடன் யாழ். நீதிமன்ற நீதிவான் இ. த. விக்னராஜா இவரை விடுதலை செய்தார். (ஜ-59)

## நிவாரண அரிசி பரிசோதனை

வடமராட்சிப் பகுதியில் நிவாரண உலர் உணவுப் பொருள்களை விநியோகிக்கும் தென்மராட்சி, பச்சிலைப்பள்ளி, வடமராட்சிக் கிழக்கு ப. நோ. கூ. கிளைக் கடைகளில் பருத்தித்துறை சுகாதாரப் பிரிவினர் அரிசியைப் பரிசோதித்தனர்.

தரமற்றதாகக்காணப்பட்ட அரிசி விநியோகம் நிறுத்தப்பட்டு அந்த மூடைகள் அப்புறப்படுத்தப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. (க — 117)

## வங்கிப் புத்தகங்கள் கையளிப்பு

யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினரால் 96 ஆம் 97 ஆம் ஆண்டு காலப் பகுதியில் காணாமற்போனோரின் குடும்பங்களைச் சேர்ந்த 25 சிறுவர்களுக்கு வியாழக்கிழமை கைலாசபதி கலையரங்கில் வைத்து வங்கிப் புத்தகங்கள் கையளிக்கப்பட்டன.

ஒவ்வொரு சிறுவர்களுக்கும் மக்கள் வங்கியில் தலா இரண்டாயிரம் ரூபா நிலையான வைப்பிலிடப்பட்ட புத்தகங்கள் கையளிக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பொ. பாலசுந்தரம்பிள்ளையும் கௌரவ விருந்தினராக அருட்தந்தை ஏ.ஐ. பேர்னாட்டும் கலந்து கொண்டு சிறப்புரையாற்றி மாணவர்களின் முயற்சிக்குப் பாராட்டுத் தெரிவித்தனர். (க-6)

# கல்விக் கல்லூரிகளுக்கு அனுமதி பெறுவோர் விவரம்

வவுனியா, பெப். 11

யாழ். மாவட்டத்தில் இருந்து வவுனியா மற்றும் மட்டக்களப்பு கல்விக்கல்லூரிகளுக்கு அனுமதி பெற்றுள்ள மாணவர்களின் விவரங்கள் நேற்றைய உதயனில் வெளியாகியிருந்தன;

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் இருந்து நாட்டின் ஏனைய கல்விக்கல்லூரிகளுக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ள மாணவர்களின் பெயர் விவரம் வருமாறு;-

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் இருந்து மட்டக்களப்பு தேசிய கல்விக் கல்லூரிகளுக்கு முதன்மொழி கற்கைநெறிக்கென எஸ் ஜெயகௌரி (விஸ்வமடு), எஸ். கீதா (உடையார்கட்டு தெற்கு) ஆகியோரும் —

சமூகக்கல்வி கற்கைநெறிக்கென எஸ். மகேந்திரராஜா (விஸ்வமடு), எஸ் கிருஷ்ணகுமார் (விஸ்வமடு) ஆகியோரும் —

கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்டங்களில் இருந்து யாழ். தேசியக் கல்விக்கல்லூரிக்கு சங்கீதத்துறைக்கென எஸ். சிவாஜினி (நெடுங்கேணி), ஆர். விஜயலட்சுமி (கிளிநொச்சி), யூலின் மாசனற் (வவுனிக்குளம்) ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் இருந்து வவுனியா தேசியக்கல்வியியல் கல்லூரிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ள மாணவர்களின் விவரம் வருமாறு:-

எல். சசிக்குமார் (துணுக்காய்), எஸ் ராமக்காந்தன் (புதுக்குடியிருப்பு), ஆர். விஜயநந்தன் (கோணாவில்), பி. எஸ். சசிகரன் (பொக்கணை), எஸ். குருக்குமரன் (புத்துவெட்டுவான்).

ஆர். கிரிஜா (முல்லைத்தீவு), எஸ் விஜயசொரூபி (பூநகரி), ஜே. மரிஸ்ரெலா (எழுதுமட்டுவாள்), பி. விகுகனேஸ்வரி (புதுக்குடியிருப்பு), ஆர். வனஜா (முள்ளியவளை), ஆர். மாலினி (புதுக்குடியிருப்பு), எஸ். பிரசன்னா (கோணாவில்).

எஸ். பவிதா (புதுக்குடியிருப்பு), எஸ். நந்தினி (நெடுங்கேணி), ஆர். இந்திரவதனி (பரந்தன்), எஸ். மகிழ்நங்கை (பரந்தன்), கே. தபோதினி (முல்லைத்தீவு).

எஸ். சதீஸ்குமார் (சிவநகர்), ஈ. ஜெயபாலட்வின் (பூநகரி). (ஐ-7-6-ரி)

# வடமராட்சிப் பாடசாலைகளின் குறைபாடுகள் தீர்க்கப்படும்

## அமைச்சருடன் பேசுவேன் என்கிறார் மாவை.

நெல்லியடி, பெப்11

''வடமராட்சிப் பகுதியில் உள்ள பாடசாலைகளில் நிலவும், குறைபாடுகள் குறித்து கல்வி அமைச்சருக்கு நேரில் எடுத்துக் கூறி நடவடிக்கை எடுப்பேன்.''

இவ்வாறு யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை. சேனாதிராஜா நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் இடம்பெற்ற அதிபர்களுக்கான கலந்துரையாடலின் போது உறுதியளித்துள்ளார்.

இக்கலந்துரையாடல் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

வடமராட்சி கல்விப்பணிப்பாளர் சி. சிவராசா, கரவெட்டிக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ். அம்பலவாணர் உட்பட பாடசாலை அதிபர்கள் பெரும் எண்ணிக்கையில் இக்கலந்துரையாடலில் பங்கு பற்றினார்கள்.

வடமராட்சிப் பகுதியில் இயங்கும் பாடசாலைகளில், தளபாடம், இடநெருக்கடி போன்ற குறைகள் இருப்பதாக அங்கு சுட்டிக்காட்டப்பட்டது. (க—109)

# நுணாவிற்குளம் கண்ணகி ஆலயம் பலத்த சேதம்

தென்மராட்சி, பெப். 11

கைதடி நுணாவிலில் உள்ள நுணாவிற்குளம் கண்ணகை அம்பாள் ஆலயம் விமானக்குண்டு வீச்சினால் பலத்த சேதங்களுக்கு உள்ளாகியுள்ளது. ஆலய மூலஸ்தானம் தவிர்ந்த ஏனைய பகுதிகளான ஆலய மடங்கள், மடப்பள்ளி, மணிக்கோபுரம், ஆலமர விருச்சத்தில் இருந்த நாகதம்பிரான் ஆகியவை பலத்த சேதங்களுக்கு உள்ளாகிக் காணப்படுவதாக அங்கு சென்று திரும்பிய ஆலய பிரதமகுரு தெரிவித்தார்.

இந்த ஆலயத்திற்கு அருகில் உள்ள முருகன் ஆலயம் சேதமின்றிக் காணப்படுகிறது.

ஆலய சூழலில் உள்ள மரங்களும் முறிந்து காணப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-117)

## சிறுவர் பாதுகாப்பு நிதிய ஏற்பாட்டில்

# மாணவர்களுக்கு இடையே திறன் வளர்க்கும் போட்டி

யாழ்ப்பாணம், பெப் 11

சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் ஏற்பாட்டில் யாழ். மாவட்டப் பாடசாலை மாணவர்களுக்கு இடையேயான வலய மட்ட திறன் வளர்க்கும் போட்டிகள் எதிர்வரும் 19 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கு நல்லூர் ஸ்தான சி. சி. த. க. பாடசாலையில் நடைபெறவுள்ளது.

இந்தப் போட்டிகள் ஆரம்பப் பிரிவு, மத்திய பிரிவு, உயர் பிரிவு என மூன்று பிரிவுகளாக நடைபெறும்.

தரம் 1 தொடக்கம் 5 வரையும், தரம் 6 தொடக்கம் 9 வரையும், தரம் 10 தொடக்கம் 13 வரையும் மேற்படி பிரிவுகள் அமையும்.

போட்டிகளில் கதை சொல்லல், கதை எழுதுதல், பாகம் ஆடல் [ROLE PLAY) ஆகியன இடம்பெறவுள்ளன.

பின்வரும்தொனிப்பொருள்களை உள்ளடக்கியதாக கதைகள், பாகம் ஆடல் என்பன அமைய வேண்டும்.

★ சிறுவர் உரிமைகளும் நடைமுறையும்.

★ சமூக முன்னேற்றத்தில் சிறுவர் பங்கு.

★ சிறுவர் நலன்கள்

விண்ணப்பப் படிவங்களை பாடசாலைகள் யாவும் இம் மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் யாழ். கல்வி வலயத்தின் திட்டமிடல் பிரிவில் ஒப்படைக்குமாறு யாழ். வலயக் கல்வி பணிப்பாளர் திருமதி செ. மகாலிங்கம் தெரிவித்தார். (க—10—ரி)

# 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 10 - 03 - 1926

உதிர்வு 11 - 02 - 1999

## திருமதி சற்குணம் கந்தவனம்

திகதி: 11.02.2001

அன்பின் உருவமாய்
ஏழு பிள்ளைகளைப் பெற்றெடுத்த எங்கள் அம்மாவே!
நீயே ஊர் நாயை வீட்டுக்கு வரவணைத்து
உணவு வைத்து உன் உயிரையே கொண்டு விட்டான்.
*உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.*

*விஜி களஞ்சியம்,*
*த.ஜனா*
*பளை நகரம்.*

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

(84054)

# எட்டாம் ஆண்டு நெஞ்சகலா நினைவலைகள்



மண்ணில் 23 - 03 - 1917

விண்ணில் 09 - 02 - 1993

## அமரர் மாணிக்கம் சின்னத்துரை

(தலைவர்)
பராரதி வீதி, பத்தமேனி.

திதி:11.02.2001

பார்பரவு சிவன்சேய் சங்கிலி பைரவர் நிழல்
பரவி நிதம் சுகம் கண்ட அன்புத் தந்தை!

*ஆக்லேன்,*
*உடுவில்.*

மனைவி, மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(C/15258)

# வாழ்த்துகின்றோம்!

கல்வி நிர்வாக சேவை தரம் II க்கு
பதவி உயர்வு பெற்றுள்ள
கோப்பாய் ஆசிரிய கலாசாலை
உடற்கல்வி விரிவுரையாளப் பெருந்தகை
**திரு.வே.கா. கணபதிப்பிள்ளை** அவர்களை
(S.L.E.A.S.II, S.L.P.S.II)
உளமார நீடூழி வாழ வாழ்த்துகின்றோம்!!

விசுவாசமுள்ள
ஆசிரிய மாணவர்கள்,
கோப்பாய். (84032

அனலைத்தாய் பெற்றெடுத்த பெருமகனைப்

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



பண்பில் உயர்ந்த பணியாளரையும்
அன்பினையும் சேவையினையும் தனது
"இரு கண்கள் போல்" பேணி சேவையாற்றும்

## உயர்திரு. வே.பொ. பாலசிங்கம்

அவர்கள் வடக்கு-கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளராக பதவியேற்றிருப்பதைஅறிந்து தாங்கள் பிறந்த மண்ணும், சபையினரும் பெருமகிழ்ச்சி அடைவதுடன் தாங்கள் தமது பணியில் மேலோங்கிவிளங்க எல்லாம் வல்ல அம்பிகையை வேண்டுகின்றோம்.

அனலைதீவு
ஸ்ரீ எழுதுமங்கை நாச்சிமார் மனோன்மணி அம்பாள்
அறங்காவலர் சபையினர் மற்றும்
அனலைதீவு மக்கள். (84047)

## கைதானோர் காங்கேசன் முகாமில்

கடந்தவாரம் கல்வியங்காட்டுச் சந்தியில் வைத்துப் படையினரால் கைது செய்யப்பட்ட இரு இளைஞர் களும் காங்கேசன்துறை தடுப்பு முகாமுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகத்துக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஊர்காவற்றுறை சிவன் கோயிலடியைச் சேர்ந்த மருதப்பிள்ளைறேமன் (வயது 20), யாழ்.புதிய செம்மணி வீதியைச் சேர்ந்த அருமைத்துரை விமலதாஸ்(வயது20) ஆகிய இருவருமே கடந்த புதன்கிழமை தடுப்பு முகாமுக்கு அனுப்பி வைக்கப்பட்டவர்கள் ஆவர். (ஐ-10-ரி)

## விளையாட்டு நிகழ்வுகள்

வலி. வடக்கு,பெப்.11

வலி. வடக்கு பிரதேச செயலர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையேயான - ஆண்களுக்கான - கபடி இறுதிப்போட்டிகள் இன்று மாலை மல்லாகம் ஸ்ரீ பாஸ்கரன் விளையாட்டு மைதானத்தில் நடைபெறும். இறுதி ஆட்டத்தில் மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்கவிளையாட்டுக் கழகத்தை எதிர்த்து அளவெட்டி விநாயகர் விளையாட்டுக்கழகம் மோதும்.

❊ ❊ ❊ ❊

உடுவில் பிரதேச செயலர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையேயான வலைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் ஆட்டங்கள் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி முதல் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளன.

இப் போட்டிகளில் 14 விளையாட்டுக் கழகங்கள் பங்கு கொள்ளவுள்ளன. (உ-86)

## ஒளிப்பதிவு நாடா வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம்,பெப்.11

கொக்குவில நந்தாவில் மனோன்மணி கல்யாண மண்டபத்தில் இன்று பிற்பகல் 3 மணிக்கு சண்முகநாதன் ஜெகனி பாடிய "வரம் தரும் தெய்வீக கீதங்கள்" ஒளிப்பதிவு நாடா வெளியீட்டு விழா இடம்பெறும்.

வாழ்த்துரையை பிரம்ம ஸ்ரீ மா.த. நவீரமணிஐயரும் தலைமை உரையை சண்டிலிப்பாய் பிரதேச செயலர் நா.வேதநாயகனும் சிறப்புரையை ஜோன்சன் ராஜ்குமாரும் நிகழ்த்துவர்.

திருமறைக் கலாமன்ற இசையமைப்பாளர் கு.அற்புதன் இசையமைத்துள்ள இந்த ஒளிப்பதிவு நாடாவின் முதல் பிரதியை யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீட விரிவுரையாளர் டாக்டர் செ.சுநச்சினார்க்கினியன் பெற்றுக் கொள்வார். (க-6)

## வெளிமாவட்ட.....

(9ஆம்பக்கத் தொடர்ச்சி)

(165081டி), (165081ஈ),(165081எவ்), (165081ஜி), (165241ஏ), (167347ஏ), (167347பி), (167814ஏ), (167881ஏ), (167881பி), (167881சி), (167881டி), (168005ஏ), (168042ஏ), (168042பி), (168042சி), (168100ஏ), (168127ஏ), (169557ஏ), (169557பி), (169643ஏ), (169683ஏ), (172183ஏ), (172183பி), (172183சி), (172402ஏ) (172448ஏ), (172448பி), (172448சி), (172448டி), (174250ஏ), (174276ஏ), (174276பி), (174487ஏ), (174487பி), (174487சி), (174556ஏ), (174562ஏ), (174562பி), (174562சி), (174562டி), (174613ஏ), (174613பி), (174613சி), (174613டி), (174647ஏ), (174680ஏ). (174680பி). (174688ஏ), (174688பி), (176051ஏ), (176051பி), (176051சி), (176051டி), (176051ஈ), (176055ஏ), (176110ஏ), (176110பி), (176110சி), (176182ஏ), (176182பி), (176236ஏ). (176275ஏ), (176278ஏ), (176335ஏ), (176341ஏ), (176341பி), (176341சி), (176355ஏ), (176355பி), (176355சி), (176360ஏ), (176360பி), (176391ஏ), (176411ஏ), (176411பி), (176411சி), (176415ஏ), (176415பி), (176478ஏ), (176478பி), (176487ஏ), (176495ஏ), (176495பி), (176497ஏ), (176497பி), (176497சி), (177516ஏ), (177533ஏ), (177533பி), (177537ஏ), (177550ஏ), (177620ஏ), (177620பி), (177620சி), (177636ஏ), (177636பி), (177636சி), (177840ஏ), (177922ஏ), (177940ஏ), (177960ஏ), (180396ஏ), (180415ஏ), (180621ஏ), (181112ஏ), (181115ஏ), (181163ஏ), (181163பி), (181221ஏ).



சர்வதேச அமெச்சூர் மெய்வன்மைச் சம்மேளனத்தின் இலங்கைப் பயிற்சியாளர் சங்கம், யாழ்.மாவட்ட அமெச்சூர் மெய்வன்மைச் சங்கத்தின் அனுசரணையுடன் அண்மையில் யாழ்.மத்திய கல்லூரியில் நடத்திய பயிற்சியாளர்களுக்கான பயிற்சி முகாமில் பங்குபற்றியவர்களுக்கு, அது தொடர்பான நிறைவு நிகழ்வில் கலந்து கொண்ட 51ஆவது படையணியின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் காமினி ஜயசுந்தர சான்றிதழ்களை வழங்கினார். பயிற்சியாளர் ஒருவருக்கு சான்றிதழ் வழங்கும் போது எடுக்கப்பட்ட படம் இது.

# சதுரங்கப் போட்டி

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி உள்ளரங்க விளையாட்டுக கழகம் மக்கள் வங்கி வட வலயத்தின் அனுசரணையுடன் டாக்டர் D.T.நைல்ஸ் ஞாபகார்த்தமாக நடத்துகின்ற திறந்த சதுரங்கப் போட்டி இன்று 11-02-2001 ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் ஆரம்பமாக உள்ளது. (C/15257)

# நீங்கா நினைவில் 5ஆம் ஆண்டு



அன்னை மடியில் 04 - 02 - 1928

அரன் அடியில் 07 - 06 - 1996

## அமரர் தம்பையா - புண்ணியமூர்த்தி

(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

நீரலைகள் கரைதனை
நித்தமும் நீராட்டும் போது
கரைதனில் ஈரம்
கசிந்து நிற்பது போல
நினைவுகள் உங்களை
நித்தமும் மீட்டுமப்பா!
ஆண்டு ஐந்து கரைந்து
அனுதினமும் உங்களன்பை
ஊட்டி நிற்குதப்பா!
பாரினில் உங்கள் குலம்
செழித்து நிற்குதப்பா!
பார்த்தும் உங்களான்மா
சாந்தியடையட்டுமப்பா.
ஓம்சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

*அல்வாய் தெற்கு,*
*அல்வாய்.*

உங்கள் பிரிவால்
துயருறும் குடும்பத்தினர்.

(84049)

# மரண அறிவித்தல்

## திருமதி பொன்னுத்துரை திலகவதி

மட்டுவில் தெற்கு, வேரற்கேணி, கந்தசாமி கோயில் முன்னாள் செயலாளர் முத்தையா பொன்னுத்துரையின் (இளைப்பாறிய ஆசிரியர்) அன்பு மனைவியாகிய திருமதி பொன்னுத்துரை திலகவதி 09-02-2001 அன்று வவுனியாவில் காலமானார்.

அன்னார் இந்திராதேவி சிவராமச்சந்திரன் (இ.போ.ச., பருத்தித்துறை), சந்திராதேவி (பிரான்ஸ்), கலாநிதி (ஆசிரியை, வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயம்), அனுஷியாதேவி (இந்தியா), தயாநிதி (ஆசிரியை, நொச்சிக்குளம் கனிஷ்ட வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தாயாரும் செவ்வந்திராசா (கணக்காய்வாளர், இ.போ.ச. வவுனியா), தேவமனோகரி (ஆசிரியை, சாவகச்சேரி மகளிர் கல்லூரி), தேவன் (பிரான்ஸ்), குகநாதன் (வவுனியா), கமலேந்திரன் (வவுனியா வம்பயர் ஹோட்டல் உரிமையாளர்), ஆகியோரின் அன்பு மாமியும், யோகநாதன் ஆனந்தமலர் (லண்டன்), ஆகியோரின் அன்புச் சகோதரியும், பராசசிங்கம் (சட்டத்தரணி, லண்டன்), திருமதி விசுவலிங்கம், கணபதிப்பிள்ளை (லண்டன்), காலஞ்சென்ற கமலாம்பிகை ஆகியோரின் அன்பு மைத்துனியும், சுஜித்தா, சிவோதயன், மகிழன், குணாளன், சிவஹரீஷன், மஜுந்தினி, தனுஷன் (பிரான்ஸ்), நிருத்திகன், நிர்த்தனன், நிவேதனன், நிரோஷன், நிரந்தரி (இந்தியா) ஆகியோரின் அன்புப் பாட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 11/1, இராசதுரை வீதி, வைரவப்புளியங்குளம், வவுனியாவில் நடைபெறும்.

இந்தத் தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

*க.செவ்வந்திராசா (மருமகன்)*
*தொலைபேசி: 024-20115*
*வவுனியா.*
*(84052)*

தகவல்:
பொ.சிவராமச்சந்திரன்
(மகன்)

குடாநாட்டு அரச ஊழியர்களுக்கு

# 'ரயில்வே வாரண்டு'களுக்குப் பதிலாக விமானப் பயணச்சீட்டு வழங்குங்கள்

## ஜனாதிபதியைக் கோருகிறார் மகேஸ்வரன் எம்.பி.

கொழும்பு,பெப்.11

யாழ்ப்பாணத்துக்கும் இரத்மலானைக்கும் இடையில் பயணம் செய்வதற்கான விமானப் பயணச்சீட்டுக்களுக்குப் பதிலாக 'ரயில்வே வாரண்டுகளை' பயன்படுத்த யாழ்.குடாநாட்டிலுள்ள அரச ஊழியர்களுக்கும் ஓய்வூதியர்களுக்கும் அனுமதி அளிக்கப்படவேண்டும்.

- இவ்வாறு கோரும் கடிதம் ஒன்றை ஐ.தே.கவின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தி.மகேஸ்வரன் ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ளார்.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

அரச ஊழியர்களுக்கான 'ரயில்வே வாரண்ட்' வசதியை யாழ்குடாநாட்டில் உள்ள அரச ஊழியர்களும், அவர்களது குடும்பத்தவர்களும், ஓய்வூதியர்களும் பயன்படுத்த முடியாத நிலையே கடந்த பத்து ஆண்டுகளாக நீடித்து வருகிறது.

ஏனைய இடங்களில் உள்ள அரச ஊழியர்களைப் போன்று 'ரயில்வே வாரண்ட்' பெறுவதற்கான வசதியும் உரிமையும் குடாநாட்டு அரச ஊழியர்களுக்கும் உண்டு. ஆனால்-அதனால்-அவர்களுக்கு எந்தவிதப் பலனும் இல்லை.

தமக்குக் கிடைக்கும் சம்பளத்தைக் கொண்டு, விமான சேவையில் பயணம் செய்வதற்கான ஆறாயிரம் ரூபா கட்டணத்தை அவர்களால் செலுத்த முடியாது.

அத்துடன் யாழ்ப்பாணத்துக்கும் திருகோணமலைக்குமான கப்பல் சேவையும் திருப்திகரமாக இல்லை.

இதனால் அவர்கள் போக்குவரத்துச் செய்வதில் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்கி வருகின்றனர். பலர் தங்கள் மனைவி, பிள்ளைகள், உற்றார், உறவினர்களைச் சந்திக்க முடியாமல் இருப்பதாகவும் நன்மை, தீமைகளில் பங்குபற்ற முடியாமல் இருப்பதாகவும் முறையிட்டுள்ளனர்.

எனவே அரச ஊழியர்கள், ஓய்வூதியர்கள் பயணம் செய்வதற்கு இலவச விமானப் பயணச்சீட்டுக்கள் வழங்கப்படவேண்டும். இந்த விமானப் பயணச்சீட்டுக்களுக்குப் பதிலாக 'ரயில் வாரண்டு'களை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

இதற்கான உத்தரவைத் தாங்கள் சம்பந்தப்பட்ட அமைச்சுக்களுக்கு விடுக்க வேண்டும். மனிதாபிமான அடிப்படையிலான இந்தக் கோரிக்கையைத தாங்கள் ஏற்று செயற்படுத்துவீர்கள் என நம்புகின்றேன்.- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-ம)

## மாணவரை சமுகமளிக்கக் கோரிக்கை

தென்மராட்சி,பெப்.11

சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து அதற்கான கொடுப்பனவைப் பெறும் மகளிர் கல்லூரி மாணவர்கள் அனைவரும் எதிர்வரும் 19 ஆம் திகதி திங்கட்கிழமைக்கு முன்னர் - கரவெட்டி ரலன்ற் கல்வி நிலையத்திற்கு சமுகம் தருமாறு அதிபர் திருமதி சி.சிவநாதன் அறிவித்துள்ளார்.

(ஜ-117-31)

விற்பனைக்கு அதிநவீன கணனிகள்
Pentium III 800 MHz (Multimedia)
கையடக்கமான LAPTOP (TOSHIBA) கணனிகள், PRINTERS, UPS etc.
* நவீன தொழில் நுட்பத்துடன் கூடிய அதிநவீன கணனிகள் நியாயமான விலைக்குப் பெற்றுக் கொள்ளலாம்.
* கணனிப் பாவனைக்கான ஆலோசனையும், அடிப்படைப் பயிற்சியும் இலவசம்.
* கணனிகளன் சீரான பராமரிப்புக்கான, விற்பனைக்கு பிந்திய சேவையுடன் கணனிகள், கணனிக்கான உதிரிப்பாகங்களைப் பெற்றுக் கொள்ள!
IIS SALES UNIT
100,Clock Tower Road, Jaffna.
☎2831 E.Mail-iis@sltnet.lk
(C/15221)

கைகொடுத்தல் நிதி
காணாமல் போனவர்களின் குடும்பங்களைச் சேர்ந்த சிறார்களின் எதிர்கால கல்விக்கு கைகொடுக்கும் திட்டம்.
உயிர் விசை
(நாடக ஆற்றுகை)
முகாமைத்துவ கற்கைகள்,வணிக பீட மாணவர் ஒன்றியம்.
ராஜா சினிமா
இல.70,71A நவீன சந்தை (உட்புறம்) யாழ்ப்பாணம்.

### பரிசளிப்பு விழா

வலி மேற்கு,பெப்.11

வட்டுக்கோட்டை பிளவத்தை அமி.த.க பாடசாலை, திருநாவுக்கரசு மத்திய மகாவித்தியாலயம் ஆகிய பாடசாலைகள் இணைந்து நடத்தும் வருடாந்தப் பரிசளிப்பு விழா வட்டு பிளவத்தை அ.மி.த.க. பாடசாலை மண்டபத்தில் நாளை திங்கட்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அதிபர் க.நடராசா தலைமையில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் கலாநிதி நா.தணிகாசலம்பிள்ளையும் சிறப்பு விருந்தினர்களாக வலி மேற்குப் பிரதேச சபைத் தலைவர் ந.திரிலோகநாதனும் சங்கானைக் கோட்டக்கல்வி அதிகாரி சி.செல்லையாவும் கலந்து கொள்வர்.

(க-175)

### களனிப்பல்கலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கழக வளவினுள் பிரவேசிக்கக் கூடாது எனவும் -

துணைவேந்தர் நேற்று உத்தரவு பிறப்பித்தார்.

சம்பவம் தொடர்பான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இரு மாணவர் குழுக்களுக்கிடையே ஏற்பட்ட மோதலையடுத்து கடந்த மாதமும் இரண்டு தடவைகள் மேற்படி பல்கலைக்கழகம் மூடப்பட்டமை தெரிந்ததே.

(ம-7)

### பொருளாதார...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களைக் கொண்ட ஒரு கண்காணிப்பாளர் குழு இங்கு வந்திருந்தது. ஆனால் இவர்களைத் தமது கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குள் அனுமதிக்க விடுதலைப்புலிகள் மறுத்ததை அடுத்து அவர்கள் கொழும்பு ஹில்டன் ஹோட்டலில் தங்கி நீச்சல் குளத்தில் தமது நேரத்தைச் செலவிட்டனர். அவர்கள் வருகையால் எந்தப் பயனும் ஏற்படவில்லை- என்றும் அவர் அந்தப் பேட்டியில் சுட்டிக்காட்டியுள்ளார். (உ-ம)

### புலிகளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குடன், ஸ்ரீலங்கா அரசுடன் அரசியல் பேச்சுக்களை நடத்துவதற்கான தனது விருப்பத்தையும் ஆவலையும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் வெளிப்படுத்தியிருக்கும் இவ்வேளையில் -

ஸ்ரீலங்கா தீவுடன் சரித்திர மற்றும் அரசமைப்புத் தொடர்புகளைக் கொண்ட மேன்மை மிக்க தங்கள் நாடு தமிழீழ விடுதலைப் புலிகளைத் தடை செய்வது, இந்தச் சமாதான முயற்சிகளுக்குப் பேரிடியாக வீழ்ந்து அதனை நலிவுறச் செய்துவிடும் என்று, நாடாளுமன்றத்திலும் வெளியிலும் தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பத்துத் தமிழ்க் கட்சிகளாகிய நாங்கள் கருதுகின்றோம்.

- இப்படி அந்தத் தீர்மானத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.(உ)

இறுதிப்பிரிவு!
விஞ்ஞானம்
O/L 2001,GR.10
குடாநாட்டில் மீண்டும்
குமரன்
GROUP CLASS
☐ மாணவர்கள் தமது பெயர்களை பதிவு செய்து கொள்ளலாம்.
☐ 5 மாணவர்கள் சேர்ந்தவுடன் வகுப்பு ஆரம்பமாகும்.
54, இராசாவின் தோட்டம், யாழ்ப்பாணம். (83916)

## மன்னாரில் ஐந்து நாள்களில் 25 தமிழ் இளைஞர்கள் கைது

மன்னார்,பெப்.11

மன்னார் மாவட்டத்தில் ஐந்து நாள்களில் 25 தமிழ் இளைஞர்கள் ஸ்ரீலங்கா கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளதாக அவர்களின் உறவினர்களால் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பெப்ரவரி முதலாம் திகதி தொடக்கம் 5 ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் விடத்தல்தீவு மற்றும் இலுப்பைக்கடவைப் பகுதிகளைச் சேர்ந்த தமிழ் இளைஞர்களை கடற்படையினர் சந்தேகத்தின் பேரில் கைது செய்து அழைத்துச் சென்றதாக உறவினர்களது முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை -

கைது செய்யப்பட்ட இளைஞர்கள் எங்கே தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்ற விவரம் கூட இதுவரை அறிவிக்கப்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது. (உ-6)

### உள்ளூராட்சி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நகர சபைகள் மற்றும் பிரதேச சபைகளுக்கு தலா 5 லட்சம் ரூபா மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்து வடக்கு, கிழக்கு மாகாண சபை கடந்த வெள்ளிக்கிழமை அவசர கடிதம் ஒன்றும் சமபந்தப் பட்ட சபைகளுக்குத் திடீரென அனுப்பி வைத்துள்ளது.

கடந்த காலங்களைப் போலவே இந்த வருடமும் தமக்கு நிதி ஒதுக்கப்படும் என்ற எதிர்பார்ப்புடன் பல அபிவிருத்தித் திட்டங்களைத் தயாரித்திருந்த உள்ளூராட்சி மன்றங்கள் வடக்கு - கிழக்கு மாகாண சபையின் இந்தத் திடீர் முடிவினால் அதிர்ச்சியடைந்துள்ளன.

(உ-6)

### வன்னி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்து தருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

குடாநாட்டிலிருந்து வெளியிடங்களுக்கோ வெளியிடங்களில் இருந்து குடாநாட்டுக்கோ மரண வீடு போன்ற அவசிய நிகழ்வுகளுக்குச் செல்பவர்கள் அவசர பயண ஏற்பாடுகளைச் செய்வதற்கும் தன்னுடன் தொடர்பு கொள்ளலாம் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

தேவையானோர் தமது பக்ஸ் அல்லது தொலைபேசி இலக்கம், பிரயாணம் செய்ய வேண்டிய திகதி, திரும்பும் திகதி ஆகியவற்றை அறியத்தந்தால் பிரயாண ஏற்பாடுகள் செய்து தர நடவடிக்கை எடுக்கப்படும என்றும் அவர் கூறினார். (உ-ம)

## படையினரின் சூட்டுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யினர் ஊரடங்கு வேளையில் ஒருவர் தம்மை நோக்கி வருவதை அவதானித்து அவரை நிற்குமாறு உத்தரவிட்டனர்.

ஆனால் படையினரின் அறிவுறுத்தலைப் பொருட்படுத்தாமல் அந்த நபர் அவர்களை நோக்கி வந்து கொண்டிருந்தார். இதனை அடுத்து படையினர் அவரை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

பின்னர் தேடுதல் நடத்திய படையினர் அந்த இடத்தில் இருந்து சிறுவன் ஒருவனது சடலத்தைக் கண்டெடுத்தனர். அது மகேஸ்வரன் சுபாஷ்கரன் என்பவருடையது என்று பின்னர் அடையாளம் காணப்பட்டது.

உயிரிழந்த சிறுவன் காதுகேளாதவன் என்றும் அயலில் உள்ள வீட்டில் படம் பார்த்துவிட்டு வீடு திரும்பிக்கொண்டிருந்தான் என்றும் அவனது தந்தை படையினரிடம் தெரிவித்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக அச்சுவேலிப் பொலீஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர் - என்று உள்ளது. (ம-178-15)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

மண்ணில் 21 - 12 - 1920



விண்ணில் 13 - 01 - 2001

### திருமதி தம்பித்துரை இரத்தினம்மா

எமது குடும்பத் தலைவியின் வீட்டுக்கிருத்தியம் இன்று (11.02.2001) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் நிகழவிருக்கும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் தங்களையும் தங்கள் குடும்பத்தினரையும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

*காங்கேசன்துறை வீதி,*
*கோண்டாவில்.* (83941)

மகன் த.சிவராஜா (ராஜா)

## மரண அறிவித்தல்

### யோகநாதன் விதுஷா

மாலுசந்தியைச் சேர்ந்த யோகநாதன் விதுஷா நேற்று (10.02.2001) சனிக்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் யோகநாதன் - இராஜேஸ்வரி தம்பதிகளின் அன்பு மகளும், தாரணி, சிந்துஷன், மதுஷன் ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.02.2001) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வதிரி ஆலங்கட்டை மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*'அன்னதாரகை'*
*மாலுசந்தி,*
*கரவெட்டி.* (84053)

தகவல்:
கி.பரமதாஸ்
(மாமன்)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 11.02.2001இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.